
# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 354 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 29, திங்கட்கிழமை 14.11.2016



## இன்று 'சுப்பர் மூன்'

கொழும்பு, நவ.14
இலங்கை வான்பரப்பில் இன்று பெரு முழு நிலவு காணப்படும் என்று கொழும்பு வானிலை ஆராய்ச்சி மைய நிலையம் தெரிவித்தது.
'சுப்பர்மூன்' எனப்படும் பெரு முழு நிலவு என்பது நிலவுக்கும் பூமிக்கும் இடையிலான தூரம் சராசரியாக இருப்பதை >> 23

## புதிய அரசமைப்பு குறித்த
# உப குழுக்களின் அறிக்கை நவ. 19 இல்

### இடைக்கால வரைவு டிசெம்பரில் ஜனவரியிலேயே விவாதம்

யாழ்ப்பாணம், நவம்பர் 14
புதிய அரசமைப்புத் தொடர்பில் உப குழுக்களின் அறிக்கை எதிர்வரும் 19ஆம் திகதியும், வழி நடத்தல் குழு வின் அறிக்கை டிசெம்பர் மாதம் 10ஆம் திகதியும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளன. இவை மீதான விவாதம் ஜனவரி மாதமே நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக நாடாளுமன்றம் கடந்த மார்ச் மாதம் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. இதன் பின்னர் நாடாளுமன்றத்தில் >> 21

## இறங்கி வந்தார் சீனத் தூதுவர்

### கொழும்பு அரசிடம் வருத்தம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 14
அண்மையில் தாம் வெளியிட்ட கருத்துக்கள் இலங்கை அரசுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தால் அதற்காக வருத்தம் தெரிவிப்பதாக சீனத் தூதுவர் >> 21

## சீனத் தூதுவருடன் ரணில் திடீர் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 14
இலங்கை அரசுக்கும் - சீனாவுக்கும் இடையில் இராஜதந்திர முறுகல் ஏற்பட்டுள்ள நிலையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் - சீனத் தூதுவருக்கும் இடையில் அம்பாந்தோட்டையில் நேற்றிரவு திடீர் சந்திப்பு நடைபெற்றது. >> 21

## கீரிமலைக் கேணியில் மூழ்கி நேற்று ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,நவ.14
கீரிமலைக் கேணியில் குளித்துக் கொண்டிருந்தவர் அதில் மூழ்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டு அவரது சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்திய >> 21

## முச்சந்தி முரளி



வீணையின் சுருதி அடங்கப் போகுது என்றியளோ....

## அட்டூழியம் புரியும் தேரரை உடனே அகற்றவேண்டும்

யோகேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு விகாராதிபதி சுமணரத்ன தேரரின் கொடுமைகள் தாங்க முடியவில்லை. இனமுறுகலை ஏற்படும் வகையில் செயற்படும் அவரை இந்த மாவட்டத்தை விட்டு வெளியேற்ற வேண்டும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் வலியுறுத்தினார். (விரிவு பக்.8)

## உட்கட்சிப் பூசல் ஈ.பி.டி.பிக்குள் உச்சம்

### தவராசாவை நீக்க டக்ளஸ் முயற்சி விடமாட்டேன் என அவரும் விடாப்பிடி

யாழ்ப்பாணம், நவ. 14
ஈ.பி.டி.பி கட்சிக்குள் உட்பூசல் உச்சம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்தக் கட்சியின் நீண்ட கால உறுப்பினரும் கட்சிக்குள் செல்வாக்கு மிக்கவருமான தவராசாவைக் கட்சியிலிருந்து நீக்க மறைமுகமாகத் தீட்டப்படும் திட்டத்தினாலேயே ஈ.பி.டி.பி. கட்சிக்குள் முரண்பாடு ஏற்பட்டது என்று கட்சிவட்டாரங்கள் தெரிவித்தன.
வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவுக்குத் தெரியாமலேயே அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீரவிடம், ஈ.பி.டி.பியின் செயலாளரும் நாடாளுமன்ற >> 21

## ஆஸி. சென்றோருக்கு அமெரிக்காவில் வாழ்வு

யாழ்ப்பாணம், நவ. 14
ஆஸ்திரேலியாவில் புகலிடம் தேடிச் சென்று, நௌரு மற்றும் மனுஸ் தீவில் உள்ள முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயிரத்து 800 ஏதிலிகள், அமெரிக்காவில் குடியேற்றப்படவுள்ளதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி >> 23

## பௌத்தத்தை வடக்கில் பாதுகாக்கவேண்டும் அரசு

### வலியுறுத்துகிறார் மகிந்த



கொழும்பு, நவ. 14
வடக்கு, கிழக்கிலுள்ள பௌத்தர்களையும், பௌத்த அடையாளச் சின்னங்களையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று >> 23

## மனைவி, இரண்டு மகள்கள் கோரமாக வெட்டிக்கொலை

### கணவன் வெறியாட்டம்; திருமலையில் பயங்கரம்





திருகோணமலை, நவ. 14
திருகோணமலை, கிண்ணியா-கிளிகுஞ்சுமலைப் பகுதியில் தாயும் இரண்டு பெண் பிள்ளைகளும் நேற்றுச் சரமாரியாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களை அவர்களது குடும்பத் தலைவரே வெட்டிக் கொலை செய்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டதை யடுத்து ஊரவர்களின் உதவியுடன் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.
குடும்பத்தலைவியான கே. நித்தியா (வயது-32), மகள்மாரான காயத்திரி (வயது-10), சந்தியா (வயது - 8) ஆகியோரே இவ்வாறு வெட்டிக் கொல் >> 21

## மாணவர்களுக்கான இலவச 'ரப்'
## ஆபாசப் படங்களை தடுக்க மென்பொருள்

கொழும்பு, நவ. 14
பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 'ரப்'களில் சமூகச் சீரழிவுக்கு வழிவகுக்கும் இணையத் தளங்களைப் பார்வையிட முடியாதவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்தது.
இது தொடர்பில் சிறப்பு >> 23

## வடக்கு முதலமைச்சர் உறுதிமொழி தராததால் போராட்டம் தொடரும்

### சுகாதாரத் தொழிலாளர்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 14
வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரதிநிதிகளுக்கும், போராட்டத்தை முன்னெடுத்துள்ள யாழ். மாநகர சபை சுகாதாரத் தொழிலாளர்களின் >> 21

## இராணுவம் நிறுவும் விகாரைகளையே அகற்றக் கோருகின்றனர் தமிழ் மக்கள்


### சிறிதுங்க ஜெயசூரிய தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 14
நயினாதீவில் உள்ள விகாரையையோ அல்லது அரியகுளத்தில் அமைக்கப்பட்டுள்ள விகாரையையோ அகற்றுமாறு தமிழ் மக்கள் கோரவில்லை. இராணுவத்தினரின் உதவியுடன் சிங்கள மக்கள் இல்லாத பிரதேசங்களில் அமைக்கப்படும் விகாரைகளையே அகற்ற வேண்டும் என்று தமிழ் மக்கள் கோருகின்றனர். இவ்வாறு ஐக்கிய >> 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கு பஸ் வண்டி வழங்குமாறு கோரிக்கை

வவுனியா, நவ.14
வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலயத்துக்கு பஸ் வண்டி வழங்குமாறு பாடசாலை நிர்வாகத்தினர் இந்திய துணைத் தூதுவர் ஆ.நடராஜனிடம்




வேண்டுகோள் விடுத்தனர்.

வவுனியா கனகராயன் குளம் மகா வித்தியாலயத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்ற யாழ். இந்திய துணைத்தூதுவர் ஆ. நடராஜன் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் ஒற்றை மேற்கொண்டார். அவரிடம் பாடசாலையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்து கூறப்பட்டது. பிரச்சினைகளைக் கேட்டறிந்த துணைத் தூதுவர் பாடசாலையின் நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை வழங்கினார். பாடசாலையின் இசைத்துறை வளர்ச்சிக்கு இசைக் கருவிகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தமது பாடசாலைக்கு பஸ் வண்டியொன்றை வழங்குமாறும் சுத்திகரிக்கப்பட்ட நீர் பெறுவதற்கான இயந்திரம் ஒன்றை வழங்குமாறும் இந்திய துணைத் தூதுவரிடம் பாடசாலை நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்தனர். மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட பின் உதவியளிக்கப்படும் என்று துணைத் தூதுவர் குறிப்பிட்டார்.(ற-21,402)



# குப்பை மேடாக காட்சியளிக்கும் யாழ். மாநகரம்

## நடவடிக்கை எடுக்காது இருக்கும் வடக்கு உள்ளூராட்சி அமைச்சு மீது குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 14
யாழ். மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் கடந்த 7 நாள்களாக மேற்கொண்டு வரும் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, யாழ். நகரமே குப்பை மேடாகக் காணப்படுகின்றது. மழையும் இடையிடையே பெய்வதன் காரணமாக சுகாதாரச் சீர்கேடுகளும் அதிகரித்துள்ளது. நகரில் மக்கள் மூக்கைப் பொத்தியவாறு நடமாடும் நிலையே உருவாகி வருகின்றது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்த விடயம் தொடர்பில் அக்கறை காண்பிக்கவில்லை என்று சுகாதாரத் தொழிலாளர்களும், நகர மக்களும் குற்றம் சுமத்துகின்றனர்.

குப்பைகளை அகற்றுவதற்கு உள்ளூராட்சி அமைச்சு எதுவித ஏற்பாடுகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை. தொழிலாளர்களின் போராட்டத்தை நிறைவுக்குக் கொண்டு வருவதற்கு அக்கறையும் காண்பிக்கவில்லை என்று நகர மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

யாழ். மாநகர சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள் கடந்த 7 ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர். 127 சுகாதாரத் தொழிலாளர்களின் நிரந்தர நியமனத்தை வலியுறுத்தியே வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கப்பட்டது.

போராட்டத்தின் காரணமாக யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட எந்தப் பகுதிகளிலும் குப்பைகள் அகற்றப்படவில்லை.

மையப் பேருந்து நிலையம் மற்றும் அதன் சுற்றுப் புறத்திலுள்ள நகர வர்த்தக நிலையங்களின் குப்பைகள், உணவகங்களின் கழிவுப் பொருள்கள், நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளிலுள்ள மக்களின் வீட்டுக் கழிவுகள், சந்தைக் கழிவுகள், இறைச்சிக் கழிவுகள் என்பன அகற்றப்படவில்லை. இவை வீதிகளில் குவித்து வைக்கப்படுகின்றன.

யாழ். மாநகர சபையினால் வீதிகளில் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளும் குப்பைகளால் நிரம்பி வழிகின்றன. அவையும் அகற்றப்படவில்லை. இந்தக் குப்பைகளை நாய்கள் வீதிகளில் இழுத்து விடுவதால், வீதி முழுவதுமே குப்பைகள் பரவிக் காணப்படுகின்றன. இடையிடையே மழையும் பெய்வதால் குப்பைகள் நாற்றம் எடுக்கத் தொடங்கியுள்ளன.

ஒரு வாரமாக நகரில் சேர்ந்த குப்பைகள் நகரை குப்பை மேடாக்கியுள்ளது. இதனை அகற்றுவதற்கு யாழ். மாநகர சபை நிர்வாகமோ அதற்குப் பொறுப்பான வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சோ எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வடக்கு மாகாண முதலமைச்சரும், உள்ளூராட்சி அமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரனிடம் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப் போகின்றீர்கள் என்று மின்னஞ்சல் ஊடாக நேற்று முன்தினம் எழுப்பிய கேள்விக்கு நேற்று மாலை வரையில் அவர் பதில் வழங்கவில்லை. (வ-5-7)

# கலைமாணி, வணிகமாணி பெறுபேறுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், நவ. 14
யாழ்.பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி அலகினால் இந்த வருடம் நடத்தப்பட்ட கலைமாணி மற்றும் வணிகமாணி பரீட்சைப் பெறுபேறுகளை நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம் என்று அதன் பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் தெரிவித்தார்.

புதிய மற்றும் பழைய பாடத் திட்டத்துக்குட்பட்ட கலைமாணி மற்றும் வணிகமாணி பரீட்சைப் பெறுபேறுகளும், பட்டம் பெறுவோர் பட்டியலும் வெளியாகியுள்ளதாக அவர் கூறினார். (வ-10)

# பட்ஜெட் குறித்து கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.14
நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2017ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வரி மாற்றங்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பான கருத்தரங்கு யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர் என்று அதன் தலைவர் கு. விக்னேஷ் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கு இலக்கம் 177, 179, 181சி மின்சார நிலைய வீதியில் உள்ள ஹற்றன்நஷனல் வங்கி மேற்றரக் கிளை மண்டபத்தில் நாளை செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியில் இருந்து 12.00 மணி வரை இடம்பெறும் என்று குறிப்பிட்ட அவர், ஆர்வம் உள்ளவர்களை கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். (வ-7)

# 4 தமிழ் நீதிவான்களுக்கு ஜனவரி முதல் இடமாற்றம்

கொழும்பு, நவ.14
வருடாந்த இடமாற்ற நடைமுறையின் கீழ் 70 நீதிபதிகள் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இடமாற்றம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடை முறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டது. இதில் தமிழ் நீதிவான்களுக்கும் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்ற நீதிவான் திருமதி ஜீவராணி கருப்பையா, யாழ்ப்பாண மேலதிக நீதிவானாகவும், கொழும்பு நீதிமன்ற நீதிவான் ரி. சர்வனந்தராஜா அவிசாவல நீதிவானாகவும், இரத்தினபுரி மேலதிக நீதிவான் ஆர்.எஸ்.எம். மகேந்திரராசா நீர்கொழும்பு மேலதிக நீதிவானாகவும், அக்கரைப்பற்று மாவட்ட நீதிபதி திருமதி நளினி கந்தசாமி பருத்தித்துறை நீதிவானாகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (வ)

# வானொலிக்குள் கைக்குண்டு; சந்தேகத்தில் இளைஞன் கைது

வவுனியா, நவ. 14
வவுனியா லக்சபான வீதியில் வானொலிப் பெட்டியினுள் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தில் இளைஞன் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா லக்சபான வீதியில் அமைந்துள்ள இலத்திரனியல் உபகரணங்கள் திருத்தும் நிலைய நடத்துநர் சில வாரங்களுக்கு முன் பழைய பொருள்கள் விற்பனை செய்யும் நபர் ஒருவரிடமிருந்து சிறிய வானொலி ஒன்றைக் கொள்வனவு செய்தார். அதனைக் கடந்த வெள்ளிக் கிழமை திருத்துவதற்காக கழற்றியபோது, அதனுள் கைக்குண்டு இருந்தமையை அவதானித்த உரிமையாளர், உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்தார். சம்பவ இடத்திற்குச் சென்ற வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு கைக்குண்டை எடுத்துச் சென்றிருந்தனர்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டிருந்த பொலிஸார், அந்த வானொலியை விற்பனை செய்த வவுனியா ஆச்சிபுரத்தை சேர்ந்த 27வயதுடைய இளைஞனை கைது செய்தனர். அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அதன்போது குப்பையிலிருந்து குறித்த பொருளை எடுத்து விற்றுள்ளதாக சந்தேகநபர் ஆரம்ப விசாரணையில் தெரிவித்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

# கவனிப்பார் அற்றுக் காணப்படும் கிளிநொச்சி பொருளாதார வலயம்



கிளிநொச்சி, நவ.14
கிளிநொச்சி பொருளாதார வலயம் பற்றைகள் வளர்ந்தும் அதன் கதவுகள் பிடுங்கி எறியப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றது.

2013ஆம் ஆண்டில் மகிந்த அரசின் நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி பொருளாதாரம் வலயக் கட்டடப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. தம்புள்ளை பொருளாதார வலயம் போன்று இது முன்னேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் கட்டடப் பணிகள் நிறைவடைந்து நீண்ட [illegible] இப்போது இந்தப் பொருளாதார மையம் சீரழிந்த நிலையில் காணப்படுவதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்த பொருளாதார வலயம் இயங்குமானால் கிளிநொச்சி மாவட்டம் பொருளாதார ரீதியாக பெரும் முன்னேற்றம் அடையும் எனவும், கட்டி முடிக்கப்பட்ட ஒரு கட்டடம் திறந்து வைக்கப்படாத நிலையில் அழிவடையும் ஒரு நிலையமாக தற்போது காட்சியளிக்கின்றது எனவும் மக்கள் கவலை வெளியிட்டனர். (வ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் உடைமைகளைக் காக்க கடற்கரையோரத்தில் மின் விளக்கு

## தியோகுநகர் மக்களுக்கு ரவிகரன் உறுதி

முல்லைத்தீவு, நவ.14
முல்லைத்தீவு, கரை துறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட தியோகுநகர் கடற் கரையில் மீனவர்களின் தொழில் உடைமைகளின் பாதுகாப்புக்கு கடற் கரைக்கான மின்விளக்கு கள் அடுத்த ஆண்டு பொருத்தப்படும்.
இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவி கரன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு - வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் மக்கள் குறைகேள் சந் திப்பொன்று தியோகு நகர் பொது நோக்குமண்ட பத்தில் கடந்த வெள் ளிக்கிழமை இடம்பெற் றது.
அதில் கலந்துகொண்டகிரா மத்து மக்கள் தியோகுநகர் கிராமக் கடற்கரையில் மீனவர்களின் தொழில் உடைமைகளின் பாதுகாப் புக்கு மின் விளக்குகள் வழங்குதல், கிராமத்தின் உள்வீதிகள் புனரமைத் தல், விளையாட்டு கழகங் களுக்கான உதவி, பாட சாலைக்குச் செல்லும் மாண வர்களுக்கான மிதிவண்டி கள் மற்றும் பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்க ளுக்கு வாழ்வாதார உதவி கள் வழங்குதல் எனப் பல்வேறு குறைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.
மிகவும் பின்தங்கிய நிலை யிலுள்ள இவ்வூரின் தேவைகள் பற்றி நான் அறிவேன். உங்களு டைய பிரதிநிதிகள் ஏற் கனவே தொடர்பு கொண் டுள்ளார்கள். மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு நாற்காலிகள், மீனவர் 7 பேருக்கு தலா இரு வலை கள், வாழ்வோம் - வளம் பெறுவோம் திட்டத்தில் பன்னிருவர்க்கு அரிசி ஆகியன வழங்கப்பட்டுள் ளன. அத்தோடு அடுத்த ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதியொதுக் கீட்டின் ஊடாக கடற்கரைக் கான மின்விளக்குகள் பொருத்தப்படும். பாட சாலைக்குச் செல்லும் மாணவர் பதினைந்து பேருக்கு மிதிவண்டிகளை யும் வழங்குவதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளது. ஒத் துழைப்பின்றி வறுமை யால் இடர்ப்படும் குடும்பங் கள், தொடர்ந்தும் வாழ் வோம் - வளம் பெறுவோம் செயற்றிட்டத்தில் உள் வாங்கப்படுவர் - என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் அதன்போது தெரிவித்தார். (ந-21)

# அநாகரிகமாகச் செயற்படும் பிக்கு மீது நடவடிக்கை தேவை

## முன்னாள் எம்.பி. அரியநேத்திரன் வலியுறுத்து

மட்டக்களப்பு, நவ.14
காவி உடை தரித்த மட்டக்களப்பு மங்க ளராம விகாரையின் புத்தபிக்கு அம் பிட் டிய சுமணரத்தன தேரரின் காட்டுமிராண்டித் தனத்தை வன்மையாகக் கண்டிக்கின் றேன். அநாகரிக புத்த பிக்கு மட்டக்களப்பு மாவட்டத்துக்கு சாபக்கேடு.
இவ்வாறு மட்டக்களப்புமாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரிய நேத்திரன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு மங்களராம விகாரையின் புத்த பிக்கு நடந்து கொண்ட விதத்தைக் கண்டித்து விடுத்துள்ள ஊடக அறிக்கை யிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவின் பட்டிப்பளைப் பகுதியில் பிரதேச செயலா ளர், கிராமஅலுவலர், காரியாலய அலு வலர்கள் ஆகியோர் அங்கு சென்ற போது காவி உடையை போர்த்திய அநாகரிக புத்த பிக்குவான அம்பிட்டிய சுமணரத்ன தேரர் மிகவும் கீழ்த்தரமான வார்த்தை களால் திட்டித் தீர்த்தார்.
அத்துமீறிக் காணி அபகரிப்பு செய்வ தைத் தடுக்கும் விதத்தில் நேரடியாகப் பார்வையிட சம்பந்தப்பட்ட உத்தியோ கத்தர்கள் அங்கு சென்ற போதே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. அந்த இடத்தில் கடமையில் நின்ற மங்களோயா பொலிஸார் வேடிக்கை பார்த்து நின்றனர்.
இந்த புத்த பிக்கு ஏற்கனவே பல தட வை கள் 2014 இல் பட்டிப்பளை பிரதேச செயல கத்தில் அத்துமீறிப் பிரவேசித்து பிரதேச செயலாளரைத் தாக்க முயன்றார். இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கும் பதிவு செய்யப்பட்டது. மட்டக்களப்பு மாவட் டத்தில் காக்கி உடை தரிக்காத இராணுவ அதிகாரி போன்று இவர் காவி உடை தரித்து தமிழ் மக்கள் மீது இனவாதத் தைக் கட்டவிழ்த்துள்ளார்.
இவ்வாறான இனவாத புத்த மத குருவின் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் அனு மதிக்க முடியாது. நல்லாட்சி அரசு இவ ரின் செயற்பாடுகளுக்கு எதிராக சட்ட நட வடிக்கை எடுப்பதுடன் இந்தப் புத்த பிக் குவை மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்ய சம்பந்தப்பட்ட பௌத்த மத நிறுவனம் முன் வர வேண்டும் - என்றுள்ளது. (ற)

# காபன் வரி விதிப்பு பொருத்தமற்றது

## அஜித் பி. பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, நவ. 14
அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் அறி முகம் செய்யப் பட்டுள்ள காபன் வரி பொருத்த மற்றது என்று மின்சக்தி எரிசக்தி பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.
அதிகமானோர் இந்தப் புதிய வரி தொடர்பில் விளக்கமில்லாது காணப்படுவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.
இலத்திரனியல் வாகனங்களுக்கு இந்தக் காபன் வரி பொருத்த மற்றது. காபன் வரி தொடர்பான கட்டண விவரம் எதிர்வரும் நாள்களில் பகிரங்கப்படுத் தப்படும்.
இதற்கு முன்னர் வாகனங்களுக்கு செலுத்தப்பட்டு வந்த புகைவரி இந்த காபன் வரி அறிமுகத்துடன் நீக்கப்படும் என்று பிரதி அமைச்சர் தெரிவித்தார். (வ-4)

# பருசங்குளம் அணைக்கட்டு ரூ.7 மில். செலவில் சீரமைப்பு

நெடுங்கேணி பருசங்குளம் அணைக்கட்டு, நீர்ப்பா சன வாய்க்கால் 7மில் லியன் ரூபா செலவில் சீர மைத்துக் கொடுக் கப்பட் டுள்ளன. இதனால் 70 குடும்பங்களுக்கு மேல் விவசாய நடவடிக்கை ளில் ஈடுபடமுடியும்.
இவ்வாறு வவுனியா மாவட் டகமநல சேவை உதவிப் பணிப்பாளர் இ.விஜயகு மார் தெரிவித்தார்.
உடைப்பெடுத்து நீண்ட காலமாகத் திருத்தப்படா மல் இருந்த பருசங்குளம் மற்றும் உடைப்பெடுத்த குளங்கள் சீரமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 7 மில்லியன் ரூபா நிதியில் சீரமைக்கப்பட்டது. தற் போது 70 குடும்பங்கள் விவசாய நடவடிக்கை களை மேற்கொண்டு அவர்கள் தங்களுடைய வாழ்வாதா ரத்தை மேம் படுத்த முடியும். குளத்தின் கீழ் உள்ள சில காணிகள் சீர் செய்து கொடுக்க வேண்டி உள்ளது. அவை யும் விரை வில் சீர் செய்து கொடுக்கப்படும் - என் றார். (ந-7)

# வசதி குறைந்த மாணவர்களுக்கான உதவிகளை அதிகரிக்க வேண்டும்

## வவுனியா பிரதேச செயலாளர் சுட்டிக்காட்டு

வவுனியா, நவ.14
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வசதியான மற்றும் அரச ஊழியர்களின் பிள்ளை களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை நிறுத்தி, வசதியற்ற கஷ்ட பிரதேசத்தில் தரம் 5 புல மைப் பரிசில் பரிட்சையில் சித்தியடைந்த மாணவர் களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் அதி கரிக்க வேண்டும்.
இவ்வாறு வவுனியா பிர தேச செயலாளர் கா. உதயராசா தெரிவித்தார்.
வவுனியா இராசேந்திரன் குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற தரம் 5மாணவர் களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட் டார்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கையில் இடம்பெறும் தரம் 5 புலமைப் பரீட்சை மாணவர்களை அடுத்த நிலைக்குத் தயார்ப்படுத்து வதற்கு நடத்தப்படும் பரீட் சையாகும். அதற்குப் பாட சாலைகளில் சரியான போட்டி நடைபெறுகின்றது. வசதியான மாணவர்கள், அரச ஊழியர்களின் பிள் ளைகள் தான் அதிகமாக பரீட்சையில் சித்தியடைந்து வருகின்றனர். எல்லாப் பெற்றோர்களும் தமது பிள் ளைகளின் எதிர்காலத் தில் அக்கறையாகத் தான் இருக்கின்றார்கள். அதை நாங்கள் குறையாகக் கூற முடியாது. பிள்ளைகள் சித்தியடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் செயற்படுவதால் எல்லாப் பிள்ளைகளும் சித்தியடை கின்றார்கள். மாவட்டத்தில் நூறு பிள்ளைகள் சித்திய டைவார்களாக இருந்தால் எத்தனை அரச ஊழியர் களின் பிள்ளைகள் அல் லது எத்தனை வசதியான பிள்ளைகள் என்ற விவரம் கணக்கிடப்பட்டு அவர் களை விடுத்து மற்றைய பிள்ளைகள் அனைவரை யும் புலமைப் பரீட்சைக்கு தகுதியானதாக மாற்ற வேண்டும் என்று நாங்கள் அரசிடம் கேட்கவேண்டும். கஷ்டப்பட்ட, வசதியற்ற பிள்ளைகளுக்கு அந்தப் பணம் இல்லாமல் போவ தற்கு எங்காலும் ஒன் றுமே செய்ய முடியாதுள் ளது - என்றார். (ந-21)

# பட்ஜெட்டுக்கு எதிராக இருமுனை தாக்குதல்

கொழும்பு, நவ. 14
2017ஆம் நிதியாண்டுக்காக தேசிய அரசு முன்வைத்துள்ள வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக நாடு முழுவதும் பரப் புரைகளைச் செய்வதற்கு மகிந்த அணி தீர்மானித்துள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக கலந்துரையாடி, அடுத்தக் கட்ட நடவடிக் கைகளுள் இறங்குவதற்காக மகிந்த அணி உறுப்பினர்கள் இந்த வாரம் கொழும்பில் கூடி ஆராயவர் என்று கூறப் பட்டது. எதிரணி சார்புடைய தொழிற்சங்கங்களின் பிரதி நிதிகளும் இதில் பங்கேற்பர் என்று தெரிவிக்கப்பட்டது.
வரவு செலவுத்திட்டத்திலுள்ள குறைபாடுகளை மக்க ளுக்கு சுட்டிக்காட்டி- மக்களூடாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து திருத்தங்களை முன்வைப்பதற்கு மகிந்த அணி உத்தேசித்துள்ளது. இது பற்றி ஆராய்வதற்காகவே கொழும்பு கூட்டத்துக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.
வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது அதி லுள்ள குறைகளை பட்டியலிட்டுக்காட்டுதல். இதற்கான பொறுப்பு பந்துல குணவர்தன தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர் கள்குழுவொன்றிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.
இரண்டாவதாக பொதுக்கூட்டங்களை வைத்து, துண்டு பிரசுரங்களை விநியோகித்து பரப்புரை முன்னெடுப்பது. இதற்கான பொறுப்பு முன் னாள் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களிட மும், தொழிற்சங்க பிரமுகர்கள்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது என அறியமுடி கின்றது. (வ-4)

# நியூசிலாந்தில் சுனாமி

நியூசிலாந்துக்குச் சொந்தமான கடற்பரப் பில் நேற்று மாலை நில அதிர்வு ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் 7.4 ஆக இது பதிவாகியது. இதனால் நியூசிலாந்துக் கரையோரத்தை சுனாமி பதம் பார்த்தது.
நியூசிலாந்து நாட்டின் தெற்குப் பகுதியில் அமை ந்துள்ள கிறைஸ்ட்சேர்ச் நகரிலிருந்து 95 கிலோ மீற்றர் தூரத்தில் இந்த அதிர்வு உணரப்பட்டுள் ளது.
உயிர்ச் சேதம் பொருட் சேதம் தொடர் பான உத்தியோக பூர்வ அறிவிப்பு எதுவும் விடப் படவில்லை. ஆனால் அதிக அளவில் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என அஞ் சப்படுகிறது.
கடந்த 2011 ஆம் ஆண்டு கிறைஸ்ட்சேர்ச்சில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 185 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஏராளமான கட்டிடங்கள் இடிந்து நாசமாகின என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

Galaxy Star
வெற்றி வாரம் 109 திகதி 13.11.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
02 05 18 19 23
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,434,920/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 13.11.2016
வெற்றி வாரம் 2056
ஊதா
மீனம்
வெற்றி இலக்கங்கள்
03 16 48 54
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 67,47,480 /=
வெற்றி இலக்கங்கள்
07 62
சான்ஸ்

பணிப் பெண் தேவை
வீட்டில் தங்கியிருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் தேவை.
தொடர்பு: 077 2626944

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டு விழா

கவிஞர் மூதூர் எம்.எம்.ஏ.அனஸின் 20ஆவது வெளியீடான 'தங்கத்துரைக் காவியம்' நூல் வெளியீட்டுவிழா எதிர்வரும் 20-11-2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு திருகோணமலை சிறிகோணேஸ்வரா இந்துக்கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் செ.பத்மசீலன் தலைமையில் நடைபெறும்.
இந்த நிகழ்வில் வாழ்த்துப்பாவை கவிமணி கௌரிதாசன் நிகழ்த்த நூலின் சிறப்புரையை ஓய்வுநிலை அதிபர் கவிஞர். இரா. இரத்தினசிங்கம் நிகழ்த்துவார். (ற-ய-40)

**TRADE FINANCE & INVESTMENTS PLC**

**TFI நிறுவனத்துடன் இணைந்து நிதித்துறையின் முன்னேற்றப் பாதையில் நீங்களும் பயணியுங்கள்**

01. சந்தைப்படுத்தல் உதவியாளர் - ஆண்கள்(லீசிங்)
(யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகம் மற்றும் சாவகச்சேரி)

வருமானம் : நிரந்தர வருமானம் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள்.

பொதுவான தகைமைகள் :

* உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி.
* வயதெல்லை 19 வயதிற்கு மேல்
* நிதி மதிப்பீடு தொடர்பான அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
* செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்.
* உயர்தரப்பரீட்சைக்கு தோற்றியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரி

விண்ணப்பதாரி தாம் விண்ணப்பிக்கும் பதவியினை தபால் உறையில் குறிப்பிட்டு அனுப்பவும் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி, நிதி சம்பந்தமான பல்வேறுபட்ட செயற்பாடுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும். தேவையேற்படின் நீண்டதூரங்களுக்கு பயணம் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு நீங்கள் தகுதியுடையவராயின் உறவினர் அல்லாத இரண்டு நபர்களின் விவரங்களுடன் சுயவிவரக் கோவையை இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 7 தினங்களுக்குள் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மனிதவளப் பிரிவு
ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்றமென்ஸ் பி.எல்.சி
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## கலாசார விழா

யாழ்ப்பாணம், நவ.14
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கண்டாவளை பிரதேச செயலகமும் கலாசார பிரிவும் இணைந்து நடத்தும் கலாசார விழா 2016 நாளை செவ்வாய் கிழமை புளிம்பொக்கணை கரவெட்டித்திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.
பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான த. முகுந்தன் தலைமையில் பி.ப. 2.30 மணிக்கு ஆரம்பமாகும் விழாவில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினராக மேலதிக மாவட்டச் செயலாளர் சி.சத்தியசீலன், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள பிரதி ஆணையாளர் ஈ.தயாரூபன் ஆகியோர் கலந்து கொள்வர்.
இசை நிகழ்வுகள் விவாதம், நூல் வெளியீடு, கல்ல ஒளி விருது வழங்கல் என்பன நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-6)

## நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.14
மறைந்த பிரதிக்கல்விப்பணிப்பாளர், சமாதான நீதிவான், சமூக சேவையாளன் அமரர் கந்தையா சரவணபவானின் 5ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் சி.குணபாலன் தலைமையில் நடைபெற்றது.
புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமரர் சரவணபவானின் பாரியார், வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில் தலைவர், பாடசாலை மாணவர்கள், மற்றும் பிரதேச வாழ் மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் கந்தையா சரவணபவான் ஞாபகார்த்த நற்பணி மன்றத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன. (ற-7)

## அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு தற்காலிக நியமனம்

### வடக்கு மருத்துவர் மன்றம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.14
பிரதேச வைத்தியசாலைகளில் நிலவும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களுக்கான நியமனங்கள் தற்காலிகமாக மற்றைய திணைக்களங்களிலிருந்து சுழற்சி அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளன. அந்தப் பதவிக்குரிய நிரந்தர நியமனங்களைப் பின்னர் மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
வடமாகாண மருத்துவர் மன்றத்தினர் வடமாகாண தலைமைச் செயலரைக் கடந்த புதன்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
வடக்கு மாகாண மருத்துவர் மன்றத்தால் அனுப்பி வைக்கப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:
வடமாகாண மருத்துவர் மன்றம் முன்னெடுத்து வரும் மேம்பாட்டு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக கடந்த புதன்கிழமை வடமாகாண செயலர் அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அதில் பல்வேறு ஆக்கபூர்வமான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. மாகாண சுகாதார அமைச்சின் கீழ்வரும் அதிகாரிகளின் வருடாந்த வேதன உயர்வை வழங்கக் கொடுக்கப்படும் படிவத்தைப் பரிசீலித்துக் கையொப்பமிடும் அதிகாரத்தை 2017 தை மாதம் முதல் அந்த அந்தப் பிரிவு உயர் அதிகாரிகளிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தலைமைச் செயலர் உறுதிமொழி வழங்கினார். இதன் மூலம் இந்த நடைமுறையிலிருந்து தேவையற்ற தாமதம் தவிர்க்கப்படும் வாய்ப்பு உள்ளது.
ஓய்வு பெற்ற தேவையின் அடிப்படையில் மீள் நியமனம் பெற்றுள்ள வைத்திய அதிகாரிகளுக்குரிய கடமை அழைப்புக்கொடுப்பனவை வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மத்திய சுகாதார அமைச்சின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்ததும் உடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மருத்துவ உபகரணங்கள் கொள்வனவின் போது இறுதிப்பயனாளிகள் என்றவகையில் விசேட வைத்திய நிபுணர்களை கூறுவிலை மதிப்பீட்டுச்சபையில் உள்ளடக்கவும், அவர்களின் தேவைகளுக்கேற்ப கேள்விப் பத்திரங்கள் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
கஷ்டப்பிரதேசங்களில் பணியாற்றும் வைத்தியர்களுக்கு விசேட மாதாந்த ஊக்குவிப்புப்படி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கஷ்டப்பிதேசங்களில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கான விடுதிகளுக்குரிய வாடகை அப்பிரதேசங்களில் நிலவும் வர்த்தக நிலைய வாடகையளவிலேயே கணிப்பிடவும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ற-10)

**சிங்கள மொழி பெயர்ப்பு வினாக்கள்**
**මව්බිම**
**ஞாயிறுவார பத்திரிகையில் வெளிவந்த பிரபல ஆசான்களின் வினாக்கள்**

தரம் 4 / 5 மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டம்

தமிழ்பேசும் மாணவர்களின் நலன்கருதி ஞாயிறு சுடர் ஒளியில் வெளி வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் ஞாயிறு சுடர் ஒளி 150 முகவர்களிடம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

071 8628351 / 0777812907 / 0777243129 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு உங்கள் இல்லத்திற்கருகில் பெறக்கூடிய முகவரை அறிந்து கொள்ள முடியும்

**வேலையாள்கள் தேவை**
வட்டுக்கோட்டையில் இயங்கும் வெதுப்பகம் ஒன்றிற்கு வேலைக்கு பெண் பிள்ளைகள் தேவை. வாகன ஓட்டுநரும், (இலகுரக வாகன அனுமதிப்பத்திரம் உடையவர்கள்) தேவை.
தொடர்பு: 072 699 9345

**மணல் தேவை**
கொங்கிறீற் வேலைக்கு 700 Cubes மணலும், வீதி புனரமைப்புக்கு உகந்த நல்ல Graval மணலும் தேவை.
வட்டாரம் 05, வேலணை வடக்கு, வேலணை.
077 444 9141,
077 848 5312 (தமிழ்)

**வேலை வாய்ப்பு**
Store Keeper
Sales Girls
Helpers
(Boys 18 வயதுக்கு மேற்பட்டோர்)
New Sun Ceramics (Pvt) Ltd
A9 Road, Kilinochchi
Tel: 0212 283 872 | 0729 532 598

**வேலையாள்கள் தேவை**
நியூசன் செறமிக் (பிறைவேற் லிமிட்டெட்) (கிளிநொச்சி பழைய வைத்தியசாலை முன்பாக) எமது நிறுவனத்திற்கு விற்பனைப்பிரதிநிதிகள் தேவை. வயது 18 - 26 வரை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
021 228 3872/072 953 2598

**அறை வாடகைக்கு**
யாழ் மருத்துவ பீடத்திற்கு அண்மையில் ஆடியபாத வீதியில் 05மாணவர்களிற்கான அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 611 6428

**தவறிவிட்டது**
தனியார் நிறுவனம் ஒன்றின் வாகன உரிமப்பத்திரமும், காப்புறுதிப்பத்திரமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 797 6812

**மணமகன் தேவை**
யாழ்.இந்து கௌரவகுடும்பம் 1995 இல் பிறந்த ரோகினி நட்சத்திரம் 3 ஆம் பாதம் மணமகளுக்கு வெளிநாட்டு மணமகன் தேவை.
077 264 7292

**சிறுநீரகம் தேவை**
இருசிறுநீரகங்களும் செயலிழந்துள்ள 27 வயதுடைய நோயாளி ஒருவருக்கு $A^+$ அல்லது $O^+$ இரத்தவகையைச் சேர்ந்த சிறுநீரகங்கள் உடன் தேவை.
077 844 8215

**ENGLISH MEDIUM CLASSES**
HOME VISIT - ONE ON ONE
ACCOUNTING - O/L, A/L
ENGLISH - ANYGRADE
ARTS SUBJECTS - ANY
077 331 6402 - Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைகள் மருத்துவ நடமாடும் சேவை கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி, நவ.14

வடமாகாண கால்நடை அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டிலான கால்நடை மருத்துவ நடமாடும் சேவை நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கால்நடை மருத்துவ நடமாடும் சேவையை வடக்கு கால்நடை அபிவிருத்தித்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்தார்.

கால்நடைகளைச் சிகிச்சைக்காக கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதில் கால்நடை வளர்ப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அதைக் கருத்திற் கொண்டே வடக்கு கால்நடை அமைச்சு தற்போது மாவட்டங்கள் தோறும் கால்நடை மருத்துவ நடமாடும் சேவையை ஏற்பாடு செய்து வருகிறது. அதன் ஒரு கட்டமாகவே கிளிநொச்சியிலும் ஜெயபுரம், முழங்காவில், அக்கராயன் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் பயன்பெறும் விதமாக இந்த மருத்துவ சேவை இடம்பெற்றது.

நேற்று நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் கால்நடைகளுக்கான மருத்துவ ஆலோசனை, நோய்த் தடுப்பு மருந்துகள் வழங்குதல், செயற்கை முறைச் சினையூட்டல், நாய்களுக்கான கருத்தடைச் சிகிச்சைகளை மேற்கொள்ளுதல், பசுத்தீவனம் தயாரித்தல், கால்நடைகளுக்கான காப்புறுதி வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பசுக்களை வளர்ப்பவர்களுக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து பாற் கொள்கலன்களும் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் செ.கௌரிதிலகன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, விவசாய அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சி.வசீகரன் ஆகியோருடன், கால்நடை வளர்ப்பாளர்களும் கலந்து கொண்டனர். (ழ-21)



# மூன்று வயதில் சிறுவர்களுக்கு எழுதப் பழக்க முயல்வது தவறு

## வவு. தெற்கு கல்வி வலய முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

வவுனியா, நவ.14

முன்பள்ளிக்கு வருகின்ற பிள்ளைகளுக்கு மூன்று வயதிலேயே எழுத்துப் பழக்கவேண்டும் என்று பெற்றோர்கள் கேட்பது தவறானது. பிறப்பிலிருந்தே பிள்ளைகள் கற்றுக்கொள்கிறார்கள். அதை ஒழுங்குபடுத்தி இந்த சமூகத்திற்குரியவர்களாக மாற்றியமைத்து வலுப்படுத்தி ஒழுங்குபடுத்திக் கொள்ளும் செயற்பாடுகளையே இன்றைய முன்பள்ளிகள் மேற்கொள்கின்றன.

இவ்வாறு வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன்பள்ளிகளின் உதவிக்கல்விப் பணிப்பாளர் கோ.தர்மபாலன் தெரிவித்தார்.

வவுனியா பாரதிமுன்பள்ளியின் கலைவிழா நேற்று பாரதி முன்பள்ளி அதிபர் திருமதி ஜெயராஜா சந்திரா தலைமையில் வவுனியா நகரசபை கலாசாரமண்டபத்தில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

தற்போது இரண்டரை வயதிலேயே பிள்ளைகளைப்பெற்றோர்கள் முன்பள்ளியில் சேர்க்கிறார்கள். உடனேயே எழுத்து பழக்குங்கள், மூன்று வயதிலாவது பழக்குங்கள் என்பார்கள். அதனை நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. பிள்ளைகளுக்குக் கதை சொல்வது, அவர்களிடம் கதைகேட்பது போன்றவற்றுடன் பேச்சாற்றலை அவர்களுடைய தாய் மொழியில் பேச பெருமளவு சந்தர்ப்பம் வழங்குவோம். இந்தப் பருவத்தில் தாய்மொழி வளர்சியின் முன்னேற்றத்தைப் பார்ப்போம். அதனூடாக அவர்களின் தொடர்பாடல் திறன் வளர்ச்சியடையும். ஏனைய மொழிகளில் நாம் அதிக கவனம் செலுத்துவதில்லை. அதற்காக அந்த மொழிகளை அவர்கள் பேசக்கூடாது என்றல்ல. அவர்கள் பேசலாம். அதற்கு சந்தர்ப்பம் வழங்கலாம்.

பிறப்பிலிருந்தே பிள்ளைகள் கற்றுக் கொள்கிறார்கள் அதை ஒழுங்குபடுத்தி இந்த சமூகத்திற்குரியவர்களாக மாற்றியமைத்து வலுப்படுத்தி ஒழுங்குபடுத்திக் கொள்ளும் செயற்பாடுகளையே முன்பள்ளிகள் செய்கின்றன. முன்பள்ளிகள் பிள்ளைகளின் அறிவாற்றலை, மனப்பாங்கை, உடலாற்றலை, விருத்தி செய்வன. ஆளுமையை விருத்தி செய்ய ஆடல், பாடல் விளையாட்டு செயற்பாடுகளை அங்கு முன்னெடுக்கின்றோம். அதற்கான சூழலை உருவாக்கின்றோம்.

> “முன்பள்ளிகள் பிள்ளைகளின் அறிவாற்றலை, மனப்பாங்கை, உடலாற்றலை, விருத்தி செய்வன, ஆளுமையை விருத்தி செய்ய ஆடல், பாடல் விளையாட்டு செயற்பாடுகளை அங்கு முன்னெடுக்கின்றோம். அதற் கான சூழலை உருவாக்குகின்றோம். இங்கே பெறுகின்ற அனுபவம் இடைநிலைக் கல்வி பின்னர் உயர் கல்வி வரையான வளர்ச்சிக்கு உதவும்.”

இங்கே பெறுகின்ற அனுபவம் இடைநிலைக் கல்வி பின்னர் உயர்கல்வி வரையான வளர்ச்சிக்கு உதவும். அவற்றையெல்லாம் வீட்டில் பெறும் சூழல் இருக்கும் என எதிர்பார்க்கமுடியாது. உண்மையில் பிள்ளைகள் கலை கலாசார விழுமியங்களை முன்பள்ளிகளிலும் பாடசாலைகளிலும் தான் அடிப்படையில் பெறுகிறார்கள்- என்றார்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலக மேலதிகமாவட்டச் செயலாளர் தி.திரேஸ்குமார், வவுனியா பிரதேசசெயலாளர் கா.உதயராசா, வடமாகாணசபை உறுப்பினர் ம.தியாகராசா, பாடசாலை அதிபர்கள் முன்பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ழ-21,402)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கூடுதல் புள்ளிகளுடன் சித்தி பெற்ற எமது அன்புச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன்



ச. பாமகள்
கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை
புள்ளிகள் -171

வ.கபிநேகா
யாழ்/ இந்து ஆரம்ப பாடசாலை
புள்ளிகள் 158

இவர்கள் மேலும் பல சாதனைகள் படைக்க இறைவனை வேண்டுகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்: பெரியப்பா-ப. குகதாசன்
பெரியம்மா- கு.திருமகள், தம்பி- கு. சிறிசுபாங்கன்

திருப்பூங்குன்றம், 69/1, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

நல்லூர் ஆலய வளாகத்தில் இதுவரை காலமும்
சூரியா தூய சைவ உணவகம்
என்ற பெயரில் இயங்கி வந்த உணவகம்
புதிய நிர்வாகத்தின் கீழ்
புதிய பொலிவுடன்

யாழ் சுவையூற்று

பாரம்பரிய உயர்தர (இந்திய) சைவ உணவகமாக
இன்று (14.11.2016) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கோலாகலமாக திறந்து வைக்கப்படவுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன் அன்புடன் அழைக்கின்றோம்.

விஷேட உணவுகளாக (இந்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட)
பிறைட்றைஸ், புரியாணி, உள்ளிக்கறி ,காளான் கறி, பன்னீர்க்கறி நெய்த்தோசை, பேப்பர்த் தோசை, வெங்காயத்தோசை, மசாலா,கொத்து, பூரி, நாண் மற்றும் அனைத்து வகையான சைவ உணவுகளுடன் அனைத்து வகையான ஐஸ்கிறீம் வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

நீரிழிவு நோயாளர்களுக்காக விஷேடமாக தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

அனைத்து வகையான நிகழ்வுகளுக்கும் குறைந்த விலையில் தரமான உணவுகள் ஓடருக்கு (கேற்றரிங்) செய்து கொடுக்கப்படும்.

இலவச மண்டப வசதி
திருமண நிகழ்வு, பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் கொண்டாட்டங்கள் மற்றும் அரச, அரசசார்பற்ற பொது நிகழ்வுகளுக்கு

யாழ் சுவையூற்று பாரம்பரிய உயர்தர(இந்திய)சைவ உணவகம்.
369, பருத்தித்துறை வீதி, நல்லூர். (நல்லூர் கோயில் பின்புற வீதி)
தொடர்பு: 077 233 5103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அரசின் திட்டங்களை கொள்வனவு செய்யாதீர்கள்

## மகிந்த ராஜபக்ச கோரிக்கை



தற்போதைய அரசால் விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ள கடந்த அரசின் செயற் திட்டங்களை கொள்வனவு செய்ய வேண்டாம் என சீனா உள்ளிட்ட முதலீட்டு நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ச.

அவர் தெரிவித்ததாவது:

எனது அரசின் காலத்தில் பெறப்பட்ட கடன்கள் தற்போது செயற்றிட்டங்களாகக் காணப்படுகின்றன. வானூர்த்தித் தளம், துறைமுகம், துறைமுக நகரம் என்பன அமைக்கபட்டுள்ளன. அந்த செயற்றிட்டங்களை விற்பனை செய்ய தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதியே இந்த செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றை விற்பனை செய்ய வேண்டாம் - என்று அவர் தெரிவித்தார். (ம-4)

## மரண அறிவித்தல்

### சின்னையா குமாரசாமி (மாத்தையா)

(ஓய்வு நிலை கிராம அபிவிருத்தி அலுவலர்)



கோயிற்குடியிருப்பு கச்சாய் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னையா குமாரசாமி நேற்று (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் சுந்தரகலா, குமாரதாஸ் (லண்டன்), யோகதாஸ் (கனடா), சூரியகலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.11.2016) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வீரபத்திரர் ஒழுங்கை,**
**கச்சாய் வீதி, சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(சி/26503)(17.20)

# ஹூலு கங்கையில் மூழ்கி மாணவர்கள் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 14

கண்டி தெல்தெனியவில் தோட்ட பகுதியில் ஹூலு கங்கையில் மூழ்கிபாடசாலைமாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வத்துகாமம் கல்வி வலயத்திலுள்ள வலல ரத்னாயக்க மத்திய கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் இருவரே உயிரிழந்துள்ளனர். இருவரும் மகாவலியின் கிளை நதியான ஹூலு கங்கையில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று மேலதிக வகுப்புக்குச் சென்றுவிட்டு நான்கு நண்பர்கள் ஆற்றில் குளிக்கச் சென்ற நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இவர்கள் வத்தேகம மற்றும் மெனிக்கின்ன பொலிஸ் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-4)

# இடர் தடுப்பு தேசிய வாரம்

இம்மாதம் 15ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை இடர் தடுப்பு தொடர்பான தேசிய வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதற்கான ஏற்பாட்டை சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது. இடர் தடுப்பு தொடர்பான மத்திய அலகான தொற்றா நோய் பிரிவின் ஊடாக இந்த வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-4)

# அமைச்சர் வாங்கிய வாகனத்தால் சர்ச்சை

கொழும்பு, நவ. 14

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வையற்ற வாகன அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி அரசின் பிரபல அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு இறக்குமதி செய்துள்ள அதிக சொகுசு வாகனத்தால் அரசுக்கு 3 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த அமைச்சர் மர்சிடீஸ் பென்ஸ் ஜி.எல்.எஸ். 350 ரக மோட்டார் கார் ஒன்றை இலங்கைக்கு இறக்குமதி செய்துள்ளார் என்றும் அமெரிக்காவிலிருந்து இந்தக் காரை அவர் இறக்குமதி செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2 ஆம் திகதி இந்தக் காரை அவர் இலங்கைக்குக் கொண்டு வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

வரவு - செலவுத் திட்டத்தில் சாதாரண மக்கள் வாங்கும் மோட்டார் வாகனத்தின் விலையை 2 லட்சம் ரூபாவால் அதிகரித்துள்ள நிலையில் நல்லாட்சி அமைச்சர்கள் அரசுக்குப் பல மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தும் விதத்தில் வாகனம் இறக்குமதி செய்வது விசனத்துக்குரிய ஒன்றாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ற-4)

# வரவு - செலவுத் திட்டத்தில் மாகாணங்களுக்கு அநீதி

## மேல் மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 14

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் மாகாணங்களுக்கு ஏற்பட்டுள்ள அநீதி குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும் என்று மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்தார்.

பண்டாரகம, அருக்கொடை நிவுடாவ பிரதேசத்தில் நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாடு என்ற வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. மாகாணங்களுக்கு நிதி ஒதுக்கும் போது எமக்குப் பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மேல் மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 9 மில்லியன் ரூபா குறைக்கப்பட்டுள்ளது. அதனால், மாகாண சபை உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு குறைந்துள்ளது.

இது தொடர்பாக ஏனைய மாகாண முதலமைச்சர்களுடன் கலந்துரையாடப்படும் - என்றார். (ற)

## மரண அறிவித்தல்

### திருமதி திலகேஸ்வரி தம்பிராசா



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகேஸ்வரி தம்பிராசா நேற்று (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் பாசமிகு மனைவியும் சூரியகுமார், விண்மதி, குமுதினி, சந்திரகுமார், மகேந்திரகுமார், ஜமுலா, முக்கேஸ் ஆகியோரின் அன்புத்தாயும் துஷ்யந்தன், ஆருஷா, சார்வின், பார்வின், ஸ்ரீபன், கோபிநாத், சாளினி, சுலக்சிகன், மகிஷா, ஜதுசன், விதுசன், ஜத்ரா, சஜித்ரா, துஷாரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2016) திங்கட்கிழமை அச்சுவேலி வடக்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி வடக்கு வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்சுவேலி வடக்கு,**
**அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(சி/26502)(17.20)

## மரண அறிவித்தல்

### திருமதி பூரணம் சிவபாதசுந்தரம்

**தோற்றம்**
09. 06. 1957



**மறைவு**
12. 11. 2016

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தெற்கு, நெல்லியோடையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் சிவபாதசுந்தரம் நேற்று முன்தினம் (12.11.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புமருமகளும் சிவபாதசுந்தரத்தின் பாசமிகு மனைவியும் ஜனனி (பிரான்ஸ்), சோபினி (பிரான்ஸ்), சுபாஜினி (பிரான்ஸ்), தஜனி (மாணவி சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவனம் கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தாயும் சின்னப்பிள்ளை, இளையபிள்ளை, குமாரு, கமலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் விஜயராசா (பிரான்ஸ்), ஜனகரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் டனிகாவின் அன்புப்பேர்த்தியும் சிவயோகசுந்தரம், சிவஞானசுந்தரம், சிவானந்தசுந்தரம் ஆகியோரின் அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி தெற்கு முழங்கன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நெல்லியோடை**
**அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.**
**077 581 8491**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**இ.சிவபாதசுந்தரம் (கணவர்)**

(சி/26501)(17.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்

“சாகுமுன் உன் பாட்டன் நட்ட பழமரங்களைக் கேட்டுப்பார், உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக்கூடும்.”

– கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன்.

கார்த்திகை 01–30, 2016
“சொந்த மண் சொந்த மரங்கள்”
“ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்”



## இலங்கையில் முதன்முறையாக வவுனியாவில் மூங்கில் செய்கை

வவுனியா, நவ.14

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட ஆயிரம் மூங்கில் கன்றுகள் இலங்கையில் முதல் தடவையாக வவுனியாவில் நடுகை செய்யப்படவுள்ளது.

வவுனியா பெரியார்குளம் பகுதியில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்ற மூங்கில் செய்கையின் ஆரம்ப நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் மூங்கில் கன்றுகள் சிலவற்றை நடுகை செய்தார்.

பெரியார்குளம் பகுதியில் தென்னம்தோப்புக்கு அருகில் உள்ள ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் மூங்கில் கன்றுகள் நடப்பட்டன.

மூங்கில் செய்கையில் பொதுமக்களை ஊக்குவிக்கும் நோக்கில் மூங்கில் கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன. பின்னர் அவர்களிடம் இருந்து மூங்கில்கள் பெறப்படும். இதன் மூலம் பொதுமக்கள் 65 ஆயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரையான இலாபம் பெற்றுக் கொள்ள முடியும் – என்று மூங்கில் செய்கையின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.இராமசுப்பிரமணியம் தெரிவித்தார். (ற-21)

# மேய்ச்சல் தரை இன்மையால் பெரும் பொருளாதார இழப்பு

## முழங்காவில் கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.14

கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் பகுதிகளில் உள்ள 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரை இல்லை. விதைப்பு காலங்களில் 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இலுப்பைக்கடவைக்கு அவற்றை நகர்த்த வேண்டியுள்ளது.

இவ்வாறு முழங்காவில் பிரதேச பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் து.அ.ஜெகநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள முழங்காவில் பகுதிகளில் வாழும் கால்நடை வளர்ப்போரிடம் மட்டும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் உண்டு . அவற்றுக்கென இந்தப் பிரதேசத்தில் மேய்ச்சல் தரை கிடையாது. விதைப்புக் காலங்களில் எமது கால்நடைகளை 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இலுப்பைக்கடவைப் பிரதேசத்துக்கே நகர்த்த வேண்டிய நிலமையே இன்றுவரை உள்ளது.

இலுப்பைக் கடவைப் பிரதேசத்துக்கு கொண்டு சென்று அங்கு கால்நடைகளைப் பராமரிப்பவர்களிடம் எமது கால்நடைகளைக் கையளித்து அதற்கான பணத்தைச் செலுத்துகின்றோம். கால்நடைகளின் வருமானமும் குறித்த காலப்பகுதியில் இழக்கப்படுகின்றது. கால்நடை உரிமையாளர்களுக்கு இரட்டைச் செலவு ஏற்படுகின்றது.

எமது பகுதியில் ஒரு மேய்ச்சல் தரையை உருவாக்கித் தருமாறு கடந்த 6 ஆண்டுகளாகக் கோருகின்றோம். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் முதல் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், அமைச்சுவரைக்கும் கோரிக்கை விடுத்தோம். ஆனால் இன்றுவரை சாதகமான பதில் கிட்டவில்லை. முழங்காவில் பகுதிகால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையை உருவாக்கும் வகையில் முழங்காவில் பிரதேசத்திலேயே போதிய நிலம் உண்டு. முழங்காவில் குளத்துக்கு அருகில் அல்லது கதிராவில் குளத்திற்கு அருகில் சுமார் 500 ஏக்கர் காட்டு நிலங்கள் உண்டு . அவற்றில் உள்ள பெரிய மரங்களை அழிக்காது சிறு மரங்களை மட்டும் வெட்டுவதன் மூலம் குறித்த பகுதியை மேய்ச்சல் தரையாக மாற்ற முடியும். இதற்குக் காட்டை ஆளுகை செய்யும் வன வளத்திணைக்களம் குறித்த பகுதிகளை விடுவித்து வழங்க வேண்டும். அவ்வாறு வழங்க வன வளத் திணைக்களம் மறுக்கின்றது. அதனால் நெற்செய்கை மேற்கொள்ளும் காலத்தில் கால்நடைக் கட்டுப்பாட்டுக்குப் பெரிதும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலேயே கால்நடை உரிமையாளர்கள் உள்ளனர். இவற்றைக் கருத்திற்கொண்டு முழங்காவில் பகுதிக்கு ஒரு மேய்ச்சல் தரையை உருவாக்க உரியவர்கள் உடன் முன்வர வேண்டும் – என்றார்.

இது தொடர்பில் கால் நடை வளர்ப்போரால் கடந்த இரண்டு ஆண்டுகளாக எனது கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது. அது குறித்து எம்மால் ஆராயப்பட்டு நேரிலும் பார்வையிடப்பட்டது. முழங்காவில் பகுதிக்கு ஆகக்குறைந்து ஒரு மேய்ச்சல் தரை அவசியம்எனக்கண்டறியப்பட்டு அதனை அமைப்பதற்குரிய நிலத்தை விடுவித்துத் தருமாறு வன வளத் திணைக்களத்தினரிடம் கோரியுள்ளோம். வன வளத் திணைக்களத்திடமிருந்து உரிய பதில் கிடைக்காததால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இது தொடர்பில் மீண்டும் தொடர்பு கொண்டு ஆவனசெய்ய முயற்சிக்கப்படும் – என்று கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சு.அருமைநாயகம் தெரிவித்தார். (ற-21,101)





இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததை அடுத்து விவசாயிகள் நெற்செய்கையில் ஆர்வம் இன்றி இருந்தனர். சில நாள்களாக மழை பெய்ய ஆரம்பித்துள்ளதை அடுத்து அவர்கள் வயலைப் பண்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர்.

படம் : வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள விவசாயி ஒருவர் பாரம்பரிய முறைப்படி ஏர் பூட்டி தனது வயலை பண்படுத்துகின்றார். (21)

## கூட்டுறவுத் துறை அபிவிருத்திக்கு மாகாண சபை நடவடிக்கைகள்

### மட்டு. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.14

கிழக்கு மாகாணத்தில் நலிவடைந்துள்ள கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்ய மாகாண சபை நடவடிக்கை எடுத்துச் செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. கனகசுந்தரம் தெரிவித்தார்.

ஏறாவூர் வடக்கு மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கூட்டுறவும் நோக்கமும் விழிப்புணர்வு செயற்றிட்டம் பற்றிய நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கூட்டுறவு என்பது இன மத மொழி பேதங்களைக் கடந்த மக்களுடைய இயக்கம், வரலாற்றில் கூட்டுறவு இயக்கம் மாத்திரமே சுரண்டலற்ற இயக்கமாக உள்ளது.

அங்கத்தவர்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் பங்கு கொள்ளக் கூடிய இயக்கமாகவும் அது உள்ளது. போர் மற்றும் வினைத்திறன் அற்ற செயற்பாடுகளால் பின்னடைவு கண்டுள்ள கூட்டுறவுத் துறையை சீரமைத்து அதனை முன்மாதிரியான அபிவிருத்திப் பாதையில் கொண்டு செலுத்தும் முயற்சியில் கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை அமைச்சு ஈடுபட்டுள்ளது.

இப்பொழுது மக்களை விழிப்பூட்டுவதற்காக கூட்டுறவும் நோக்கமும் பற்றிய இவ்வாறான பல விழிப்புணர்வு ஏற்பாடுகள் செய்யப்பட்டு மாகாணம் முழுவதும் இடம்பெற்று வருகின்றன – என்றார்.

ஏறாவூர் வலய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர், தெங்கு உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தினர், சிக்கன கடன் உதவிக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலை கடித்த நிலையில் இளம்பெண் சடலம் மீட்பு

மட்டக்களப்பு, நவ.14
மட்டக்களப்பு - அம்பிளாந்துறை வாவியிலிருந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு முதலை கடித்த நிலையில் இளம் பெண் ஒருவரின் சட லம் ஒன்று மீட்கப்பட்டது.

கொக்கட்டிச்சோலை - பழுகாமம் கிராமத்தைச் சேர்ந்த மணியம் சகீலா (வயது -27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

வாவியில் மீன்பிடிக்கச் சென்றவர்கள் அந்தப் பகுதியில் சடலம் ஒன்று மிதப்பதைக் கண்டு மீட்டனர். சடலம் முதலைக் கடிக்குள்ளான நிலையில் காணப்பட்டது என்று-மீனவர்கள் தெரிவித்தனர்.

இரண்டு குழந்தைகளின் தாயான மேற்படி பெண்ணின் கணவர் ஏற்கெனவே விபத்தொன்றில் உயிரிழந்திருந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர் பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டனர். (ற-ய-46)

# நல்லாட்சி அரசின் மீதான எதிர்பார்ப்பு தவிடுபொடி

## கிழக்கு மாகாண பிரதித் தவிசாளர் விசனம்

மட்டக்களப்பு, நவ.14
மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரரின் செயலுக்கு வன்மையான கண்டனத்தை வெளியிட்டார்.

கிழக்கு மாகாணசபை பிரதித் தவிசாளர் இந்திரகுமார் பிரசன்னா, நல்லாட்சி அரசில் சிறுபான்மை இனங்களின் நம்பிக்கை தவிடுபொடியாகியது என்றும் சாடினார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறுபான்மை மக்கள் நல்லாட்சி அரசில் அமைதியான அச்சுறுத்தலற்ற சூழ்நிலையையே எதிர் பார்த்தார்கள். ஆனால், எதிர்பார்ப்புக்கு மாற்றமாக நடப்பு நிகழ்வுகள் சிறுபான்மை இனங்களை அச்சுறுத்துவதாகவே அமைந்தன.

இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் மேலும் ஸ்திரமற்ற நிலைமையைத் தோற்றுவிக்கலாம்.

குறித்த தேரர் தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிக்குள்ளே இவ்வாறு அடாவடித்தனமாகவும் அச்சுறுத்தும் விதத்திலும் இனவாத செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவது நாடு முழுவதும் மீண்டும் ஒரு இனவாதத்துக்குத் தூபமிடக் கூடியதாக அமைந்தது.

சமீபத்தில் முன்னர் பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குள் புகுந்த இந்தத் தேரர் பிரதேச செயலாளரின். மேசை மீதேறி காலால் உதைத்து அடாவடித்தனம் புரிந்தார். பெண் என்றும் பாராது ஒரு அரச உயரதிகாரியை கீழ்த்தரமாக தூற்றிப் பேசினார்.

இப்பொழுது அதே பிரதேச செயலகத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருக்கின்ற மற்றுமொரு பெண் பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகள், மட்டக்களப்பு வாழ் தமிழ், முஸ்லிம் மக்களை அச்சுறுத்தும் கருத்துக்களை கீழ்த்தரமான முறையில் வெளியிட்டார்.

குறித்த தேரருக்கு நிர்வாக ரீதியில் விடயங்களைக் கையாள, குறைநிறைகளை எடுத்துச் சொல்ல எத்தனையோ வழிமுறைகள் இருந்தும், அரச உயர்மட்ட நிர்வாக அதிகாரிகள், பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள் முன்னிலையில் இனவாதத்தைத் தூண்டும் இந்த அடாவடித்தன நடவடிக்கை அச்சுறுத்தலாகவே உள்ளது. இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு, இந்த நடவடிக்கை தொடர நல்லாட்சி அரசு வழிவிடக் கூடாது என்று வலியுறுத்துகின்றேன்- என்றார். (ற-ய-46)

# தண்டப் பணம் குறைக்கப்படாது

## நிதியமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு, நவ.14
அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத் திட்டத்தில், போக்குவரத்துச் சட்டம் மீறப்படுவதற்கான குறைந்த பட்ச தண்டப்பணமாக அறிமுகம் செய்துள்ள 2 ஆயிரத்து 500 ரூபாவில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்போவதில்லை என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று தெரிவித்தார்.

குறித்த அபராதத் தொகையை குறைக்குமாறு தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் விடுத்துள்ள வேண்டுகோள் குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இந்த சட்டத்தின் மூலம் பல்லாயிரக் கணக்கான பயணிகள் மற்றும் பாதசாரிகளின் உயிர்களை காப்பாற்ற முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரவு-செலவுத் திட்ட யோசனையில் அறிமுகம் செய்துள்ள புதிய அபராதத் தொகையை குறைக்காவிட்டால் எதிர் வரும் செவ்வாய்க்கிழமை முதல் நாடு தழுவிய பணிபுறக்கணிப்பு நடத்தப்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்தது. (ற)

# மீனவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, நவ.14
மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பன்சேனை கண்டியனாறு குளத்தில் இருந்து நேற்றுப் பகல் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை மாலை மீன்பிடிக்கச் சென்ற சில்லுக்கொடியாறு கிராமத்தைச் சேர்ந்த 12 பிள்ளைகளின் தந்தையான வீரக்குட்டி வேலாப்போடி (வயது - 72) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். சடலம் குளத்தின் சேற்றுக்குள் புதையுண்டிருந்த நிலையில் பொலிஸார் மற்றும் பொதுமக்களால் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ய)

# இளைஞர், யுவதிகளுக்கு தொழிசார் பயிற்சிகள்

திருமலை, நவ.14
திருகோணமலை மாவட்ட சர்வோதயம் - உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனத்துடன் (வூஸ்) இணைந்து வேலையற்ற 100 இளைஞர் - யுவதிகளுக்கு நான்கு தொழில்சார் துறைகளில் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

அதில் சுற்றுலாத்துறை, கட்டுமானத் துறை, மோட்டார் வாகனம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய நான்கு துறைகளில் மூன்றுமாத வகுப்புநிலை பயிற்சியும், மூன்றுமாத செய்முறைப் பயிற்சியும் வழங்கப்படும். அதற்கான நிதியை கிழக்கு மாகாண சபை வழங்கியது.

குச்சவெளி, கந்தளாய் திருகோணமலை மற்றும் மொறவெவ, பிரதேசங்களில் பயிற்சி நெறி குறித்த விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

17 - 29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் யுவதிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவல்களைப் பெற 0264931322 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ய-45)

# அச்சுறுத்தும் பிக்கு மீது நடவடிக்கை வேண்டும்

## யோகேஸ்வரன் எம்.பி. வலியுறுத்து

மட்டக்களப்பு, நவ.14
மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரேர் சிவில் அதிகாரிகள் மீது தொடர்ந்து விடுத்துவரும் அச்சுறுத்தல்களுக்கு பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் தாமதமின்றி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கோரினார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களின் எல்லையான பட்டிப்பளை பிரதேசத்திலுள்ள கச்சைக்கொடிக் கிராமத்தில் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டுவரும் சிங்களக் குடியேற்ற முயற்சிகளைத் தடுக்கச் சென்ற பிரதேச செயலாளர், கிராம சேவை அலுவலர், காணி அதிகாரி உட்பட அதிகாரிகளுக்கு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமனரத்ன தேரரால் நேரடியாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

இதுதொடர்பான காணொலி ஒளிப்பதிவு சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது.

இதுதொடர்பாக நேற்றுக்காலை நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அவரது மட்டக்களப்பு அலுவலகத்தில் செய்தியாளர் சந்திப்பு நடத்தினார்.

அதில் அவர் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசை நல்லாட்சி என்று ஒரு தரப்பினர் கூறுகிறார்கள். இந்த ஆட்சி நல்லாட்சி என கூறுமளவுக்கு இல்லை. முன்னைய அரசைப் போன்று தான் இந்த அரசிலும் பௌத்த குருமார்களின் தமிழர் தாயகத்தை பௌத்த மயக்கும் நடவடிக்கை தொடர்கிறது. இது ஜனாதிபதிக்கோ பிரதமருக்கோ தெரியாதது அல்ல.

கிழக்கு மாகாணத்தில் சில மாதங்களுக்கு முன்பு பௌத்த மக்கள் இல்லாத சாம்பல் தீவு சந்தியில் பௌத்த சிலை வைக்கப்பட்டு-பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது. இதுபோன்று வாகரைப் பிரதேசத்திலுள்ள காயான்கேணியில் பௌத்த விகாரை அமைப்பதற்கு காணி கேட்கிறார்கள். இதற்கான எதிர்ப்பையும் ஆட்சேபனையையும் நான் தெரிவித்தேன்.

சில நாள்களுக்கு முன்பு அம்பாறை இறக்காமம் மாணிக்கமடு பகுதியில் நீதிமன்ற உத்தரவை மீறி, புத்தர் சிலை வைக்கப்பட்டது. இவ்வாறான விடயங்களை தமிழ் - முஸ்லிம் தலைமைகள் ஜனாதிபதி, பிரதமர் என உரிய தரப்பினரிடம் கொண்டு சென்றாலும் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை, எடுக்கப் போவதுமில்லை. இதுதான் யதார்த்தம்.

இரு வருடங்களுக்கு முன்பு அம்பிட்டிய சுமனரத்ன தேரேர் மட்டக்களப்பு பிள்ளையாரடி சந்தியில் புத்தர்சிலை நிறுவுவதற்கான முயற்சி மேற்கொண்டிருந்தார். அதனை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொ.செல்லராசா, பா.அரியநேத்திரனுடன் நானும் இணைந்து மக்கள் சக்தி மூலம் முறியடித்தோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமுகமான நிலை நிலவும் காலப்பகுதியில் தேரர் இந்த சிவில் நிர்வாகத்துக்கு அச்சுறுத்தலாகக் காணப்படுகிறார். மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் முரண்பட்டார். இதற்கு முன்பு கச்சக்கொடி குடியேற்றத்தை தடுத்தபோது பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் புகுந்து அச்சுறுத்தல் விடுத்தார். மங்களராம விகாரையில் மின்மானியை பரிசோதிக்கச் சென்ற இலங்கை மின்சாரசபை உயர் அதிகாரியை தாக்கியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமையும் தற்போதைய பிரதேச செயலாளர் மற்றும் அதிகாரிகளுக்கு தகாத வார்த்தைகளையும் இனவாத சொற்களையும் பிரயோகித்து தமிழர்கள் எல்லாம் புலிகள் எனக் கூறி பொலிஸாரின் முன்னிலையில் அச்சுறுத்தல் விடுத்தார்.

அங்கு கடமையிலிருந்த பொலிஸார் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை போல் தெரிகிறது. பௌத்த பிக்குவால் சிவில் அதிகாரிகளுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் அந்த இடத்தில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் கண்டிக்கத்தக்கது.

மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்துக்குப் பொறுப்பான அதிகாரிகள் குறித்த பௌத்த பிக்குவுக்கு எதிராக உரியமுறையில் சட்ட நடவடிகையெடுத்திருக்க வேண்டும். இனிமேலும் பொறுமை காக்காமல் நடவடிக்கையெடுக்க வேண்டும்.

கச்சைக்கொடி குடியேற்றம் தொடர்பாக உள்ளூர்வாசிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இதனையும் மீறி பிக்குவின் செயற்பாடுகள் தொடர்கின்றது என்பதையும் அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

சட்டவிரோத குடியேற்றம், பௌத்த வழிபாட்டு தலம் விஸ்தரிப்பு தொடர்பாக புணாணையிலும் பிரச்சினை உருவான போது அங்குள்ள பௌத்த மதகுரு மற்றும் தமிழ், சிங்கள மக்களும் இணைந்து கலந்துரையாடி சுமுகமான தீர்மானத்துக்கு வரமுடிந்தது என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டவிரும்புகிறேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனமுறுகலை ஏற்படும் வகையில் செயற்படும் சுமனரத்ன தேரரை இந்த மாவட்டத்தை விட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு மதவிவகார அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (ற-ய-47)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நீரிழிவு தின நடைபவனி நேற்று

கொழும்பு, நவ.14
நலமான நாளுக்காக இன்றே பணியை தொடங்குவோம் எனும் தொனிப்பொருளில் தேசிய நீரிழிவு தின நடைபவனி நேற்று முற்பகல் ஜனாதிபதி தலைமையில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது. குறித்த நடைபவனி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டப வளாகத்தில் முடிவடைந்தது.

அனைவருக்கும் முன்மாதிரியான இந்த நிகழ்ச்சியை பாராட்டிய ஜனாதிபதி, ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குவதற்கு அனைவரினதும் அர்ப்பணிப்பும் அக்கறையும் மிகவும் முக்கியமானது என்று சுட்டிக் காட்டினார்.

தேசிய நீரிழிவு தினத்தோடு இணைந்ததாக நடைபெற்ற அகில இலங்கை சித்திரப் போட்டியில் வெற்றி பெற்றோரின் சித்திரங்கள் அடங்கிய கண்காட்சியும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டது.



நவம்பர் மாதம் 14ஆம் திகதியில் வரும் தேசிய நீரிழிவு தினத்தோடு இணைந்ததாக சுகாதார அமைச்சின் தொற்றாநோய் அலகு மற்றும் சிறுநீரக நிபுணர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த நடைபவனி ஏற்பாடு செய்யப்பட்டது.

நடைபவனியில் அமைச்சர் ராஜித சேனாரத்ன, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ கலாநிதி பாலித மகிபால, இலங்கை சிறுநீரக நிபுணர்கள் மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவ கலாநிதி உதித் புளுக்கஹே, இலங்கை நீரிழிவு சம்மேளனத்தின் தலைவர் மருத்துவ கலாநிதி நோயெல் சோமசுந்தரம் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர். (ந)

## நன்கொடை கோரிக்கையால் சர்ச்சை

கொழும்பு, நவ.14
சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு – செலவுத் திட்டத்தில் புகைத்தல் பொருள் உற்பத்தி நிறுவனங்களிடம் இருந்து 50 கோடி ரூபா நன்கொடை கோரப்பட்டுள்ளமை புகையிலை மற்றும் மது சாரப் பாவனைக்கு எதிரான போராட்டத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தில் புகைத்தல் பொருள் உற்பத்தி நிறுவனங்கள் 50 கோடி ரூபாவை நன்கொடையாக வழங்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. புகைத்தலுக்கு எதிரான ஜனாதிபதி செயலக பிரிவின் நடவடிக்கைகளுக்காகவே இந்த நிதி கோரப்பட்டுள்ளது.

ஆனால் உலக சுகாதார அமைப்பின் புகைத்தல் பொருள் கட்டுப்பாடு தொடர்பான 13 ஆவது சரத்தை இது மீறுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

பொதுமக்களின் சௌக்கியம் தொடர்பில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு புகைத்தல் பொருள் நிறுவனங்களின் அனுசரணை பெற்றுக் கொள்ளக் கூடாது என்று அந்தச் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் உடன்படிக்கையில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது.

அதை மீறும் வகையில் தற்போது வரவு – செலவுத் திட்டத்தில் மேற்குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுன்றது. (ந)

# வனவளத் திணைக்களத்தின் வசமிருந்த காணிகள் விடுவிப்பு

வவுனியா, நவ.14
வவுனியா வடக்கில் வன வளத் திணைக்களத்தினர் வசமிருந்த மக்களுக்குச் சொந்தமான சுமார் 300 ஏக்கர் காணிகள் பிரதேச செயலாளரின் முயற்சியால் மீண்டும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் மக்களின் வாழ்விடங்கள் மற்றும் வாழ்வாதார நிலங்கள் உள்ளிட்ட ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் போர்க் காலத்தில் பராமரிக்கப்படாததால் மரங்கள் வளர்ந்து காடு போன்று காட்சியளிக்கின்றன. காட்டு மரங்கள் வளர்ந்துள்ளமையைக் காரணம் காட்டி அந்தப் பிரதேசங்கள் அனைத்தையும் வன வளத் திணைக்களம் கையகப்படுத்தியுள்ளது.



கையகப்படுத்திய நிலங்களை மீள ஒப்படைக்குமாறு அவற்றின் உரிமையாளர்கள் நீண்ட காலமாகக் கோரி வருகின்றனர். இந்த விடயம் வன வளத் திணைக்கள ஆணையாளரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு வந்த வன வளத் திணைக்கள ஆணையாளர் வன வளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

சுடுவெந்தான்குளம், புளியங்குளம், விஞ்ஞானகுளம் உள்ளிட்ட பகுதிகளின் மக்களுக்குச் சொந்தமான நிலங்களை விடுவிக்குமாறு தெரி வித்த பிரதேச செயலாளர் மக்களுடைய பகுதிகள் என்பதை ஆணையாளரிடம் தெளிவுபடுத்தினார்.

நிலமைகளை ஆராய்ந்த வன வளத் திணைக்கள ஆணையாளர் குறித்த நிலங்களை உடனடியாக விடுவிக்க இணக்கம் தெரிவித்தார்.

அதையடுத்து பிரதேச மக்கள் தமது பூர்வீக நிலங்களை நேரில் சென்று பார்வையிட்டு அவற்றைச் சீர் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (ந-101)

## கூட்டு எதிரணியினருக்கு சவால் விடுகிறார் மகிந்த

கொழும்பு, நவ.14
மதில் மேல் பூனையாக இருந்துகொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு துரோகம் இழைக்காமல், முடியுமானால் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சிறிலங்கா பொதுஜன முன்னணியில் இணைந்து பதவிகளையும் பெற்றுக் காட்டுங்கள்.

இவ்வாறு கூட்டு எதிர்க் கட்சி தலைமைகளுக்கு சவால் விடுத்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர.

அவர் தெரிவித்ததாவது:
கூட்டு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கடந்த காலம் முழுவதும் புதிய கட்சி உருவாக்குவதாக கூறித் திரிந்தனர். தற்பொழுது, புதிய கட்சி அமைக்கப்பட்டும் கூட அதில் உறுப்புரிமை எடுப்பதற்குத் தயங்குகின்றனர்.

இவர்கள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை பலிக்கடாவாக்கப் பார்க்கின்றார்கள்– என்றார். (ந)

# வீட்டுத் தரிசிப்பு முறையிலான நடமாடும் பராமரிப்புச் சேவை

## முல்லைத்தீவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.14
வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் முள்ளந்தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டுத் தரிசிப்பு முறையிலான நடமாடும் மருந்து பராமரிப்பு சேவை வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் நடைபெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட உளநலப் பிரிவு அலுவலகம் திறக்கப்பட்டது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனால் நீர் சுத்திகரிக்கும் தொகுதி ஒன்று கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராஜா, வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலை மருத்துவர் மற்றும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந-7)



## நடப்பாண்டில் இதுவரை 405 பேருக்கு எச்.ஐ.வி.

கொழும்பு, நவ.14
ஆண்டின் கடந்த 10 மாதங்களில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகி 34 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பாலியல் நோய்கள் மற்றும் தேசிய எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் சிசிர லியனகே தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
குறித்த நோயால் ஆண்களே அதிகம் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 405 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

தொற்றுக்குள்ளானவர்களில் 65 வீதமானவர்கள் ஆண்களாவர். மேல் மாகாணத்திலேயே அதிகமான எயிட்ஸ் நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். – என்றார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## போதைப் பொருளற்ற வவுனியா விழிப்புணர்வுக் கலந்துரையாடல்

வவுனியா, நவ.14
'போதைப் பொருளற்ற வவுனியா' எனும் செயற்றிட்டத்தின் கீழ் மாவட்ட இளைஞர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கும், கலந்துரையாடலும் நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது.
வவுனியா மாவட்ட சுகாதாரத் திணைக்களம், மது பானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையம் என்பன சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்புடன் இணைந்து குறித்த கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வவுனியா மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் கருத்தரங்கு ஒன்று இடம் பெற்றது.
எமது பிரதேசத்தில் புகைத்தல் மற்றும் மது பாவனை அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. எமது எதிர்கால சந்ததியினர் பெரும் சவால்களையும், நோய்களையும் எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எமது இளைஞர்களின் சிந்தனை ஆற்றலும், செயற்றிறனும் மந்த நிலையை நோக்கிச் செல்கின்றது. இது தொடர்ந்தால் எமது எதிர்காலச் சமுதாயம் பலவீனமானதாக மாற்றமடையும் - என்று அதில் சுட்டிக்காட்டப்பட்டது.
தூரநோக்கு சிந்தனையுடன் எமது எதிர்காலச் சந்ததியினரின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, மது பானம் மற்றும் போதைப் பொருள் பாவனையை எமது சமூகத்தில் இருந்து எவ்வாறு அகற்றலாம், இதற்காக இளைஞர்கள் என்ன செய்ய வேண்டும், இந்த வேலைத்திட்டத்தில் இளைஞர்களின் பங்களிப்புஎன்ன?-என்பதுகுறித்தும் விவாதிக்கப்பட்டது.
அதில் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி செல்வரட்ணம் லவன், மது பானம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தின் அருளானந், சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-21)

# மத்திய வங்கியின் நிதிச் சபையில் தலையிடுகின்றார் நிதி அமைச்சர்

## முன்னாள் பிரதி ஆளுநர் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.14
இந்த வரவு செலவுத் திட்டத்தில் அபாயமான நிலை ஒன்று உள்ளது. மத்திய வங்கி நிதிச் சபையில் நிதி அமைச்சர் தலையீடு செய்ய ஆரம்பித்தார்.
இவ்வாறு மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டப்லியூ.எ. விஜேவர்தன தெரிவித்தார்.
வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நிதிச் சபையின் ஆய்வுகளின் கீழ் நிதிச் சபையின் கொடுப்பனவுகளை அந்த சபையே உருவாக்க வேண்டும். அவ்வாறான முறை ஒன்றை அந்தச் சபை உருவாக்கி வருகின்றது.
அத்தோடு 50 வீதம் முன்னுரிமையின் அடிப்படையில் வங்கிகளில் கடன் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். இது நிதிமைச்சரின் பொறுப் பல்ல. மாறாக இது மத்திய வங்கியின் நிதிச் சபையின் பொறுப்பு.
15 வீதக் கடனை வழங்க வேண்டும் எனவற்புறுத்தினால், வங்கி முகாமையாளரின் உறவினர்களுக்கே கடன் வழங்கப்படும். அதன் பிரகாரம் இறுதியில் மத்திய வங்கிக்கு வரும் புள்ளி விவரங்களில் 15 வீதக் கடன் வழங்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.
நிதியமைச்சர் மற்றுமொரு அபாயகரமான யோசனை ஒன்றையும் முன்வைத்தார். 5 இலட்சத்துக்கு அதிகமாக பெறப்படும் கடனை பதிவு செய்ய வேண்டாம் எனக் குறிப்பிட்டார். இதற்கான காரணத்தை நான் அறியேன்.
நிதியமைச்சர் அவ்வாறான தலையீடு செய்வது தகுந்த விடயமல்ல என நான் எண்ணுகின்றேன்- என்றார். (ற)



காலி, கோட்டை பெட்லர் வீதிக்கு அருகில் கடலோரத்தில் போடப்பட்டிருந்த நடைபாதை திடீரென இடிந்து விழுந்தது. கடும் மழையால் வடிகான் ஒன்றில் ஏற்பட்ட சேதமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. உலக வங்கியின் அனுசரணையுடன் இந்த நடைபாதை மதில்கள் முழுமையாக சீரமைக்கப்படவுள்ளன என்றும்–தற்போது பாதுகாப்பு வேலியிடப்பட்டது என்றும்–தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## வரவு—செலவுத் திட்டத்தில் வரி விதிப்புக்கள் கடுமை

### நாமல் எம்.பி. கூறுகின்றார்



நல்லாட்சி அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள வரி விதிப்புக்கள் கடுமையானவையாக உள்ளன என்று - நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் கணக்கில் நாமல் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
2014ஆம் ஆண்டிலிருந்து 2017ஆம் ஆண்டுக்கான வரி கடுமையாகஅதிகரிக்கப்பட்டது.
இலங்கையர்கள் செலுத்த வேண்டிய வரித்தொகை ரூபா 771 பில்லியனாகஅதிகரிக்கும் - என்றார்.
2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பிலான வாசிப்பு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் கடந்த 10ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. (ற)

# மாதம் தோறும் பரிசோதித்தே மருந்துகளை பெற வேண்டும்

## சாவா. வைத்தியசாலை நிர்வாகம் நோயாளர்களுக்கு அறிவுறுத்தல்

சாவகச்சேரி, நவ.14
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கிளினிக் வருவோர் மாதம் ஒருமுறை வைத்திய அதிகாரிகளிடம் பரிசோதனைகளை மேற்கொண்டே மருந்துக்களைப் பெற வேண்டும் என்று வைத்தியசாலை நிர்வாகம் அறிவுறுத்தியது.
நோயாளர்கள் மாதக் கணக்கில் வைத்திய அதிகாரிகளின் ஆலோசனை பெறாது மருந்துகளைப் பெற்றுச் செல்வது அவதானிக்கப்பட்ட பின்னரே இவ்வாறு அறிவுறுத்தப்பட்டது.
நோயின் தாக்கத்துக்கு ஏற்றவாறே வைத்திய அதிகாரிகள் மருந்துகள் பரிந்துரைக்கின்றனர். சில நோயாளர்கள் வைத்திய அதிகாரிகள் ஒருமுறை பரிந்துரைத்த மருந்துகளை மாதக் கணக்காகப் பயன்படுத்துவது அவதானிக்கப்படுகின்றது.
வாராந்தம் கிளினிக் நடைபெற்று மாதத்தில் ஒரு தடவை வைத்திய அதிகாரி நோயாளர்களைப் பரிசோதித்து மருந்துகள் பரிந்துரைக்கின்றனர். தேவைப்படின் ஆய்வுகூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
நோயாளர்கள் ஒருமுறை பரிந்துரைத்த மருந்துகளை தொடர்ச்சியாக மாதக் கணக்கில் பயன்படுத்துகின்றனர். மாதந்தம் வைத்திய அதிகாரிகளிடம் செல்வதில்லை. ஒரு மருந்தை தொடர்ச்சியாகப் பாவிப்பதால் நோயாளிக்கு பக்கவிளைவுகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. நோயாளி மாதாந்தம் வைத்திய அதிகாரிகளிடம் நோய் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டு பரிந்துரைகளைப் பெற வேண்டும்.
மருந்தின் அளவை அதிகரித்தோ அல்லது குறைத்தோ வழங்க வேண்டிய பொறுப்பு வைத்திய அதிகாரிகளுக்கு உள்ளது. நோயாளர்கள் பாதுகாப்புக் கருதி மாதாந்தம் வைத்திய அதிகாரிகளிடம் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.
படுக்கையான நோயாளர்களுக்கென பிரதி திங்கட்கிழமைகளில் தனியான சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. படுக்கையான நோயாளர்களை கிளினிக் தினத்தில் கொண்டுவர முடியாதவர்கள் பிரதி திங்கட்கிழமைகளில் நடைபெறும் கிளினிக்குகளுக்கு அழைத்து வர முடியும். அவ்வாறு கொண்டு வர இயலாதவர்கள் அருகில் உள்ள இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்துள்ள வைத்திய அதிகாரி மூலம் பார்வையிட்டு, அவரால் வழங்கப்படும் அறிக்கையைச் சமர்ப்பித்து வைத்தியசாலையில் மருந்து பெற்றுக் கொள்ளலாம் - என்று வைத்திய சாலை நிர்வாகம் தெரிவித்தது. (ற-9)

> மருந்தின் அளவை அதிகரித்தோ அல்லது குறைத்தோ வழங்க வேண்டிய பொறுப்பு வைத்திய அதிகாரி களுக்கு உள்ளது. நோயாளர்கள் பாதுகாப்புக் கருதி மாதாந்தம் வைத்திய அதிகாரிகளிடம் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.



## மன்னார் சன்னார் முகாமில் 231 பேருக்குப் பயிற்சி முடிவு

மன்னார், நவ.14
மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சன்னார் இராணுவ பயிற்சி முகாமில் இருந்து 231 சிப்பாய்கள் பயிற்சி முடித்து வெளியேறினர்.
அவர்களைக் கௌரவிக்குமு நிகழ்வு நேற்றுமுன்தினம் முகாமில் நடைபெற்றது.
இராணுவ பொலிஸ் உயர் அதிகாரி கேணல் எச்.வல்கம, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பயிற்சியை முழுமை செய்த இராணுவத்தினரின் உறவினர்கள் அதில் கலந்து கொண்டனர். இதன்போது இராணுவ கூட்டுப்பயிற்சியும் மக்களுக்கு காண்பிக்கப்பட்டது. (ற-21,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி ஆசிரியர்களின் தரத்தை உயர்த்த தேசியக் கொள்கை தேவை

## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

சாவகச்சேரி, நவ.14
முன்பள்ளிகள் நாடு முழுவதும் இயங்குகின்ற போதும் ஆசிரியர்கள் இன்னமும் குறைந்த வருமானம் பெற்று சிறார்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றனர். அவர்களின் தரத்தை உயர்த்த தேசிய ரீதியிலான கொள்கை உருவாக்கப்படல் வேண்டும். இவ்வாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.
உதயன் குழும ஏற்பாட்டில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் மகிழ் களம் நிகழ்வு நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுவது போன்று முன்பள்ளிச் சிறார்களுக்கும் இலவச சீருடை இலவச உணவு போன்றவை வழங்கக்கூடிய தேசிய கொள்கை ஒன்றை நாடாளுமன்றத்தில் உருவாக்க யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க வேண்டும்.
முன்பள்ளிகள் நாடு முழுவதும் இருந்த போதிலும் ஆசிரியர்கள் இன்னமும் குறைந்த வருமானம் பெற்று, சிறார்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றனர். ஒவ்வொரு நிகழ்வும் சிறப்பாக காண்பதற்கு ஒவ்வொரு ஆசிரியரும் முன்பள்ளிச் சிறார்களை பழக்கி எடுப்பதில் எவ்வளவு கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதை காணக்கூடியதாக இருந்தது. ஒவ்வொரு நிகழ்வும் சிறப்பாக அமைந்திருந்தன. அதற்கு முழுமையாக அக்கறையுடன், செயற்படுத்தியவர்கள் ஆசிரியர்களே. அவர்களின் தரத்தை உயர்த்த தேசிய ரீதியிலான கொள்கை உருவாக்கப்படல் வேண்டும். வடமாகாண சபையால் மாகாண முன்பள்ளி நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டது. அதன் பிரகாரம் முன்பள்ளிகள் மற்றும் ஆசிரியர்களின் விவரங்கள் பதிவுகள் நடைபெற்று வருகின்றன. முன்பள்ளிகளின் அடிப்படைத் தேவைகள் தொடர்பாக தேசிய கொள்கை ஒன்று அவசியம். நாடாளுமன்றத்தில் உருவாக்க வேண்டும். அவ்வாறு உருவாக்கப்படும் பட்சத்தில் இன்னும் அதிகமான சேவைகளை ஆசிரியர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்கலாம்.
இந்த வருட வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசார் அலுவலர்கள் போன்றோருக்கு பயிற்சிகள் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டன. சிறார்களின் ஆரம்ப பிள்ளைப் பருவக் கல்வியை கற்பிக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்குவது தொடர்பான அறிவிப்புகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாயத்தை முன்பள்ளியில் உருவாக்கும் ஆசிரியர்களின் தரத்தை உயர்த்த நாடாளுமன்றத்தில் தேசிய கொள்கை உருவாக்க எமது மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்பள்ளிகள் வளம் பெற்று, சிறந்த கற்பித்தல் சேவைகள் வழங்கும்போது சிறந்த சமூகத்தை உருவாக்கும் ஆற்றல் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களை நாம் காண முடியும். பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போன்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கு போதிய பயிற்சிகள் வழங்கப்படின் ஆரோக்கியமான பயன்களை நாம் காணமுடியும்–என்றார்.
(ற-21,9)

# கடை உடைத்து கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் நால்வர் கைது

கொழும்பு, நவ.14
வெள்ளவத்தையில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றை உடைத்து கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் நால்வரை பொலிஸார் கைது செய்தனர். சந்தேகநபர்களிடம் இருந்து முச்சக்கர வண்டி உள்ளிட்ட பல பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
கொள்ளையிட்ட பொருள்களுடன் 2 இலட்சத்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான பணத்தொகையும் பறிமுதல் செய்யப்பட்டது. குறித்த சந்தேகநபர்கள், எப்பாவல மற்றும் நுகேகொடை பகுதியை சேர்ந்தவர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்தது. சந்தேக நபர்களை கல்கிஸ்ஸை நீதிவான் மன்றத்தில் முற்படுத்தவுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ற)

# நாடு கடந்த குற்றங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை

நாடு கடந்த குற்றங்களைத் தடுப்பது குறித்து இலங்கையும், இந்தோனேஷியாவும் கலந்துரையாடல்களை மேற் கொண்டுள்ளன. இரு நாட்டு உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு இடையே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. இரு நாட்டு எல்லைகளின் ஊடாக இடம்பெறும் நாடு கடந்த குற்றங்களைக் கட்டுப்படுத்த புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் இதன்போது ஆராயப்பட்டது.
இன்ரர்போல் எனப்படும் சர்வதேச குற்றவியல் பொலிஸ் அமைப்பின் 85 ஆவது பொதுச் சபை அமர்வு இந்தோனேஷியாவில் நடைபெற்றது. அதில் பங்குக்கொள்ளச் சென்ற இலங்கையின் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, இந்தோனேஷிய உயர்மட்ட பொலிஸ்அதிகாரிகளுடன் கலந்துரையாடினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# கப்பம் பெறும் யுகத்தை நாம் முடிவுறுத்தினோம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, நவ.14
நாட்டில் காணப்பட்ட கப்பம் பெறும் யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்ததன் காரணமாக தாம் சுதந்திரமாக மூச்சு விடுகின்றோம் என்று வர்த்தகர்கள் சிலர் என்னிடம் நன்றி கூறினர்.
இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.
வெயங்கொடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
வெயங்கொடை, நிட்டம்புவ பிரதேசங்களில் உள்ள சகல வர்த்தகர்களையும் கொலை செய்வதாக அச்சுறுத்தி கடந்த காலத்தில் கப்பம் பெற்றனர். அதிகாலை இரண்டு, மூன்று லட்சம் ரூபாவை கொண்டு வந்து தராவிட்டால் கொன்று விடுவோம் என்று மிரட்டி கப்பம் பெற்றனர். வெயங்கொடை மற்றும் நிட்டம்புவ பிரதேசங்களில் வர்த்தகம் செய்வோரில் பெரும்பாலானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள்.
புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர், வர்த்தகர்கள் என்னை சந்தித்து ஜனவரி 8 ஆம் திகதிக்கு பிறகுதான் தாம் பயமின்றி, சுதந்திரமாக வர்த்தகம் செய்வதாகக் கூறினர்.
முன்னாள் அமைப்பாளரின் ஆதரவாளரான பிரதேச சபையின் முன்னாள் தலைவர் மற்றும் அவரது சகாக்கல் ஆகியோர் வர்த்தகர்களை தொலைபேசியில் தொடர்புக் கொண்டு நாளை காலை எமக்கு 2 லட்சம், மூன்று லட்சம் ரூபா வழங்க வேண்டும் எனக் கேட்டனர். ஒரு வர்த்தகரிடம் 6 லட்சம் ரூபா கோரினர்.
தனக்கு அந்தளவு பணத்தை தரமுடியாது, அப்படி வழங்கினால் தான் வர்த்தகத்தை மூடிவிட வேண்டும் என்று அந்த வர்த்தகர் கூறினார். ஒரு வாரம் கால அவகாசம் வழங்கினர். ஒரு வாரம் கடந்தும் அவர் பணத்தை கொடுக்கவில்லை. இதனையடுத்து அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நாளைகாலை6லட்சம் பணத்தை கொண்டு வந்து தரவில்லை என்றால்–கொன்று விடுவோம் என்று மிரட்டினர். அந்த வர்த்தகர் மனைவி மற்றும் பிள்ளைகளைக் கைவிட்டு பிரதேசத்தை விட்டு சென்றுவிட்டார். அரசு மாறும் வரை அவர் வரவில்லை. ஏனையோரின் நிலமையும் இதுதான். நண்பர்களே தற்போது அத்தனகல்லயில் கப்பம் பெறும் யுகம் முடிந்து விட்டது - என்றார். (ற)

# சந்தை வாய்ப்பு உருவாக்கினால் உற்பத்திகளை அதிகரிக்கலாம்

## யாழ்.மாவட்ட விவசாயிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.14
உற்பத்திப் பொருள்களுக்கான நியாயமான சந்தை வாய்ப்புக்கள் உருவாக்கித் தரப்பட்டால், ஏற்றுமதிக்குத் தேவையான மரக்கறிகள், பழ வகைகளை எம்மால் உற்பத்தி செய்து தர முடியும்.
இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.
வடக்கு மாகாண ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் பழச் செய்கை மற்றும் மரக்கறிச் செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கையின் முன் செய்ய வேண்டிய தொழில்நுட்ப முறைகள் தொடர்பாகவும், அறுவடைக்குப் பின்னர் செய்ய வேண்டிய தொழில்நுட்ப முறைகள் தொடர்பானதுமான கருத்தரங்கு நேற்றுமுன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் இரகுமான் அதில் கருத்துத் தெரிவித்தார்.
தற்போது இலங்கை பல நாடுகளுக்கு மரக்கறி மற்றும் பழங்களை ஏற்றுமதி செய்து வருகின்றது. நாங்கள் அதே ஏற்றுமதியில் ஈடுபடும் பல நாடுகளுடன் போட்டி போடவேண்டியுள்ளது. எங்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் உற்பத்தி காலத்திலும் அறுவடைக்கும் பின்னும் புதிய தொழில்நுட்பங்களை கையாண்டு அதனை பாதுகாப்பான முறையில் பொதியிடல் செய்து ஏற்றுமதி செய்யப்படல் வேண்டும். நுகர்வோரின் தேவைகளை இனங்கண்டு அவர்களை ஈர்ப்பதன் மூலம் எங்கள் உற்பத்தி பொருள்களை சந்தைப்படுத்த முடியும். இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை அதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தனிநபராகவோ அல்லது கூட்டுறவு அமைப்புக்களாகவோ மேற்கொள்ளும் போது அதற்குரிய வழிவகைகளை எம்மால் ஏற்பாடு செய்து தர முடியும்– என்று அவர் தெரிவித்தார்.
பின்னர் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் தமக்குத் சந்தை வாய்ப்புகள் உருவாக்கித் தரப்பட்டால் ஏற்று மதிக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்து தரமுடியும் என்று குறிப்பிட்டனர்.
எங்களுக்கு நியாயமான விலைகளில் சந்தைப்படுத்துக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரப்பட்டால் எங்களால் பன்னிரண்டு மாதமும் மரக்கறி, பழச் செய்கையை மேற்கொண்டு ஏற்றுமதிக்கு உகந்த முறையில் உற்பத்தி செய்து தருவோம். தற்போது பச்சைமிளகாய் 30 ரூபாவுக்குத்தான் சந்தைப்படுத்துகின்றோம். நாங்கள் வெங்காயம் அறுவடை செய்யும் காலத்தில் இறக்குமதி வெங்காயம் வந்துவிடுகிறது. இவ்வாறான நடவடிக்கைகளால் நாங்கள் விவசாயம் செய்ய முடியாது திண்டாடுகிறோம். உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான சந்தை வாய்ப்பு ஏற்படுத்தி தருவீர்களானால் எம்மால் பழங்களையும் மரக்கறியையும் உற்பத்தி செய்து தரமுடியும்– என்று அவர்கள் கூறினர்.



கலந்துடையாடலில் யாழ். மாவட்டச் செயலாளர், யாழ். மாவட்டச் செயலகதிட்டமிடல் பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வடமாகாண பணிப்பாளர், யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளன நிறைவேற்றுப் பணிப்பாளர், விவசாய கல்லூரி பிரதி பணிப்பாளர், மாவட்டச் செயலக விவசாயப் பணிப்பாளர், மாவட்ட ஏற்றுமதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
(ற-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பன்னாட்டு நீதிபதிகளை நிராகரிப்பதை வெளிநாடுகள் ஏற்றுக் கொண்டுவிட்டதா?

உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும்போது பன்னாட்டு நீதிபதிகளை ஏற்க முடியாது என பன்னாட்டுக்கு கூறிவிட்டேன். நான் அடைந்த வெற்றிகளில் இதுவும் ஒன்று என்பதாக இந்திய ஆங்கிலப் பத்திரிகையான தஹிந்துவுக்கு வழங்கியுள்ள நேர்காணல் ஒன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியதாக செய்தி வெளிவந்துள்ளது.

பொறுப்புக்கூறல் பொறிமுறையில் போரின் இறுதிக் கால போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகளை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதை ஜனாதிபதி பல தடவைகளில் கூறிவந்தார் என்பது உண்மைதான். அந்தக்கருத்தை பன்னாட்டுச் சமூகத்துக்கு எந்த முறையில் தெரிவித்தார். எழுத்து மூலமாக அல்லது பன்னாட்டு நிகழ்வொன்றில் அதுவும் இல்லையெனில் இங்கு வந்து போயுள்ள ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளர் போன்றவர்களிடமாவது அதிகாரபூர்வமாக அறிவுறுத்தி யுள்ளாரா என்பது இன்னமும் உறுதியாக வெளியிடப்படவில்லை. அவ்வாறு செய்திருப்பின் அதில் வெளிப்படைத் தன்மை இருந்திருக்கவேண்டும். இன்னும் சொல்வதானால் ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டை பன்னாட்டுச் சமூகம் ஏற்றுக்கொண்டுவிட்டதா என்பதும் வெளிப்படுத்தப்படவில்லை. ஒருவேளை இந்த விடயத்தில் ஐ.நா.மனித உரிமைகள் சபை போன்றவை மௌனமாக இருந்து வருவதை அவைகளின் அங்கீகாரத்தைக் குறிப்பதாக ஜனாதிபதி கருதுவதாக இருக்கலாம்.

இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கும் தீர்மானமானது ஜனாதிபதியின் ஒருதலைப்பட்ச முடிவால் நிராகரித்துவிட முடியுமா என்பது இனிமேல்தான் தெரியவரவேண்டும்.

எதுவானாலும் பன்னாட்டு நீதிபதிகள் விசாரணைப் பொறிமுறையில் இணைக்கப்படுவதை இதில் சம்பந்தப்பட்டுள்ள முக்கிய தரப்பான போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன என்பதை ஜனாதிபதியானால் என்ன வெளிநாடுகளானால் என்ன முதலில் கண்டறிய வேண்டும். தமிழ் மக்களின் முக்கிய தரப்பினரான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இதில் தீர்க்கமான முடிவை வெளிப்படுத்தியிருக்கவில்லை. பார்க்கப் போனால் ஜனாதிபதி மைத்திரிபால தரப்பிலேயே இந்தக் கருத்து வலியுறுத்தப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

அந்த நேர்காணலில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள கருத்துக்களில் தற்போது நாங்கள் நீதித்துறையை சுயாதீனமாகவும் பக்கச்சார்பற்றதாகவும் உருவாக்கியிருக்கிறோம். வெளிநாட்டு நீதித்துறை நிபுணர்களிடமிருந்து நாம் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம். எமது அரசமைப்பின் பிரகாரம் நீதித்துறை செயற்பாட்டில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்கேற்பு சாத்தியமற்றது. அரசமைப்புக்கு எதிராக நான் செயற்பட முடியாது. வடக்கு மக்கள் முழுமையாக நம்பிக்கை வைக்கும் வகையிலான நீதிப்பொறிமுறையை நாம் உருவாக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவாகி 22 மாதங்கள் ஆகியுள்ள நிலையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் அபரிமிதமாக இன்னமும் ஏதும் செய்து விடவில்லை. ஆங்காங்கே காணிகள் விடுவிக்கப்பட்டதையும் சில பகுதிகளில் வீடுகள் அமைக்கப்பட்டதையும் பெரிதாக எடுத்துக் கொள்ள முடியாது. தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டமை தம்மை கொலை செய்ய முயன்றதாக் குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் போராளியை மன்னித்தமை போன்றவை ஜனாதிபதியின் நல்லிணக்க செயற்பாடுகளாய் இருக்கலாம்.

முன்னாள் இராணுவத்தினர் நீதிமன்றங்களில் குற்றவாளிக்குரிய கூண்டுகளில் நிறுத்தப்படுவதற்கு எதிராக பெரும் சலசலப்பை ஏற்படுத்தியிருந்த அவரால் வருடக் கணக்கில் வெஞ் சிறையில் வாடுகின்ற குற்றம்சுமத்தப்படாத தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியவில்லை. விடுவிக்க மனமில்லையென்றால் நம்பிக்கையை எவ்வாறு கட்டி எழுப்ப முடியும். தமிழ்ப்பகுதிகளில் தேவையில்லாமல் குவிந்து கிடக்கும் இராணுவத்தினரை அப்புறப்படுத்த முடியாது போனாலும் பொதுமக்களுக்குரிய பலசரக்கு கடைகளை நடத்துவது, சிகை அலங்கரிப்பு நிலையங்களை நடத்துவது, பாலர் பள்ளிகளை பராமரிப்பது போன்ற காரியங்களில் ஈடுபடாமல் கூட இராணுவத்தை இந்த அரசினால் தடுக்க முடியவில்லையென்றால் நம்பிக்கை எங்கே துளிர்விடும்?

வரும் மார்ச் மாதம் கூடவிருக்கும் மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான அறிக்கை வரும்போது விசாரணை பொறிமுறை பற்றிய அம்சம் வெளிப்படவே செய்யும். விசாரணைகளில் பன்னாட்டு நீதிபதிகளும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று கடந்த முறை இலங்கை அரசின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை செயல்படுத்துவதற்கு இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அவசியம் விளக்கமளிக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். அப்போது ஜனாதிபதியின் மிகப் பிந்திய நிலைப்பாடு பன்னாட்டினால் ஏற்றுக் கொள்ளப்படுமா அல்லது நிராகரிக்கப்படுமா எனப்பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

# குழம்பிய நிலையில் தமிழக அரசியல்

சேரலாதன்

இந்தியாவின் தமிழ் நாட்டில், ஆளும் அ.தி.மு. கவினர் மத்தியில் பதற்றமானதும் நிச்சயமற்றதுமான நிலையொன்று காணப்படுகின்றது. அந்தக் கட்சியின் தலைவியும் , மாநில முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா கடந்த இரண்டு மாதங்களாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றார். அவரது நோய் தொடர்பாகவும், உடல் நிலையின் முன்னேற்றம் பற்றியும் தெளிவற்ற மருத்துவ அறிக்கைகள் வெளியாகிக் கொண்டிருப்பதால், கட்சித் தொண்டர்கள் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர். மாநில ஆளுநர் உட்பட அமைச்சர்கள் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள்கூட முதல்வரை நேரில் பார்க்க முடியவில்லை. மருத்துவர்கள் கூறுவதையே அவர்கள் நம்பவேண்டிய நிலையில் காணப்படுகின்றனர். இவர்கள் கூறுவதையே கட்சித் தொண்டர்களும் கேட்க வேண்டியுள்ளது. மருத்துவமனைத் தகவல்களின் பிரகாரம் ஜெயலலிதா இன்னமும் முழுமையாகச் சுகம் பெற்று, பழைய நிலமைக்குத் திரும்புவதற்குஅதிகநாள்கள்பிடிக்குமென்பதும் தெளிவாகத் தெரிகின்றது.



### ஜெயலலிதா ஓர் அசாதாரணப் பெண்மணி

ஜெயலலிதா என்ற பெண்மணி சாதாரணமான ஒருவரல்ல. சுமார் ஏழுகோடி மக்கள் தொகையைக் கொண்ட ஒரு மாநிலத்தின் முதலமைச்சர். ஆளும் கட்சியில் எல்லாமே தாமென நினைக்கின்ற ஒருவர். தமது அதிகாரத் திறமையால் கட்சியிலுள்ள அனைவரையும் பணியவைக்கக் கூடிய திறமையாளர். அவர் இல்லாததொரு நிலையை அ.தி.மு.கவினர் எண்ணிகூடப் பார்க்கமுடியாது. இதனால்தான் அவர் மருத்துவமனையில் தொடர்ந்து சேர்க்கப்பட்டிருப்பதை அந்தக் கட்சியின் சாதாரண தொண்டனால்கூட பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தற்போது பதில் முதலமைச்சர் பொறுப்பை வகிக்கின்ற ஓ.பன்னீர்ச்செல்வம், முன்னரும் சில தடவைகள் அந்தப் பொறுப்பை வகித்த அனுபவத்தைக் கொண்டவர். ஜெயலலிதாவின் நம்பிக்கைக்கும் பாத்திரமாகத் திகழ்ந்தவர். ஆனால் ஒரு கட்டத்தில் ஜெயலலிதா இவரை ஒதுக்கி வைக்கவும் தயங்கவில்லை. தற்போது ஏதோவொரு காரணத்தால் பன்னீர்ச் செல்வம் மீண்டும் அந்தப் பொறுப்பில் அமர்ந்திருக்கிறார். ஆனால் அரசு நிர்வாகம், ஆமைவேகத்தில் நகர்ந்து செல்வதாக எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன. பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. ஒருபடி மேலே போய், மக்களிடம் அரசின் கையாலாகத்தனங்களை வெளிச்சம் போட்டுக் காட்டி வருகின்றது. ஜெயலலிதா இல்லாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் அ.தி.மு.கவின் பலவீனத்தை பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க பயன்படுத்த விளைவதும் தெளிவாகத் தெரிகின்றது. மாற்றுக் கட்சிகளை உடைப்பதில் எதிர்க் கட்சித் தலைவரும் தி.மு.க. பொருளாளருமான மு.க.ஸ்ராலின் வல்லவரெனப் பெயர் எடுத்தவர். ஏற்கனவே வைகோ தலைமையிலான ம.தி.மு.க, விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க. ஆகியவை பிளவுபட்டதற்கும் அங்கிருந்து பலர் தி.மு.க. பக்கம் தாவியதற்கும், ஸ்ராலினே காரணம் எனக் கூறப்படுகின்றது. அவர் தற்போது அ.தி.மு.கவில் உள்ள அதிருப்தி எம்.எல்.ஏக்களுடன் பேரம் பேசுவதில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் ஓரளவு வெற்றி கிடைத்துவிட்டதாகவும், சுமார் 12 அ.தி.மு.க எம்.எல். ஏக்கள், தி.மு. க பக்கம் தாவுவதற்குத் தயார் நிலையில் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.ஆனால் இந்த ஏற்பாட்டில் தி.மு.க தலைவர் மு.கருணாநிதிக்கு உடன்பாடு இல்லையெனவும், அவர் இது தொடர்பாக ஸ்டாலினுக்கு தெரிவித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இதில் எந்த அளவுக்கு உண்மையுள்ளது என்பது தெரியவில்லை. தற்போது தமிழக சட்டமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை எடுத்துப்பார்த்தால், தி.மு.க, அ.தி. மு.க.வுக்கு அடுத்த நிலையில் பலமாக உள்ளது

தி.மு.கவுக்கு இன்னமும் சுமார் 20 சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்துவிட்டால், அந்தக்கட்சியினால் ஆட்சியை அமைக்க முடியுமென்பது கவனிக்கத்தக்கது. தமிழ்நாட்டில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் விரைவில் நடைபெறுமெனத் தெரிகின்றது. அ.திமு.க. மற்றும் தி.மு.க. ஆகிய இரண்டு கட்சிகளின் தற்போதைய தத்தமது பலத்தை எடை போட்டுப் பார்க்கப் போகின்ற தேர்தலாக இது அமையும் என்பதில் சந்தேகமில்லை.ஜெயலலிதா இல்லாமல் அ.தி. மு.க, சாதித்துக் காட்டுமா என்பதும் இந்தத் தேர்தலின் மூலமாகத் தெரிந்துவிடும்.

### முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு எவருமே ஈடாகமுடியாது

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் மக்களின் அபிமானத்தைப் பெற்ற சினிமா நடிகருமான மறைந்த எம்.ஜி.இராமச்சந்திரன் உயிருடன் இருக்கும் வரையில், தமிழ்நாட்டில் இடம் பெற்ற அனைத்துத் தேர்தல்களில், அவர் தலைமை தாங்கிய அ.தி.மு.க. வெற்றிபெற்றது. அரசியலில் சாணக்கியரெனப் பெயர்பெற்ற கலைஞர் கருணாநிதியால்கூட எம்.ஜி.ஆரை அசைக்க முடியவில்லை. அந்த அளவுக்கு மக்களிடம் அவரது செல்வாக்கு உச்சத்தில் உயர்ந்து காணப்பட்டது. ஆனால் எம்.ஜி. ஆருடன் ஒப்பிட்டுக் கூறும் வகையில் ஜெயலலிதா இல்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். ஆனால் ஜெயலலிதாவுக்கு ஈடான தலைவர் ஒருவர் அ.தி.மு.கவில் இல்லை என்பது தான் அந்தக் கட்சிக்குப் பெரும் பின்னடைவாக உள்ளது.

இந்த நிலையில் தி.மு.கவில் எதிரும் புதிருமாக இருந்த மு.க. அழகிரியும், ஸ்ராலினும் தற்போது சற்று நெருங்கி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது தி.மு.கவுக்கு வலுச்சேர்க்கும் ஒரு விடயமாகும். தமிழ் நாட்டின். தென் மாவட்டங்களில் அழகிரிக்கு இப்போதும் செல்வாக்கு உண்டு. அந்தக் கட்சியில் கலைஞர் கருணாநிதிக்கு அடுத்த நிலையிலுள்ள தலைவர்களும் கட்சியை வழிநடத்திச் செல்லக் கூடிய ஆற்றல் படைத்தவர்களாக உள்ளனர். முதுமை காரணமாக கருணாநிதி இயற்கை எய்தினாலும்கூட கட்சிக்குப் பெரும்பாதிப்பு ஏற்பட்டுவிடாது. ஆனால் அ.தி.மு.க. பக்கம் அந்த நிலை காணப்படவில்லை. அம்மாவை நம்பித்தான் எல்லாமே அங்கு இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனால்தான் அவர் மாதக் கணக்கில் மருத்துவ மனையைத் தஞ்சமடைந்துள்ளதைக் கட்சிக்காரர்களால் தாங்கிக்கொள்ளமுடியவில்லை. ஆனால் ஜெயலலிதா குணமடைந்து வந்தாலும், அவரால் முன்புபோல அரசிய லில் செயற்பட முடியுமா என்பது சந்தேகமே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா-இலங்கை உறவில் விரிசல் ஏற்பட்டு விட்டதா?

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றின் பிரகாரம் சீனா மற்றும் சிறிலங்காவின் உறவு மிகவும் நெருக்கமானதாகக் காணப்பட்டு வந்தது. எனினும், 1952 தொடக்கம்2014 வரையான ஆறு பத்தாண்டு கால சீன–சிறிலங்கா உறவு நிலையானது மேலும் நெருக்கமானதாகக் காணப்பட்டது. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக, இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக அண்மையில் சீனத் தூதுவர் ஜி ஷியாங் லிங் மற்றும் சிறிலங்காவின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இடையிலான சூடான வார்த்தைப் பிரயோகங்கள் இந்த உறவில் மேலும் சீர்குலைவை ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்காவின் முன்னாள் ஆட்சியாளர் ராஜபக்சவின் இரண்டாம் ஆட்சிக்காலத்தில் சிறிலங்கா மீது சீனா அதீத செல்வாக்கைச் செலுத்தியிருந்தது. இதன் காரணமாக தற்போதைய அரசானது மிகப்பெரிய நிதி நெருக்கடிக்கு முகங் கொடுத்துள்ளது.

சீன ஆயுதங்களைக் கொண்டு தமிழ்ப் புலிகளுடன் போர் புரிந்த ராஜபக்ச அரசு போருக்குப் பின்னான அபிவிருத்தித் திட்டங்களுக்காக 15.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை சீனாவிடமிருந்து பெற்றுக் கொண்டது. ராஜபக்ச அரசு மீது மேற்குலக நாடுகளால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட போது தன்னை அதிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக ராஜபக்ச சீனாவின் உதவியைப் பெரிதும் நாடினார். இதனைச் சீனா சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது. ராஜபக்சவின் இந்தச் செயலால் சீன நிறுவனங்கள் சிறிலங்காவில் தமது திட்டங்களை மேற்கொண்டன. ராஜபக்சவும் சீன வங்கிகளிடமிருந்து உயர் வட்டி வீதத்தில் கடன்களைப் பெற்றுக் கொண்டார்.

ஆனால் சிறிலங்காவின் சில அரசியல்தரப்பினர் ராஜபக்சவின் சீன நிதித்திட்டங்கள் தொடர்பாக பல்வேறு வினாக்களை வினவினர். போருக்குப் பின்னர் ராஜபக்சவால் அதிகாரத்துவ மற்றும் ஊழல் மோசடி மிக்க ஆட்சி மேற்கொள்ளப்பட்டதால் சீனாவுக்கு எதிரான சிறிலங்கா வாழ் அரசியற் சமூகமானது ராஜபக்சவின் ஆட்சியை எதிர்க்கத் தொடங்கியது.

இதன்விளைவாக ராஜபக்ச அரசுக்கும் சீனாவுக்கும் இடையிலான நிதித் திட்டங்களில் ஏற்பட்ட பல்வேறு மோசடிகள் தொடர்பாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பல மில்லியன் டொலர் திட்டங்கள் எந்தவொரு ஏலங்களுமின்றி ராஜபக்ச அரசினால் சீனாவிடம் கையளிக்கப்பட்டன.

> சீனக் கடன் வட்டியானது மிகவும் அதிகமானதாகும். சீனக் கடன்களின் பெரும் பகுதியானது 2 சதவீத வட்டிக்கே வழங்கப்பட்டதாகவும் ஆனால் சிறிலங்கா இதனை ஆறு சதவீதத்திற்கு அதிகரிக்க வழிவகுத்ததாகவும் சீனத் தூதுவர் ஜி சியான் லிங் சுட்டிக்காட்டினார். ஆனால் சீனாவின் 2 சதவீதக் கடன் கூட அதிகம் எனவும் யப்பான் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் 0.1 தொடக்கம் 1 சதவீத வட்டி அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அதிபர் தேர்தலில், ராஜபக்ச தோல்வியடைந்ததுடன் சீன சிறிலங்கா உறவு நிலையும் ஆட்டம் காணத் தொடங்கியது. இத்தேர்தலில் ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்ட கூட்டு எதிர்க்கட்சி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றார். சிறிசேனவுக்கு ஆதரவான ஐக்கிய தேசியக் கட்சி 2015 ஜூலை மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றது.

அதிபர் சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரால் முதற்கட்டமாக சீனத் திட்டங்கள் சில இடைநிறுத்தப்பட்டன. இது சீனாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. குறிப்பாக 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான கொழும்புத் துறைமுக நகரத் திட்டமானது சீன அதிபர் ஷி ஜின்பிங்கால் ஆரம்பிக்கப்பட்டு ஒரு சில மாதங்களே ஆகியிருந்தன. சீனத் திட்டங்கள் அனைத்தும் சிறிலங்கா அரச முகவர்கள்இ அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றத்தால் சரிபார்க்கப்பட்டே அனுமதியளிக்கப்பட்டதாக சீனா தெரிவித்தது.

### குற்றச்சாட்டுக்களை மறுக்கும் சீனர்

தன் மீதான ஊழல் மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டை சீனா ஏற்கமறுத்தது. உடன்படிக்கைகளுக்கு மாறாக சிறிலங்கா அரசு செயற்பட்டால் அது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் சிறிலங்காவின் நற்பெயருக்குக் களங்கத்தையே ஏற்படுத்தும் என சீனா எச்சரித்தது. ஆனால் சிறிலங்காவின் தற்போதைய அரசு இதனைக் கருத்திற் கொள்ளவில்லை.

நெடுஞ்சாலைத் திட்டங்களுக்காக சீனாவால் வழங்கப்பட்ட கடனானது அனைத்துலக ரீதியில் கைக் கொள்ளும் செலவினத்தை விட 55 சதவீதம் அதிகமானதாகும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் வல்லுநரும் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியருமான அமல் எஸ். குமாரகே தெரிவித்திருந்தார்.

சீனக் கடன் வட்டியானது மிகவும் அதிகமானதாகும். சீனக் கடன்களின் பெரும் பகுதியானது 2 சதவீத வட்டிக்கே வழங்கப்பட்டதாகவும் ஆனால் சிறிலங்கா இதனை ஆறு சதவீதத்திற்கு அதிகரிக்க வழி வகுத்ததாகவும் சீனத் தூதுவர் ஜி சியான்லிங்க் சுட்டிக்காட்டினார். ஆனால் சீனாவின் 2 சதவீதக் கடன் கூட அதிகம் எனவும் யப்பான் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியால் 0.1 தொடக்கம் 1 சதவீத வட்டி அறவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### இலங்கையர்கள் சோம்பேறிகள்

இலங்கையர்கள் வினைத்திறனற்றவர்கள் மற்றும் சோம்பேறிகள் எனவும் ஏற்கனவே சீனாவால் சிறிலங்காவுக்கு 15.5 பில்லியன் டொலர் வழங்கப்பட்டுள்ள போதிலும் இலங்கையர்கள் நன்றிமறந்தவர்களாக உள்ளதாகவும் சீனத் தூதுவர் குற்றம் சுமத்தியிருந்தார். சீனா இரண்டு சதவீத வட்டிக்கே கடன் வழங்கியிருந்தால் நாங்கள் இரண்டு சதவீத வட்டிக்கே மீளவும் கடனைச் செலுத்துவோம். இது எமக்கு நல்லதல்லவா? என கருணாநாயக்க ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

*புதினப்பலகை*

---

## போக்குவரத்து சீர்கேடு சம்பந்தமான பதிவு - வழித்தட இல.782 காரைநகர்-யாழ்ப்பாணம் பஸ் சேவை

மேற்படி காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் 782 ஆம் இலக்க அரச பஸ் சேவையின் விசித்திரத்தை (எனக்கு ஏற்பட்ட பாதிப்பை) இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதனை இலங்கை போக்குவரத்துச் சபைக்கான பகிரங்க முறைப்பாடாகக் கருதி தங்கள் பத்திரிகையின் வாசகர் திருமுகத்தில் வெளியீடு செய்து உதவுமாறு தங்களைத் தயவுடன் வேண்டி நிற்கின்றேன்.

கடந்த 2ஆம் திகதி மு.ப 10.30 மணியளவில் மானிப்பாய்இலங்கை வங்கிக்குச் செல்வதற்காக, சங்கானை பஸ் நிலையத்தில் தரித்து நின்றேன். அப்பொழுது காரைநகரிலிருந்து 782 ஆம் இலக்க அரச பஸ் அந்த இடத்துக்கு வந்தது. அந்த பஸ்ஸில் 782 யாழ்ப்பாணம் என மட்டுமே எழுதப்பட்ட பெயர்ப்பலகை இருந்தது. நானும் இன்னும் பல பயணிகளுமாக அந்த பஸ்ஸில் ஏறிக்கொண்டோம். அப்பொழுது நடத்துநர் என்னிடம் வந்து பற்றுச்சீட்டு வழங்குவதற்காக எங்கே செல்ல வேண்டும் என வினவினார். நான் மானிப்பாய் என்று பதிலளித்தேன் மானிப்பாயில் எவ்விடம் என மீண்டும் வினவினார். நான் மானிப்பாய் இலங்கை வங்கிக் கருகில் எனப் பதிலளித்தேன். அவர் எனக்கு ரூபா 12 பெறுமதியான பற்றுச்சீட்டு வழங்கினார். என்னுடன் ஏறிய இன்னும் நால்வரும் (ஒரு விஞ்ஞான ஆசிரியர் மற்றும் மூன்று மகளிர்கள்) மானிப்பாய் எனக்கூறியே பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

பஸ் சண்டிலிப்பாயால் மானிப்பாய் வீதிக்குத் திரும்பாமல், உடுவில் வீதிக்குச் செல்வதை அவதானித்த நான், பஸ்ஸை நிறுத்தி நடத்துநரிடம் ஏன் இந்த வீதியால் செல்கின்றது எனக் கேட்டேன்.

அதற்கு அவர் இந்த பஸ் மருதனார்மடத்தின் ஊடாகவே யாழ்ப்பாணம் செல்லும் என எமக்குத் தெரிவித்தார். அப்படியாயின், ஏன் மானிப்பாய்க்குப் பற்றுச்சீட்டு வழங்கினீர்கள் எனக்கேட்டதற்கு, தான் மானிப்பாய் ஊடாக பஸ் செல்லாது எனத் தெரிவித்ததாக கூறினார். அதற்கு என்னுடன் மானிப்பாய் செல்வதற்காக ஏறிய மற்றைய நால்வரும் அவ்வாறு நீங்கள் கூறவில்லை என்றும், அப்படியாயின் ஏன் ரூபா 12 பற்றுச்சீட்டு வழங்கினீர்கள் என்றும் கேள்வி எழுப்பினர். இதனை எதுவும் செவிமடுக்காது, எங்கள் ஐவரையும் கொட்டும் மழையில் இறங்குமாறு பணித்து எம்மை இறக்கி விட்டுவிட்டு பஸ்ஸை எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

மேலும் என்னிடம் ரூபா 12 பற்றுச்சீட்டு வழங்கியபோது நான் அவரிடம் 20 ரூபா தாளொன்றை வழங்கினேன். அவர் எனக்கு மீதிப்பணமாக 2 ரூபா நாணயக்குற்றிகள் இரண்டும், 1 ரூபா நாணயக்குற்றி ஒன்றும் என மீதி 5 ரூபாவே வழங்கினார். அவரிடம் சில்லறையாகவும், 5 ரூபா நாணயக் குற்றிகளும் இருந்த போதிலும், எனக்கு அவர் மீதிப் பணத்தை சரியாக வழங்கவில்லை. இவ்வாறு அந்த நடத்துநர் நடந்து கொண்டமையானது மனிதாபிமானம் அற்ற ஒரு செயலாகும். மேலும், இவ்வாறான நடத்துநர்கள் தொடர்பாக இலங்கை போக்குவரத்துச்சபை உரிய நடவடிக்கை எடுக்குமா? அல்லது தொடர்ந்து அவர்களது இத்தகைய செயற்பாடுகளை அனுமதிக்குமா? என்பதல்ல எனது பிரச்சினை. இனிவரும் காலங்களில் இவ்வாறு ஒரு நடத்துநர் நடந்து கொள்ளாமல் இருப்பதற்குரிய விதத்தில் உரிய நடத்துநருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமாயின், ஏனையோருக்கு இது ஒரு முன்னுதாரணமாக விளங்கும்.

**ச.கமலகாந்த் முகாமைத்துவ உதவியாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம்.
ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா.
எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இந்தியாவில் பணத்தட்டுப்பாடு

இந்திய அரசு இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த 500, 1000 ரூபாய் நோட்டுக்களை பாவனையில் இருந்து நீக்கியதை அடுத்து தம்மிடம் இருந்த குறித்த நோட்டுக்களை மாற்றிடுவதற்காக இந்தியா முழுவதிலும் பெரும் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. பணத்தை மாற்றுவதற்காக நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளதால் அங்கு பணத்துக்கு பெரும் தட்டுப்பாடும் நிலவுகிறது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஊழலைக் கட்டுப்படுத்துவதற்காக பல திட்டங்களை பரிசீலித்து வந்த மோடி, பழைய ஐந்நூறு, ஆயிரம் ரூபாய் தாள்களை பாவனையிலிருந்து நீக்கினார். பதிலாக புதிய ஐந்நூறு மற்றும் 2 ஆயிரம் ரூபாய் தாள்களை அறிமுகப்படுத்தினார். இந்தியாவின் கறுப்புப் பணப் பதுக்கல்கள் அதிகளவில் நடைபெற்றுவந்தன. இவற்றைக் கட்டுப்படுத்த முடியாமல் மத்திய அரசு தடுமாறியது. இதனையடுத்தே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. பாவனையிலிருந்து மாற்றப்பட்ட தாள்களை எதிர்வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசவங்கிகளிலும் ஏனைய அனுமதிக்கப்பட்ட இடங்களிலும் மாற்றலாம் எனவும் மத்திய அரசு அறிவித்தது. இதனையடுத்து தம்மிடமிருந்த நோட்டுக்களைக் கொடுத்து, புதிய வகைத் தாள்களை வாங்குவதற்காக ஒவ்வொரு இடங்களிலும் பெரும் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. பணத்தை மாற்றக்கூடிய தொகைகளும் நிர்ணயிக்கப்பட்டதால் இந்தியா முழுவதும் பணத்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. ஏ.ரி.எம். மையங்கள் உடைப்பு, வங்கி ஊழியர்களுடன் கடுமையான வாக்குவாதம் என ஏகப்பட்ட வன்முறைச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன எனவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தத் திட்டத்தின் மூலம் பதுக்கப்பட்ட பணத்துக்கான பெறுமதிகள் இல்லாமற் போயின. கறுப்புப் பணத்தை வைத்திருப்பவர்கள் அவற்றை மாற்ற முற்படும்போது பதுக்கல் தொகைகள் அம்பலமாகும் என்பது பலரதும் கணிப்பாக உள்ளது. (ம-எ)





மியன்மார், தாய்லாந்து போன்ற நாடுகளில் வருடாவருடம் கொண்டாடப்படும் வெளிச்சக்கூடுக
தற்போது கொண்டாடப்பட்டு வருகிறது. நாளை மறுதினம் வரை குறித்த விழா கொண்டாடப்ப
போல் உயிரிழந்ததையடுத்து அங்கு கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடம் விழா சிற

# மக்கள் வெள்ளத்தால் முடங்கியது சியோல்

தென்கொரியாவின் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் பார்க் ஜியுன் ஹை பதவி விலக வேண்டும் எனத் தெரிவித்து, மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டங்களை நடத்தினர்.

பார்க் ஜியுன் ஹையின் நெருங்கிய நண்பியான சோய்சூன்-சில் என்பவர் இரு பெரும் தொண்டு நிறுவனங்களை நடத்தி வந்தார். இவர் பார்க்கின் செல்வாக்கின் மூலம் ஊழல் மோசடியில் ஈடுபட்டார் எனக் குற்றஞ் சாட்டப்பட்டது. விசாரணைகளிலும் குறித்த விடயம் அம்பலமானதை அடுத்து கடந்த ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி பார்க் கியூன் ஹை, மக்களிடம் மன்னிப்புக் கேட்டார். இதனையடுத்து அவரைப் பதவியிலிருந்து விலகவேண்டும் என வலியுறுத்தி அவ்வப்போது சில போராட்டங்களும் கையெழுத்து வேட்டைகளும் நடத்தப்பட்டன. தலைநகர் சியோலில் நேற்றுமுன்தினம் மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் ஒன்றுதிரண்டு மிகப் பெரும் போராட்டத்தை நடத்தினர். இந்தப் போராட்டத்தின் மூலம் பார்க் ஜியுன் ஹைக்கு அதிகளவு அழுத்தம் ஏற்பட்டது என தென்கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)



# அம்மா நலமே

தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா சிறந்த உடல் நலத்துடன் உள்ளார் என அப்பல்லோ மருத்துவமனை அறிக்கை சமர்ப்பித்தது.



திடீர் உடல்நலக் குறைவு காரணமாக கடந்த 45 நாள்களுக்கு முன்னர் அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா. தமிழ்நாடு, டெல்லி மருத்துவர்கள் மட்டுமல்லாது, சிங்கப்பூர், இங்கிலாந்து மருத்துவர்களும் வரவழைக்கப்பட்டு, அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது அவரது உடல்நிலையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது என அப்பல்லோ மருத்துவமனை தெரிவித்தது.

அப்போலோ மருத்துவமனையின் குழுமத் தலைவர் மருத்துவர் பிரதாப் சி.ரெட்டி, ஜெயலலிதாவின் உடல்நிலை தொடர்பான விவரங்களை வெளியிட்டு அறிக்கை வழங்கினார்.

முதல்வர் ஜெயலலிதாவுக்கு இருந்த நோய்த் தொற்றுகள் குணமடைந்துவிட்டன. அவர் புத்துணர்ச்சி பெறவேண்டியுள்ளதால் இன்னும் மருத்துவமனையில் இருக்கிறார். அவர் நல்ல உடல்நலத்துடன்இருக்கிறார். மனதளவிலும், உடலளவிலும் திடமாக இருக்கின்றார். தற்போது சாதாரண உணவுகளை எடுத்துக்கொள்கின்றார். முதல்வரின் விருப்பம் பொறுத்தே வேறு விடுதிக்கு மாற்றப்படுவார். முதல்வர் வீடு திரும்புவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை பிரதாப் ரெட்டி மேலும் தெரிவித்தார். (ம-எ)

# பாரிஸ் அவலத் தாக்குதல்; ஓடி மறைந்தது ஓர் ஆண்டு


பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகரில் நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதலின் ஒரு வருட நிறைவு நேற்று பாரிஸ் நகரிலும், பிரான்ஸின் ஏனைய நகர்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி இரு கலை அரங்கங்கள் மற்றும் கால்பந்து மைதானத்தின் அருகே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் நடத்திய தொடர் தாக்குதலில் 130 பேர் சாவடைந்தனர். உலக நாடுகளிலும் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்த இந்தத் தாக்குதலின் ஒரு வருட துக்கதினம் நேற்று பிரான்ஸ் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டது.



பாரிஸ் நகரில் தாக்குதல் நடத்தப்பட்ட கால்பந்து மைதானம் கலை அரங்கம் உள்ளிட்ட ஆறு இடங்களில் பிரான்ஸ் அதிபர் பிராங்கோயிஸ் ஹாலண்டே மற்றும் பாரிஸ் நகரமேயர் அன்னி ஹிடால்கோ ஆகியோர் மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்தினர். (ம-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



டுகளை வானில் பறக்கவிடும் விழா,
ப்படும். தாய்லாந்து ஜனாதிபதி பூமி
சிறப்பாக அமையவில்லை. (ம-எ)

# டொனால்ட் ட்ரம்புக்கு பெரும் எதிர்ப்பு தொடர் போராட்டங்களும் முன்னெடுப்பு

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்புக்கு பெரும் எதிர்ப்பு வலுத்துள்ளது. அவர் ஜனாதிபதியாகக்கூடாது என்று தெரிவித்து மக்கள் போராட்டங்களும் கையெழுத்து வேட்டைகளும் நடத்தப்படுகின்றன.

அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் இடம்பெற்றது. குடியரசுக் கட்சியின் முக்கிய வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப், ஜனநாயகக் கட்சியின் முக்கிய வேட்பாளரான ஹிலாரி கிளிங்டனை வீழ்த்தி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இருந்தபோதிலும் அவர் ஜனாதிபதியாவதற்கு பெரும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அமெரிக்கா முழுவதும் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவர் ஜனாதிபதியாவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட கையெழுத்து வேட்டையில் கிட்டத்தட்ட 32 லட்சம் மக்கள் கையொப்பமிட்டனர் என அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அமெரிக்க சட்டப்படி ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்குகளை ஒருவர் பெற்றிருந்தாலும், எலெக்டோரல் கொலேஜ் (தொகுதிப் பிரதிநிதிகளைக் கொண்ட குழு) எனப்படும் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் 538 பேரில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுபவரே ஜனாதிபதியாக முடியும். இதன்படி ட்ரம்புக்கான வாய்ப்பு கைவிட்டுப் போகவும் சந்தர்ப்பங்கள் உள்ளன. எலெக்டோரல் கொலேஜ் தெரிவில் அங்கம் வகிப்பவர்கள் ட்ரம்புக்கு வாக்களிக்கக் கூடாது என்று தெரிவித்தும் மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். ஆனால், குறித்த குழுவில் கிட்டத்தட்ட 270 ஆதரவாளர்களை (குடியரசுக் கட்சியின் தொகுதிவாரியான வெற்றியாளர்கள்) ட்ரம்ப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. எலெக்டோரல் கொலேஜ் தெரிவு டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.



**கலவரத்தில் துப்பாக்கிச் சூடு**

டொனால்ட் ட்ரம்புக்கு எதிராக வெடித்த கலவரங்கள் ஐந்தாம் நாளான நேற்றும் தொடர்ந்தன. நியூயோர்க், மியாமி, சென். பிரான்சிஸ்கோ, போர்ட் லான்ட் உள்ளிட்ட முக்கிய இடங்களும் மக்கள் வெள்ளத்தால் அல்லோலகல்லோலப்பட்டது. போர்ட் லான்ட் நகரில் நடந்த கலவரத்தின்போது மர்ம நபரொருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்தார். மேலும் சிலர் காயமடைந்தனர்.

சந்தேகநபர் கைது செய்யப்படவில்லை. சியாட்டில் நகரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பேரணியின் போதும் மர்ம நபரொருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் காயமடைந்தனர். (ம-எ)



## ட்ரம்புக்கு பான் கீ-மூன் வாழ்த்து

அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் ட்ரம்புக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூன் தனது வாழ்த்தைத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் 58 ஆவது ஜனாதிபதித் தேர்தல் அண்மையில் நடைபெற்றது ஹிலாரியைத் தோற்கடித்து ட்ரம்ப் ஜனாதிபதியானார். அவருக்கு பல தரப்பிடமிருந்தும் வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் உள்ளன. ரஷ்ய ஜனாதிபதி புடின் முதல் நபராக தனது வாழ்த்தைப் பதிவுசெய்தார். இந்தியப் பிரதமர் மோடி, பிரிட்டன் பிரதமர் திரேசா மே, இலங்கை ஜனாதிபதி மைத்திரி உள்ளிட்ட பலரும் தமது வாழ்த்துக்களை ட்ரம்புக்குத் தெரிவித்தனர். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூன் நேற்று முன்தினம் தனது வாழ்த்தைத் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவான உங்களுக்கு எனது வாழ்த்துக்கள். அனைவரும் ஒன்றிணைந்து அமெரிக்காவின் முன்னேற்றத்துக்காகவும், உலகத்தின் முன்னேற்றத்துக்காகவும் பாடுபட வேண்டும் என்று பான் கீ- மூன் வாழ்த்தினார் என அவரது அலுவலகம் தெரிவித்தது. (ம-எ)



# பாகிஸ்தானில் ஐ.எஸ். கைவரிசை உயிரிழப்பு 52 ஆக அதிகரித்தது

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தின் லாஸ்பெல்லா என்ற பகுதியில் உள்ள ஷா நூரானி தர்கா வழிபாட்டுத் தலத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 52 ஆக அதிகரித்தது.

குறித்த வழிபாட்டுத் தலத்தில் நேற்றுமுன்தினம் மாலை கிட்டத்தட்ட 500 இற்கும் அதிகமானோர் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது மிகப்பெரும் சத்தத்துடன் கார் குண்டுத் தாக்குதலில் நடத்தப்பட்டது என பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்தன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றது. சம்பவ இடத்தில் 32 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று மதிய நிலவரத்தின்படி மருத்துவமனையில் 20 பேர் உயிரிழந்ததையடுத்து குறித்த தாக்குதலின் உயிரிழப்பு எண்ணிக்கை 52 ஆக அதிகரித்தது. மேலும் பலரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதால், உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)

## சர்ச்சையைத் தந்த சல்யூட்

டொனால்ட் டரம்பின் விமானத்துக்கு போர் வெற்றிக்கான மரியாதை செலுத்தப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கும் தற்போதைய ஜனாதிபதியான ஒபாமாவுக்கும் இடையில் வெள்ளை மாளிகையில் அண்மையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப்புக்காக டொனால்ட் ட்ரம்ப் நியூயோர்க் நகரிலிருந்து வோஷிங்ரன் நோக்கி புறப்பட்டுச் சென்ற போது நியூயோர்க் விமான நிலையத்தில் ட்ரம்ப்பின் விமானத்துக்கு 'வோட்டர் கேனான் சல்யூட்' எனப்படும் தண்ணீரை பீய்ச்சியடித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இத்தகைய வணக்கங்கள் போருக்காகச் செல்லும் விமானங்களுக்கும், போர் வெற்றியுடன் திரும்பும் விமானங்களுக்குமே வழங்கப்படுவது வழமை. ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றமைக்காக குறித்த வணக்கம் வழங்கப்பட்டமையானது இணையத்தளங்களில் பலராலும் விமர்சிக்கப்படுகிறது. சிலர் ஆதரவாகவும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். (ம-எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### 9, 18, 27 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு

இந்த மாதம் உங்களின் நிர்வாகத்திறன், ஆளுமைத் திறன் அதிகரிக்கும். நாடாளுபவர்களின் நட்புக் கிடைக்கும். வீடு கட்ட அனுமதி கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். மகளின் அலட்சியப் போக்கு மாறும். மகனுக்கு நீங்கள் எதிர்பார்த்ததைப் போல் நல்ல குடும்பத்திலிருந்து பெண் அமைவார். வழக்கில் திருப்பம் ஏற்படும். பூர்வீகச் சொத்தைப் புதுப்பிப்பீர்கள். உறவினர்களின் வருகையால் வீடு களைகட்டும். சபைகளில் முதல் மரியாதை கிடைக்கும். பால்ய நண்பர்கள் உங்களைத் தேடி வந்து பேசுவார்கள். என்றாலும் சந்தேகத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க நேரிடும். எதிரிகளின் நட்பால் சில விடயங்களைச் சாதித்துக் காட்டுவீர்கள்.

**பெண்களுக்கு**

காதல் கைகூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வெளிநாட்டு நிறுவனங்களின் தொடர்பு கிடைக்கும். வாடிக்கையாளர்களின் தேவையறிந்து கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். நல்ல வாய்ப்புக்களும் தேடி வரும். சக ஊழியர்களால் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். கலைத்துறையினர்களின் படைப்புகளை அரசு கௌரவிக்கும். முக்கியஸ்தர்களால் இனம் கண்டறியப்படும் மாதம் இது.

**அதிர்ஷ்ட திகதிகள்: 9, 10, 1, 3, 12**
**அதிர்ஷ்ட எண்கள்: 4, 6**
**அதிர்ஷ்ட நிறங்கள்: மரூண், சில்வர் கிரே**
**அதிர்ஷ்ட கிழமைகள்: செவ்வாய், வியாழன்**

# கார்த்திகை தீபத்தின் சிறப்பு



கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் ஏற்றக்கூடிய தீபம் கார்த்திகைத் தீபம் ஆகும். கார்த்திகை மாதம் என்பதே ஒரு சிறப்பு மிக்க மாதம். ஏனென்றால், இந்தக் கார்த்திகை மாதத்தில்தான் நம்முடைய உடம்பில் உள்ள நாடி, நரம்புகளெல்லாம் சம ஓட்டத்தில் இருக்கும் என்று சொல்வார்கள்.

அப்படி நாடி நரம்புகள் சம ஓட்டத்தில் இருக்கும் போது தியானம் செய்யாதவர்களுக்கும் ஞானம் சித்தியாகும். அப்பொழுது இறைவன் ஒளிப்பிழம்பாக வெளிப்படுகிறான். இந்தக் கார்த்திகை மாதத்தில்தான் அண்ணாமலையார், எல்லாம் வல்ல ஆவுடையார் சிவனே ஒளிப்பிழம்பாக வெளிப்படுவதாக ஐதீகம்.

பரணி தீபம் இருக்கிறது, கார்த்திகை தீபமும் இருக்கிறது. பரணி தீபம் என்பதன் பொருள், செல்வம், சொத்து, சுகம், பதவி, பட்டம், புகழ் எல்லாவற்றையும் கொடுக்கக் கூடியது. கார்த்திகை தீபம் என்பது மோட்ச தீபம். இறைவனடி போதும், பொருள் வேண்டாம், அருள் வேண்டும் என்பது. நிதி வேண்டாம், கருணை நிதி வேண்டும் என்று இராமலிங்க அடிகளார் சொல்வதைப் போல கருணை நிதி கொடுக்கக் கூடியது கார்த்திகைத் தீபம்.

நவம்பர் 27ஆம் திகதி முதலில் பரணி தீபம் ஏற்றப்படுகிறது. பிறகு மாலை 6 மணிக்கு கார்த்திகை தீபம் ஏற்றப்படுகிறது. எந்த தீபத்தைப் பார்க்கிறார்களோ இல்லையோ கார்த்திகை தீபத்தைப் பார்த்தாலே எல்லா வகை யிலும் சிறப்பு உண்டாகும்.

எங்கு பார்த்தாலும் இருட்டாக இருக்கிறது. ஒளியை உள்ளுக்குள் அனுப்பினால், இதயத்திற்குள் ஒளி ஆற்றலைக் கொண்டு சென்றால், எல்லா வகையிலுமே நமக்கு நன்மை உண்டாகும். தவிர, ஒரு தெளிவு நிலை, தீர்க்க நிலை உண்டாகும். அதனால் கார்த்திகை தீபத்தை மட்டும் அனைவரும் கண்டு தரிசிக்க வேண்டும். அது எல்லா வகையிலும் சிறப்புத் தரும்.

**நாளை ஐப்பசி-30**
**செவ்வாய்க்கிழமை -15.11.2016**
**திதி: பிரதமை மா. 06.02**
**நட்சத்திரம்: கார்த்திகை பி.ப.03.55**
**ராகுகாலம்:03.07-04.37 வரை**
**சுபநேரம்: 10.37-12.07 வரை**

# உண்மையான நல்லிணக்கம்தான் நாட்டின் இன்றைய தேவை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கைகோர்ப்பு எனும் தேசிய நிகழ்ச்சித் திட்டம் யாழ்ப்பாணத்தில் இடம் பெறுகின்றது. இதனுடைய ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

கைகோர்ப்பு - நல்லிணக்க ஊக்குவிப்புக்கான குறித்த தேசிய நிகழ்ச்சிக்காக தென் பகுதியைச் சேர்ந்த நல்லிணக்கப் பிரதிநிதிகள் 40 பேர் யாழ்ப்பாண மக்களுடன் 3 நாள்கள் பழக உள்ளதாகச் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித் திட்டம் வெற்றி அளித்துள்ளதாக யாழ். மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளதாகவும் அறிய முடிகின்றது. அப்படியானால் கடந்த 70 ஆண்டுகளின் பின்னர் எமது அடுத்த தலைமுறை இன, மத பேதங்கள் இன்றி ஒற்றுமையாக ஒரு குடையின் கீழ் வாழ்வதற்கான அத்திபாரம் இடப்பட்டுள்ளது என்று கருதலாம் எனவும் பலர் கூறுகின்றார்கள். இவை உண்மையாகுமானாலே வெற்றி எனப்படும்

நிகழ்சித் திட்டத்துக்கான ஒரு கட்டமாக தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் உதவிச் செயலாளர் தலைமையில் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த அரச அலுவலகர்கள் 40 பேரும், வடமாகாண நல்லிணக்கப் பிரதிநிதிகளும் ஒன்றாக இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கெடுக்க உள்ளனர்.

யாழ். மக்களுடைய கலாசாரம், பண்பாடு போன்ற விடயங்களை தென்பகுதி மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும், தென்பதி மக்களுடைய கலாசாரம் பண்பாடுகளை வடக்கு மக்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதனடிப்படையில் மாத்தறை மாவட்டத்தைச்சேர்ந்த அரச அலுவலகர்கள் யாழ்ப்பாணத்தில் தங்குவதற்கு யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே 40 குடும்பங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. அந்தக் குடும்பங்களுடன் 3 நாள்கள் அவர்கள் இங்கு தங்கி இருக்க போகின்றார்கள். இதன் மூலம் ஒவ்வொரு குடும்பங்களினதும் நாளாந்தச் செயற்பாடுகள் என்ன. அவர்கள் எந்த விடயங்களில் ஆர்வம் காட்டுகின்றார்கள்? என்பனவற்றையும் யாழ். மக்களுடைய கலாசாரம், பண்பாடு, உபசரிப்பு, ஒற்றுமை, தேவைகள் போன்றவற்றையும் மாத்தறை மாவட்டத்தைச்சேர்ந்த அரச அலுவலகர்கள் அறிந்து தென்பகுதிக்குச் சென்று இங்கு நிகழ்ந்தவற்றை அங்குள்ள மக்களுக்குக் கூறுவார்கள். இது நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு என மாவட்டச் செயலகத்தால் தெரிவிக்கப்பட்டது. பழகுவதற்கு நாங்கள் பெயர் போனவர்கள். எனவே அதில் எமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் ஏற்படாது, இந்தப் பழகலால் நல்லிணக்கம் ஏற்படுமா? இல்லை, புகைத்தல், மது ஒழித்தல், சிறுவர் துஸ்பிரயோகங்களை ஒழித்தல் போன்று இதுவும் வெறும் தேசிய நிகழ்ச்சி திட்டம் தானா? என்பதில்தான் எங்களுக்குச் சந்தேகம் ஏற்படுகின்றது. எத்தனையோ நிகழ்ச்சித் திட்டங்களைப் பார்த்தவர்கள் நாங்கள். எனவே இதுவும் அவை போன்று இல்லாது எமக்கான நிரந்தரத் தீர்வாக அமையும்போது தான் இதை வெற்றி பெற்றுள்ளதாக ஏற்றுகொள்ள முடியும்.




இங்கு வந்தவர்கள் சிலர் தங்களுடைய கருத்துக்களை முன்வைக்கும் போது எமது பண்பாடுகள், கலாசரங்கள் பற்றிப் பேசியிருந்தார்கள். இது அவர்கள் ஏற்கனவே எம்மைப்பற்றித் தெரிந்திருக்கின்றார்கள் என்பதை வெளிப்படையாகக் காட்டுகின்றது. அப்படித் தெரிந்திருந்தும் கூட எமக்கிடையில் ஒற்றுமை ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் மீண்டும் ஒரு முறை அவர்கள் தெரிந்து கொள்ள வந்திருக்கின்றார்கள். முடியுமான வரை எம்மைப் பற்றிய எண்ணங்கள், தப்பான அபிப்பிராயங்கள், புரிந்துணர்வின்மை என்பன தென்பகுதி மக்களிடம், குறிப்பாக இனவாத அரசியல்வாதிகளிடம் இருந்து [illegible] வேண்டும். அதற்காக அவர்கள் எத்தனை முறை பழக வந்தாலும் அவர்களுடன் பழகி எமது எதிர்பார்ப்புக்களைத் தெரிவிப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செ.அன்புராசா அடிகள்

# குடியினின்றும் மீண்டெழுமா நம் மூத்தகுடி?

குடித்துவிட்டு வந்த கணவன், மனைவியின் ஏச்சினையும் பேச்சினையும் சமாளிக்க வேண்டும் என்பதற்காகத் தன் மடிக்கணினியில் அவசரமான வேலை செய்வதுபோல எதனையோ ரைப் செய்துகொண்டிருந்தார். கணவனைக் கூர்ந்து அவதானித்த மனைவி, குடிச்சனீங்களா? எனக் கேட்கிறாள். அவனோ அந்தரப்பட்டு, ஐயோ! இல்லையம்மா! என்கிறான். மனைவியோ கோபத்துடன், பிறகு ஏன் சூட்கேசைத் திறந்து ரைப் பண்றீங்க? எனக் கோபத்துடன் அதட்டியபோதுதான், அம்மா, மன்னிச்சுக்கொள்! அவசரத்தில லப்ரொப் எது, சூட்கேஸ் எது எண்டே தெரியல்ல! என விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்ற கணக்கில் பதில் கூறுகிறான் அவன்.



### மது விற்பனையில் யாழுக்கு தங்கம்

சட்டப்படி அனுமதி பெற்று மதுபானம் விற்பதன் மூலம் அதிக வருமானத்தை அரசுக்கு ஈட்டித்தரும் மாவட்டங்களுள்- முதலிடத்தில் யாழ்ப்பாணமும், இரண்டாம் இடத்தில் நுவரெலியாவும், மூன்றாம் இடத்தில் மட்டக்களப்பும் உள்ளன. இத்தகவலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நுவரெலியாவில் இடம்பெற்ற, போதைப் பொருளிலிருந்து விடுதலை பெற்ற நாடு என்ற தேசிய நிகழ்ச்சித் திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோது கூறினார். அத்துடன், இந்நிலை ஆரோக்கியமான ஒன்று அல்ல என்றும் இதனை மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மது விற்பனையில் சில அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை என்னால் சுட்டிக்காட்ட முடியாது. அப்படிச் செய்தால், எனக்கு அரசைக் கொண்டு செல்ல முடியாது. அந்த அளவுக்குச் சக்திவாய்ந்த ஒரு விடயம் அது. ஆனால், ஏதோ ஒருவகையில் இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். மதுவற்ற ஒரு சமூகமாக நாம் மாற்றம் பெற்றால், பல மாற்றங்களை எமது நாட்டில் ஏற்படுத்த முடியும். நாட்டுக்குச் சிறந்த தலைவர்களாக குடும்பத்தின் நல்ல தலைவனாக பிள்ளைகளுக்கு ஒரு சிறந்த தந்தையாக சமூகத்துக்கு ஒரு வழிகாட்டியாக முன்னோக்கிச் செல்ல முடியும் என்றும் அவர் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

### மூத்தகுடியின் முடிவற்ற குடி

ஜனாதிபதி சொன்ன விடயத்தில் கவனிக்கப்பட வேண்டிய முதலாவது குறிப்பு என்னவென்றால், எமது நாட்டின் 25 மாவட்டங்களிலும் மது விற்பனையிலும் மது அருந்துவதிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்துத் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றியிருப்பது தமிழர்கள் முழுமையாக அல்லது மிக அதிகமாகச் செறிந்து வாழும் மாவட்டங்களாகும். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி என்ற பெருமைக்குரிய வரிகளின் மீது ஓர் அர்த்தம் இப்போதுதான் எம் தேடலில் புலப்பட்டிருக்கிறது. அதுதான், கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே தோன்றிய மூத்த குடியின் வாரிசுகள்தானோ இந்தத் தமிழ்க் குடி மக்கள் என்று கேட்கத் தோன்றுகிறது.

இரண்டாவது, பல அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மது விற்பனைத் தரகர்களாகப் பெரும் பணம் சேர்க்கும் ஒரே நோக்கத்தோடு மது விற்பனையில் ஈடுபடுகிறார்கள் அல்லது மது விற்பனைக்கான அனுமதியைப் பெற்றுக்கொடுப்பதில் அனுசரணை வழங்குகிறார்கள் என நாட்டின் ஜனாதிபதியே உறுதிபடக் குறிப்பிட்டிருக்கிறார். இதில் வேதனைக்கும் வெட்கத்துக்குமுரிய விடயம் என்னவென்றால், அரசியல்வாதிகளும் பெரும் தனவந்தர்களும் குடும்பங்களை அழிக்கும் மதுபானச் சரக்கு விற்றுச் சம்பாதிக்கிறார்கள் என்பதுதான். ஏழைகளின் குருதியை உறிஞ்சும் இம் மூட்டைகள் சேர்க்கும் பண மூடை கள் நிற்காது, நிலைக்காது என்பதை ஏனோ இவர்கள் புரிந்துகொள்கிறார்கள் இல்லை.

மேற்சொன்ன ஜனாதிபதியின் கருத்தை மேலும் உறுதிப்படுத்துவதுபோல, முல்லைத்தீவு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் ஒரு விடயத்தை அண்மையில் தெரிவித்துள்ளார். அதாவது, முல்லைத்தீவு நகரில் இதுவரையில் மதுபானசாலை இருக்கவில்லை என்றும்–அங்கு ஒருவர் அரச அனுமதி பெற்று மதுபானசாலை அமைப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் ஒருவர் உட்பட இன்னும் சில முக்கிய பிரமுகர்கள் பரிந்துரைக் கடிதத்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் ஆதாரங்களோடு கூறுகிறார்.

சமுதாயத்தின் சுகத்தை விற்றுத் தங்கள் சுகங்களைப் பெற்றுக்கொள்ளும் சிலரை நாடாளுமன்றத்துக்கும்–மாகாணசபைக்கும்–பிரதேசசபைக்கும் ஏனைய சங்கங்களுக்கும் மக்களின் பிரதிநிதிகளாக அனுப்பி வைத்திருக்கிறார்கள் மூத்த குடியான நம் குடிமக்கள். இவர்கள் தங்கள் திருவிளையாடல்களை விளையாடிக்கொண்டு திரிகிறார்கள். இச்செய்தி, மக்களையும் மக்கள் பிரதிநிதிகளையும் சென்றடைவதற்கான நடவடிக்கைகளைச் செய்தால், இதுவே மக்களின் உண்மைப் பிரதிநிதிகளை வரும் காலங்களில் ஆய்ந்தறிவதற்கு ஏதுவாக இருக்கும்.

> ஜனாதிபதி சொன்ன விடயத்தில் கவனிக்கப்பட வேண்டிய முதலாவது குறிப்பு என்னவென்றால், எமது நாட்டின் 25 மாவட்டங்களிலும் மது விற்பனையிலும் மது அருந்துவதிலும் முதல் மூன்று இடங்களைப் பிடித்துத் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைக் கைப்பற்றியிருப்பது தமிழர்கள் முழுமையாக அல்லது மிக அதிகமாகச் செறிந்து வாழும் மாவட்டங்களாகும். கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி என்ற பெருமைக்குரிய வரிகளின் மீது ஓர் அர்த்தம் இப்போதுதான் எம் தேடலில் புலப்பட்டிருக்கிறது.

### ஜனாதிபதி சொன்னது தவறான கணிப்பா?

இது இவ்வாறிருக்க, தவறான கணிப்புக்களால் யாழ்ப்பாணத்துக்கு அவப்பெயர் என்ற தலைப்பில் தேவராசா பிறேமராஜாவின் கட்டுரை ஒன்று உதயன் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. அதில், மதுப்பாவனையில் யாழ்ப்பாணம் முதலிடம் என்று கூறுபவர்களின் கருத்துக்கான சரியான பதிலைக் கண்டறிவதன் மூலம்; அந்தக் கருத்தை மறுதலிக்கலாம் எனக் குறிப்பிட்டு ஒருசில முக்கிய காரணங்களை அவர் நிறுவியுள்ளார்.

அக்காரணங்களில், யாழ்ப்பாணம் முதன்மைச் சுற்றுலாத்தளமாக மாறியிருக்கிறது. பனங்கள்ளை அதிகமாக வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யும் மாவட்டம் யாழ்ப்பாணம். அதிக இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றனர். கோடை விடுமுறையில் அதிக சுற்றுலாப்பயணிகள் நிறைந்திருப்பது யாழ்ப்பாணத்தில் தான் எனக் குறிப்பிடும் கட்டுரையாசிரியர்– இக்காரணங்களால்தான் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அவப்பெயர் என்ற கருத்தையும் விரிவாக விளக்குகிறார். எனினும், போருக்குப் பின் மதுசாரப் பாவனை ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் அதிகரித்திருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன என்பதையும் அவர் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. இவை, மேலதிக ஆய்வுக்கும் மக்களின் சிந்தனைக்கும் உரியவை.

### அப்போ வோர் இப்போ பார்

2009க்கு முன் மிகப்பெரும் தீமையாகப் போர் இருந்தது. அதுவே ஒரு பெரிய எதிரியாக இருந்தது. அதனையே எதிர்கொண்டு, எதிர்த்து வாழவேண்டியும் இருந்தது. இத னால் வேறு பிரச்சினைகள் இல்லை என்று அர்த்தமல்ல. ஆனால், அப்பிரச்சினை களை எதிர்கொண்டு அவற்றுக்கு முகம் கொடுத்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அத்துடன் சட்டம், ஒழுங்கு மிகக் காத்திரமான வகையில் சிறப்பாக நடை முறைப்படுத்தப்பட்டன. மக்களும் அவற்றைக் கடைப்பிடித்தார்கள்.

ஆனால், 2009க்குப் பின் களநிலைமையோ தலைகீழானது. பல்வேறுபட்ட சமூகத் தீமைகளுக்கு எதிராக முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது. போதைப்பொருள்களின் வருகை, அதிதீவிரமான மதுப்பாவனை, புகைத்தல் பொருள்கள் இலகுவாகக் கிடைக்கும் நிலை, தொடர்புசாதனங்களின் அதீத பயன்பாடு போன்றன சமூகத்தின் அனைத்து மட்டத்திலும் பல்வேறுபட்ட பிறழ்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றன என் பதை அண்மைக் காலத்தில் வெளிவந்த தகவல்களும் ஆய்வு முடிவுகளும் உறுதிப்படுத்துகின்றன.

### குடிசாலைகளுக்கு எதிராக மக்கள் அணிதிரளவேண்டும்


மக்கள் வாழும் குடிமனைகள் மத்தியில், பாடசாலைச் சூழலில், கோவில்களின் அருகே என மக்கள் செறிந்து வாழும் இடங்களில் மதுபானசாலைகள் அமைப்பதற்குப் பொதுவாக அனுமதி கிடையாது. ஆயினும், நகரப்புறப் பகுதிகளில் அரசியல் செல்வாக்கினால்- அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் போன்றோரின் செல்வாக்கினால் எப்படியோ அனுமதியைப் பெற்றுக்கொள்கிறார்கள். இந்த நிலையில் மக்கள் விழிப்பாக இருந்து- ஒன்று திரண்டு இதனை எதிர்த்தால், மதுபானசாலைகள் அமைப்பதைத் தடுத்து நிறுத்த முடியும் அல்லது இருக்கிற மதுபானசாலைகளை இழுத்து மூடுவதற்கான ஏதுநிலைகளை ஏற்படுத்த முடியும். ஆதலால், சமூக அக்கறைகொண்ட இளையோர், பெரியோர், புத்திஜீவிகள், மதத்தலைவர்கள் இவ்விடயத்தில் ஒன்றாக அணிதிரள்வது காலத் தின் இன்றியமையாத அவசரத்தேவை என்பதைப் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

மதுபானசாலைகளை இழுத்து மூடுவதால் மட்டும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடி யாது. மதுபானசாலைகளை மக்கள் வாழும் இடங்களுக்குள் அமைப்பதற்கு எதிராகப் போராடுவது, இலகுவாக மதுபாணம் கிடைப்பதற்கான வழியை இல்லாமல் செய்வதற்கே பயன்படும். இச்செயற்பாடு ஒன்றே மதுப்பாவனையை ஒழிப்பதற்குப் போதாது. பல மட்டங்களிலும் போதைப்பொருள், மதுப்பாவனை பற்றிய விழிப்புணர்வுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கின் தலையில் வெண்ணெய் வைப்பவர்கள்

நாகநாதரின் கடைசி மகன் மதிவாணன். அவனுக்கு மூத்த சகோதரர்கள் நால்வர் வெளிநாடுகளுக்கு ஏற்கனவே சென்றிருந்ததால் இவனையும் அவர்களிடம் அனுப்புவதற்கான முயற்சிகளில் நாக நாதர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். ஏனெனில் மதிவாணனின் செயற்பாடுகள் பிழையான போக்கில் சென்று கொண்டிருந்தன. சகோதரர்கள் பெற்றோருக்கு மாதாந்தம் அனுப்பி வைக்கும் ஒரு தொகைப் பணத்தில் கணிசமானதொரு பங்கு இவனுக்கும் கிடைக்க இவன் கல்வியை மறந்தான். கண்டவர்களையும் சினேகிதமாக்கிக் கொண்டு தெருச்சுற்றியாக அலைந்து பொழுதைப் போக்கினான். இதனால்தான் இவனை வெளியே அனுப்ப வேண்டிய நிலை நாகநாதருக்கு ஏற்பட்டது.



ஜேர்மனியில் இருக்கும் இரண்டாவது மகனிடம் அனுப்புவதற்காக முகவரிடம் ஏற்பாடு செய்தார்கள். பேசியபடி பணத்தையும் பெற்றுக் கொண்ட முகவர் இவனையும் வேறு கொஞ்சம் இளைஞர்களையும் சட்டவிரோதமாக ஒருவாறு மொஸ்கோ வரை அழைத்துச் சென்றார் தொடர்ந்து வழித்தடங்கள் மாறியமையால் மேற்கொண்டு பணயத்தைத் தொடர முடியாமல் இவர்கள் வந்த வழிதிரும்ப வேண்டியதாயிற்று. நாகநாதருக்குப் பணம் வீணாகிவிட்டதை ஒரு புறம் கவலையாக இருந்தாலும் அதைவிட மதிவாணனின் காலம் வீணே போகிறதே ஏதாவது தொழில் முயற்சியில் ஈடுபடுத்தலாம் என்றால் அதற்கும் ஒத்து வருகிறானில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டார்.

மதிவாணனுக்கு உள்ளூர பெரிய சந்தோசம். ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாது பயணம் பிழைத்துவிட்டதற்கு வருத்தப்படுவதாகக் காட்டிக்கொண்டு சோகமாக முகத்தை வைத்துக் கொண்டு வெளியே செல்வான். வெளியே சென்றதும் கட்டாக்காலிகளாக் இவனும் நண்பர்களுமாகக் சுத்தடிப்பதுதான் இவர்களது தொழில். மரம் பழுத்திருந்தால் அழைப்பின்றியே தேடிவரும் வௌவால்கள் போல் இவனது கைப்பசைக்காக இவனைச் சுற்றி நண்பர்கள் என்று சொல்லிக் கொண்டு ஒரு கூட்டம் இவன் பேச்சுக்கெல்லாம் ஜால்ரா வாசித்தது. மதிவாணனும் தனது திறமையைக் கண்டு தான் இந்தக் கூட்டம் தனக்குப் பின்னால் வருவதாக எண்ணிக் கொண்டான்.

இப்படி ஒருநாளில் ஓர் ஆலயத்தேர் முட்டியில் தன்னைச் சுற்றியிருந்தவர்களிடையே தனது புளுகு வாணத்தைக் கொளுத்தி வீசினான் மதிவாணன். தான் மொஸ்கோவில் இருந்தபோது அங்குள்ளவர்கள் கொக்குகளைப் பிடிப்பது பற்றிப் புளுகினான். அங்குள்ள கொக்கு இறைச்சி மிகவும் சுவையானது. ஒவ்வொரு கொக்கும் பெரிய கோழிச் சேவலளவு இருக்கும், அங்குள்ளோர் இந்தக் கொக்குகளை வேட்டையாடுவதற்குச் சிறிது வெண்ணெய்க் கட்டிகளை எடுத்துக் கொண்டு கொக்குகளுக் குத் தெரியாமல் அவற்றின் பின்புறமாக தவழ்ந்தும் ஊர்ந் தும் சென்று அவற்றின் தலையில் மெதுவாக வெண்ணெய்க்கட்டிகளை கவனமாக வைத்து விட்டு நைசாகத் திரும்பி வந்து விடுவார்கள்.

வெண்ணெய்க் கட்டிகள் உருக ஆரம்பித்து உருகி உருகி கொக்குகளின் தலைகளிலிருந்து வழிந்தோடும்போது அவற்றின் கண்களில் உருகிய வெண்ணெய்பட்டதும் அவை பறக்க முடியாமல் தடுமாறித் துடிக்கும். அந்தநேரம் இவர்கள் இலகுவாக கொக்குகளைப் பிடித்துக் கொண்டு வருவார்கள் என்றான். இதைக் கேட்டு சுற்றியிருந்த கூட்டமும் வாயைப் பிளந்தபடி கேட்டுக் கொண்டிருந்தார்கள். ரஸ்யர்களுக்கு நல்ல மூளை என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

அதேநேரம் தேர்முட்டியின் அடுத்த படிக்கட்டில் கண்களை மூடிக் கொண்டு இவர்களின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்த வயோதிபரான யாசகர் ஒருவர் மதிவாணனைப் பார்த்து “எட தம்பி, கொக்கின் தலையில் ஏன் வெண்ணெயை வைத்து அது உருகும் வரை காத்திருந்து பிடிக்க வேண்டும். வெண்ணெய்க் கட்டியை மெதுவாகக் கொண்டு போய் கொக்கின் தலையில் வைக்கப்போகும் போது பறந்து விடாமல் நின்றுகொண்டிருக்கும் கொக்கை அப்போதே பிடிக்கலாமே. வெண்ணெயும் மிச்சம், அது உருகும்வரை காத்திருக்கும் நேரமும் மிச்சம். புளுகுவது என்றால் இப்படியா புளுகுவது என்றாரே பார்க்கலாம். மதிவாணனின் முகத்தில் அசடு வழிந்தது. மெதுவாக இடத்தைக் காலி செய்தான் அவன்.


## தென்னை மரம்!

பாப்பா பாப்பா கதை கேளு
எனது கதையை – நீ கேளு!
தேங்காய் விளைந்தால் விதையாவேன்
முளைத்துத் துளிர்த்து வளர்ந்தாலே
தென்னம்பிள்ளை நான் ஆவேன்!
ஓங்கி வளர்ந்து உயர்ந்தாலே
தென்னை மரம் நான் ஆவேன்!
தண்ணீரும் உரமும் தந்தாலே
இளநீர் தேங்காய் நான் தருவேன்!
மட்டை உதிர்ந்து விழுந்தாலும்
ஓலைக் கீற்றும் நான் தருவேன்!
செத்து மடிந்து போனாலும்
மரமாய் நானும் பயனாவேன்..!





## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## வரலாற்றில் இன்றைய தினம்

1770 - நைல் நதியின் மூலம் என நம்பப்படும் இடத்தை ஜேம்ஸ் புரூஸ் கண்டுபிடித்தார்.

1914 - முதலாவது உலகப் போரின் தொடக்க மாதத்தில், ஒட்டமான் பேரரசு, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, சேர்பியா மற்றும் மொன்ரி நீக்றோவுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தது.

1918 - செக்கஸ்லோவிக்கியா மக்கள் குடியரசானது.

1921 - ஸ்பெயின் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது.

1922 - பிரித்தானிய ஒலிபரப்புக் கம்பனியால் ஐக்கிய ராச்சியத்தில் வானொலி சேவை தொடங்கப்பட்டது.

1960 - வெள்ளையர்களுக்கு மட்டுமான லூசியானா தொடக்கப் பள்ளியில் முதன் முதலாக, ரூபி பிறிட்ஜ் எனும் கறுப்பின பிள்ளை சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1967 - அமெரிக்க மருத்துவர் தியோட் மைமன் தனது ரூபி லேசருக்கான காப்புரிமத்தைப் பெற்றுக் கொண்டார்.

1969 - நாஸாவின் அப்பலோ நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய.. சந்திரனில் இரண்டாவது தடவையாகவும் மனிதரை இறக்குவதற்கு அப்பலோ-12 அனுப்பி வைக்கப்பட்டது.

1971 - மரீனர்-9 செவ்வாய் சுற்றுவட்டப் பாதையுள் பிரவேசித்தது.

1982 - போலந்து சட்டவிரோத சொலிடாறிற்றி இயக்கத் தலைவர் லெக் வெலேசா, சோவியத் எல்லைப் பகுதியில் 11 மாத தடுப்புக் காவலின் பின் விடுவிக்கப்பட்டார்.

1999 - ரணில் பேசிய அநுராதபுரக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு. ஒருவர் சாவு. 40 பேர் காயம்.
- வவுனியா அரச ஊழியர்களை வேலைக்குத் திரும்புமாறு அரசு அறிவிப்பு.

2006 - வாகரைப் படுகொலைகளுக்குக் கண்டனமும், மாமனிதர் ரவிராஜுக்கு அஞ்சலியும் கிழக்கின் பல பிரதேசங்கள் ஹர்த்தாலினால் ஸ்தம்பிதம்.
- வாகரை நோக்கிச் சென்ற அம்புலன்ஸ் மாங்கேணியில் படையினரால் தடுத்து வைப்பு. கர்ப்பிணிப் பெண் சாவு. 4 பேரின் நிலை கவலைக்கிடமென நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவிப்பு.

## சிந்தனைத் துளிகள்

1. புகழ்ச்சியையும், அவமதிப்பையும் கருதாது என்றும் உண்மையை மேற்கொண்டு செய்யும் தியாகமே, சிறந்த தியாகம்.

2. தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்பட மாட்டான். அவனே வாழத் தகுதியுள்ளவன்.

3. நம்மை நாமே வெறுக்காமல் இருப்பது முதற்கடமை. முன்னேற்றமடைவதற்கு முதலில் சுயநம்பிக்கை அவசியம்.

4. உலக நன்மைக்காக அவசியமாயின் உங்களிடமுள்ள அனைத்தையும் தியாகம் செய்யுங்கள், தூய்மை உடையவன் தான், நல்ல சிந்தனையாளனாக, பகுத்தறிவாளனாக, மற்றவர்களுக்கு வழிகாட்டியாக ஆகிறான்.

5. உங்களை ஓர் ஏழை என்று எப்போதும் நினைக்காதீர்கள், பணம் சக்தியல்ல, பணம் ஒன்றே வாழ்வின் இலட்சியம் என்றால் அது தவறான வழியிலேதான் தேடப்படும்.

6. பணத்தைச் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக ஒழுக்கத்தை விற்று விடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் கொடுமையின் பின்னர் சபர்ணா கொலை செய்யப்பட்டாரா?



சபர்ணா முழு நிர்வாண நிலையில் இறந்து கிடந்ததால் பாலியல் கொலையின் பின் செய்யப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகமடைந்துள்ளனர். சபர்ணாவின் உடல் உடற்கூறுப் பரிசோதனைக்காக கீழ்பாக்கம் அரச மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

நடிகை சபர்ணாவின் கையில் பிளேடால் அறுத்துக்கொண்ட அடையாளங்கள் இருந்துள்ளன. இது அவரே அறுத்துக்கொண்டதா? அல்லது வேறு எவரேனும் அறுத்ததா? என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

உடல் மீட்கப்பட்ட வீட்டில் மதுபானங்கள், கஞ்சா, சிகரெட் போன்றவை இருந்துள்ளன. வீட்டின் கதவு வேறு தாழ்ப்பாள் போடாமல் இருந்துள்ளது. இதனால் பாலியல் கொடுமையின் பின்னர் அவர் கொலை செய்யப்பட்டாரா என்ற கோணத்தில் பொலிஸார் தமது விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

சின்னத்திரையில் நிகழ்ச்சி தொகுப்பாளராக அறிமுகமாகி, சன் ரீவி மற்றும் விஜய் ரீவி ஆகியவற்றில் புகழ்பெற்ற நடிகையாக திகழ்ந்தவர் சபர்ணா. சினிமா வாய்ப்புகள் கிடைத்து திரைப்படங்களிலும் நடித்துள்ளார். மதுரவாயலில் இவர் வசித்து வந்த வீடு கடந்த மூன்று நாள்களாக திறக்கபடாமல் இருந்துள்ளது. மேலும் துர்நாற்றம் வீசியதால் அக்கம்பக்கத்தினர் காவல் துறையினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர். விரைந்து சென்ற காவல் துறையினர் சபர்ணாவின் உடலை கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்த நிலையில் மீட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

WhatsApp

**நோயாளி-** டாக்டர் அடிக்கடி ஒரு கண் துடிக்குது!

**டாக்டர்-** எப்போ... எல்லாம் துடிக்குது...

**நோயாளி--** உங்க நேர்ஸ் பக்கத்துல வரும்போது எல்லாம்...

**டாக்டர்....**

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | | | 1 |
| 3 | | 9 | 5 | 7 | | | | 6 |
| | | | | 1 | | | | |
| | 4 | | | | | 3 | | 5 |
| 5 | | 3 | 4 | | 2 | 1 | | 7 |
| 8 | | 7 | | | | | 9 | |
| | | | | 4 | | | | |
| 4 | | | | 6 | 5 | 7 | | 3 |
| 6 | | | 8 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 4 | 6 | 1 | 3 | 8 | 5 | 2 |
| 6 | 2 | 8 | 7 | 5 | 4 | 9 | 3 | 1 |
| 3 | 1 | 5 | 2 | 9 | 8 | 7 | 4 | 6 |
| 1 | 4 | 9 | 8 | 2 | 5 | 3 | 6 | 7 |
| 8 | 5 | 7 | 9 | 3 | 6 | 1 | 2 | 4 |
| 2 | 6 | 3 | 4 | 7 | 1 | 5 | 9 | 8 |
| 5 | 8 | 2 | 3 | 4 | 7 | 6 | 1 | 9 |
| 4 | 3 | 6 | 1 | 8 | 9 | 2 | 7 | 5 |
| 9 | 7 | 1 | 5 | 6 | 2 | 4 | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களை யும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்)

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** தாயின் அன்பும், ஆசியும் பலமாக கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி இனிதாக நிறைவேறும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு நடந்தேறும்.

**இடபம்:** எதிர்கால வளர்ச்சிக்காகப் பாடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பணிச் சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் குடும்பத்தினரின் அன்பை பெற்று மகிழ்வர்.

**மிதுனம்:** சாதுரியமாகச் செயற்பட்டு வளர்ச்சியடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். அபரிமிதமான லாபம் கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**கடகம்:** பெருந்தன்மையுடன் எதிரியையும் மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்தியளிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**சிங்கம்:** எதிர்பார்ப்பு நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான ஆதாயம் கிடைக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர். உறவினரால் உதவி உண்டு.

**கன்னி:** பேசுவதில் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் இருக்கும். உறவினர் வருகையால் குடும்பச் செலவு அதிகரிக்கும். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நண்பர்களின் உதவி கிடைக்கும். வாழ்க்கைத் தரம் உயரும். ஆரோக்கியம் பலம் பெறும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.

**விருச்சிகம்:** அறிவுப்பூர்வமாக எதையும் அணுகுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி யால் பணவரவு அதிகரிக்கும். புத்திரர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**தனுசு:** விழிப்புடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெண்கள் பணம், நகை இரவல் கொடுக்க வாங்கக் கூடாது.

**மகரம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடய மாக வெளியூர் செல்வர். பெண்கள் சிக்கனம் மூலம் செலவை சமாளிப்பர்.

**கும்பம்:** பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். அதிர்ஷ்டவசமாக சொத்து சேர்க்கை கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

**மீனம்:** எதிர்காலம் கருதி சீர்திருத்தங்களில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிர்ணயித்த இலக்கு நிறைவேறும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். உறவினர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம்.

நான் கூட பேண்ட் தான் கீழ இறங்கிருச்சோன்னு நினைச்சேன் இது செருப்பு டிசைனாம். நடங்க... நல்லா வருவீங்கடா...



கடவுளே எனக்கு சாப்பிட பிடிக்கலை தூங்க பிடிக்கலை எனக்கு காதல் வந்துருச்சோ...



சனியனே உனக்கு O/L பரீட்சை வந்துருச்சு போய் படி...

ஒரு கிலோ முளைக்கீரையில் 70 கிலோ வாழைப்பழத்தில் உள்ள விற்றமின் 'ஏ' உள்ளது. ஒரு கிலோ அகத்திக் கீரையில் 108 கிலோ அப்பிளில் உள்ள கல்சியம் சத்து உள்ளது.




ஒரே ஒரு மனைவிக்குள்... [illegible] டீச்சரும், 60 ஹெட்மாஸ்டரும், 90 ஜட்ஜும் இருக்கிறார்கள்.

வள்ளி மு(கன்)ணிகண்டன்

நம் வாழ்க்கை நம்மை சிலையாக செதுக்கத்தான் முயற்சிக்கிறது நாம் தான் வளைந்து கொடுக்காமல் உடைந்து விடுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் கொழுக்கட்டை



### தேவையான பொருள்கள்

கோதுமை மா – ஒரு கிலோ
சீனி – அரைக் கிலோ
தேங்காய் – ஒரு மூடி
ஏலக்காய் – 5
நெய் – 2 தேக்கரண்டி
காய்ந்த திராட்சை – 20
முந்திரிப்பருப்பு – 20
கேசரிப்பவுடர் – கால் தேக்கரண்டி
உப்பு – கால் தேக்கரண்டி
தேன் – 2 அவுன்ஸ்

### செய்முறை

கோதுமை மாவை அரித்து அதனுடன் உப்பைக் கலந்து தண்ணீர் விட்டுக் கெட்டியாகப் பிசையவும்.

பிசைந்த மாவைப் றொட்டிப் பதத்துக்குப் பெரிய துண்டுகளாக உருட்டவும். அந்தத் துண்டுகளை சிறுசிறு துண்டுகளாகக் கத்தியால் கீறி எடுத்து அவை ஒன்றுடன் ஒன்று ஒட்டாமல் எடுக்க வேண்டும்.

ஏலக்காயைப் பொடி செய்யவும். முந்திரிப் பருப்பையும் காய்ந்த திராட்சையையும் நெய்யில் வறுக்க வேண்டும். தேங்காயைத் துருவிப் பால் எடுக்கவும்.

ஒரு பாத்திரத்தில் ஒன்றரை லீற்றர் தண்ணீர் விட்டுக் கொதிக்க விடவேண்டும்.

கொதிக்கும் தண்ணீரில் அந்தத் துண்டுகளை ஒன்றோடு ஒன்று ஒட்டாமல் ஒவ்வொன்றாகப் போட வேண்டும்.

எல்லாம் போட்டபின் தண்ணீர் கொதி வந்ததும் சீனியைப் போட வேண்டும்.

கேசரி பவுடரைச் சேர்க்க வேண்டும். மீண்டும் கொதித்ததும் தேங்காய்ப்பால், முந்திரிப்பருப்பு, திராட்சைப்பழம், ஏலக்காய்ப் பொடி, மீதமுள்ள நெய் முதலியவற்றைக் கலந்து மீண்டும் ஒரு கொதி வந்ததும் தேனை ஊற்றி இறக்க வேண்டும். தேன் கொழுக்கட்டை தயார்.




வயர் அற்ற அழைப்பு மணி அறிமுகமாகியுள்ளது. மின்சாரத்தில் இயங்கும் இது 100 மீற்றர்கள் தூரம் வரை வயர்கள் இணைப்பு இன்றிச் செயற்படும். இது ஆயிரத்து 300 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.

# பெண்கள் தலைமுடி வெட்டும் முறை




1. தலைமுடியை சிக்கு இன்றி இழுத்து படத்தில் காட்டியவாறு நெற்றிப்பகுதியில் கூட்டிக் கட்டவும்.
2. பின்னர் கீழ் பகுதி தலை முடியிலும் அடிப்பகுதில் இருந்து குறிப்பிட்ட தூரம் வரையும் சேர்த்து வூல் பான்ட் இடவும்.
3. பின்னர் வூல் பாண்ட் பகுதியை கத்தரிக்கவும்.
4. வழமை போன்று தலை முடியை பின்பக்கமாக வாரி விடவும்.

இந்த தலைமுடி வெட்டு நீண்ட தலை முடிக்கு ஏற்ற சிகை அலங்காரமாகும். இந்த வெட்டு முறை மூலம் அதிகளவான முடி வெட்டப்படுவதைத் தவிர்க்கலாம். தலை முடி நீளமாக இருப்பதுடன் கீழ்ப்பகுதியை லேயராகவும் வெட்டிக் கொள்ளலாம்.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 50 | 60 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 60 | 70 | 60–80 | 100 | 40–60 | 60 | – | 35 |
| கரட் | 80 | 80 | 60–120 | 100 | 80–120 | 140 | – | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 40 | 60 | 50–60 | 60 | – | 60 |
| பயிற்றை | 120 | 130 | 160 | 100 | 100–120 | 160 | – | 60 |
| பாகல் | 140 | 160 | 160 | 120 | 120–140 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 60 | 80 | 80 | 100 | 60–80 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 100 | 120 | 100 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 40 | 30 | 50 | 30 | 70 | – | 30 |
| தக்காளி | 80 | 70 | 60 | 60 | 60 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 40 | 80 | – | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 25 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 60 | 60 | 50 | 60 | 80 | – | 70 |
| புடோல் | 70 | 50 | 60 | 60 | 60 | 60 | – | 50 |
| கோவா | 70 | 80 | 80 | 80 | 70 | 80 | – | 50 |
| வெண்டி | 80 | 80 | 80 | 60 | 60 | 40 | – | 30 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 140 | 180 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 120 | 120 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 30 | 45 | 40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 110 | 100–120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 500 | 550 | 500 | 500 | 500–550 | 600 | – | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 100 | 120 | 140 | – | 70 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 60 | 40 | 60 | 80 | – | 100 |

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 500 | 500 | – | 650 | 700 | – |
| நண்டு | 250 | 400 | 200 | – | 450 | 200 | 500 |
| கணவாய் | 600 | 650 | 400 | – | 550 | – | – |
| பாரை | 550 | 500 | 400 | – | 650 | 600 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | – | 700 | – | 350 |
| சீலா | 300 | 350 | 300 | – | 450 | 400 | 300 |
| விளை | 650 | 400 | 300 | – | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 200 | 300 | – | 400 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 400 | – | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 800 | 300 | – | 500 | – | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | – |
| திரளி | 300 | 200 | 100 | – | 250 | 200 | – |
| நகரை | 250 | 200 | 100 | – | 300 | – | 300 |
| சூடை | 150 | 100 | 100 | – | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 150 | 200 | – | 300 | – | – |
| திருக்கை | 150 | 300 | 200 | – | 400 | – | – |
| மதனம் | 150 | 200 | – | – | 300 | – | 200 |
| [illegible] | 100 | 100 | 50 | – | 120 | 100 | – |
| பாலை | 400 | 150 | 300 | – | 400 | 400 | – |
| வாழை | 100 | 150 | – | – | 300 | 200 | – |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அரசமைப்பு குறித்த

# உப குழுக்களின் அறிக்கை நவ. 19இல்

### இடைக்கால வரைவு டிசெம்பரில்; ஜனவரியிலேயே விவாதம்

உள்ள சகல கட்சிகளையும் பிரதி நிதித்துவப் படுத்தி ஆறு உப குழுக்கள் உருவாக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில் வழி நடத்தல் குழுவும் அமைக்கப்பட்டது.

உப குழுக்கள் 6 இனதும் அறிக்கைகள் தொகுக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கை எதிர் வரும் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது.

அரசமைப்பின் முக்கிய விடயங்களான அதி காரப்பகிர்வு, நாட்டின் தன்மை, தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகாரம் தொடர்பில் ஆராய்ந்த வழி நடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை டிசெம்பர் மாதம் 10ஆம் திகதியும் நாடாளுமன் றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கைகள் மீதான நாடாளுமன்ற விவாதம் ஜனவரி மாதம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

# வடக்கு முதலமைச்சர் உறுதிமொழி தராததால் போராட்டம் தொடரும்

### சுகாதாரத் தொழிலாளர்கள் அறிவிப்பு

பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று இரவு நீண்ட நேரம் பேச்சு இடம் பெற்றபோதும், எந்தவித தீர்க்கமான முடிவும் எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

'முதலமைச்சர் எமது பிரச்சினையை ஒரு மாத காலத்தினுள் தீர்த்து வைப்பேன் என்று எழுத்துமூலம் உறுதி தந்தால் மாத்திரமே எமது போராட்டம் முடிவுக்கு வரும். இல்லையெனில் வேலை நிறுத்தப் போராட் டம் தொடரும்' என்று சுகாதாரத் தொழிலாளர் சார்பில் பேச்சில் பங்கு கொண்ட வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் த.றொபின்சன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் கடந்த 7 நாள் களாக வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர். இத னால் யாழ். மாநகரம் குப்பை மேடாக காட்சியளிக்கின்றது. இந்த நிலை யில், மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக் கும், வடக்கு மாகாண முதலமைச்சரின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று இரவு 7 மணியிலிருந்து இரவு 9 மணி வரை சந்திப்பு நடை பெற்றது.

இந்தச் சந்திப்பில் பங்கேற்ற வடபிராந்திய ஐக்கிய தொழிலாளர் சங்கத் தின் செயலாளர் த.றொபின்சன் தெரிவித்தாவது:

வடக்கு மாகாண முதலமைச்சரின் சார்பில் கலந்து கொண்ட விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், முதலமைச்சரின் கீழுள்ள உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மாகாண சபை உறுப்பினர் க.விந்தன் ஆகியோர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு ஆறு மாத கால அவகாசம் கோரினர். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் பேசியே இதனைச் செய்ய முடியும் என்பதால், ஆறு மாத காலம் தேவை என்றும், மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றி இதனைச் செய்வதாகவும் குறிப்பிட்டனர்.

நாம் ஏற்கனவே ஒன்றரை வருட கால அவகாசம் வழங்கி விட்டோம். இனிமேலும் கால அவகாசம் வழங்க முடியாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்தோம். ஆறு மாத காலத்திற்குள்ளாவது நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்பதை எழுத்தில் தருவீர்களா என்று கேட்டோம். அதற்கு முதலமைச்சருடன் பேச வேண்டும் என்று சொன்னார்கள். எங்களுடன் பேசுவதற்கு முன்வராத முதலமைச்சர் உங்களை அனுப்பியிருக்கின்றார். இனித்தான் முதலமைச்சர் எங்கள் பிரச்சினை பற்றி பார்க்கப் போகின் றாரா என்று கேட்டோம். அவர்கள் ஆறு மாத கால நிலைப்பாட்டிலிருந்து கீழிறங்கி வரவில்லை.

முதலமைச்சர் எமது பிரச்சினையை ஒரு மா காலத்தினுள் தீர்ப்பதாக எழுத் தில் உறுதியளித்தால் நாம் எமது போராட்டத்தை கைவிட்டு பணிக்கு திரும்புவோம். இல்லையெனில் எமது போராட்டம் தொடரும் – என்றார். (வ-5-7-101)

# இறங்கி வந்தார் சீனத் தூதுவர்

### கொழும்பு அரசிடம் வருத்தம் தெரிவிப்பு

யி சியாங்லியாங் தெரிவித்தார். சீனத் தூதுவர் கொழும்பில் நடத்திய செய்தியா ளர் சந்திப்பில், நிதியமைச்சர் ரவி கரு ணாநாயக்கவின் பெயரைக் குறிப்பிட்டு, கருத்துக்களை வெளியிட்டிருந்தார். அதிக வட்டிக்கு கடன் கொடுக்கப்படவில்லை என்றும், அவ்வாறு அதிக வட்டியை சீனா அறவிடுகிறது என்றால், எதற்காக மீண்டும் சீனாவிடம் கடன் கேட்கிறார்கள் என்றும் சீனத் தூதுவர் கேள்வி எழுப்பியிருந்தார். இதற்கு ரவி கருணாநாயக்க, சீனா அதிக வட்டிக்கு கடன் கொடுக்கவில்லை என்றால் நல்லது என்ற சாரப்பட கருத்துத் தெரிவித்தி ருந்தார். சீன அயலுறவுத்துறை அமைச்சு, சீனத் தூதுவரின் கருத்தை நியாயப் படுத்தும் விதத்தில் அறிக்கை வெளியிட் டது. இதற்கிடையில் கொழும்புத் தொலைக்காட்சியின் நிகழ்சியில் கருத்துத் தெரிவித்திருந்த சீனத் தூதுவர், இலங்கை அரசை சீண்டும் வகையில் கூடிய வட்டிக்கு கடன் வழங்கியதை நிரூபிக்க முடியுமா என்று சவால் விடுத்திருந்தார்.

சீனத் தூதுவரின் கருத்துக்களால் இலங்கை – சீனா இடையில் இராஜதந்திர ரீதியில் முறுகல் – முரண்பாட்டு நிலை ஏற் பட்டது.

சீனத் தூதுவரின் கருத்துத் தொடர்பில், அவருக்கு அழைப்பாணை அனுப்பி விளக்கம் கோருவதற்கு இலங்கை அய லுறவுத்துறை அமைச்சு முடிவு செய்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதில் தலையீடு செய்து, சீனத் தூதுவருக்கு அழைப்பாணை அனுப்ப வேண்டாம் என்றும் தொலைபேசி ஊடாகப் பேசுமா றும் தெரிவித்திருந்தார்.

இதற்கு அமைவாக அயலுறவுத்துறைச் செயலர் எசல வீரக்கோன், சீனத் தூதுவ ரிடம் தொலைபேசி ஊடாகப் பேசினார். இலங்கையின் வருத்தத்தை வெளிப்படுத் தியதுடன், கரிசனைக்குரிய விடயங்கள் தொடர்பாக ஊடகங்கள் மூலம் பேச வேண்டாம் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த நிலையிலேயே, தமது கருத்துக்கள் இலங்கைக்குச் சங்கடத்தை ஏற்படுத்தி யிருந்தால் அதற்கு வருந்துவதாக, சீனத் தூதுவர் கூறியுள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் செய்தி வெளியிட்டுள் ளது. (வ-5)

# சீனத் தூதுவருடன் ரணில் திடீர் சந்திப்பு

சீனத் தூதுவர் தெரிவித்த கருத்தினால் கடந்த ஒரு வார காலமாக சர்ச்சை ஏற்பட்டிருந்தது. இதன் பின் னர் இலங்கை சீனா இராஜதந்திர முறுகல் உச்சம் பெற்றிருந்தது. இந்த நிலையில்தான் தெரிவித்த கருத்து இலங்கை அரசுக்குச் சங் கடத்தை ஏற்படுத்தி யிருந்தால் வருத்தம் தெரிவிப்பதாக சீனத் தூதுவர் நேற்றுமுன்தினம் தெரிவித்தார். இந்த நிலையி லேயே நேற்றிரவு இந்த இரகசியச் சந் திப்பு நடைபெற்றது. சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் உடனடி யாக எதுவும் தெரியவரவில்லை. (வ-5)

# உட்கட்சிப் பூசல் ஈ.பி.டி.பிக்குள் உச்சம்

### தவராசாவை நீக்க டக்ளஸ் முயற்சி விடமாட்டேன் என அவரும் விடாப்பிடி

உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்த கடிதம் மூலம் கோரியுள் ளார். வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் பதவியைத், ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட மாகாண சபை உறுப்பினர் தவநாதனுக்கு வழங்குமாறும் டக்ளஸ் கேட்டுள்ளார்.

வடமாகாண சபையின் எதிர்க்கட்சி வரிசையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த 7 உறுப்பினர்களும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒருவருமாக 8 உறுப்பினர்கள் உள்ள னர். அவர்களின் தலைவராக ஈ.பி.டி.பி யைச் சேர்ந்த சி.தவராசா நியமிக்கப்பட்டார்.

'மாகாண சபைத் தேர்தலில் எமது கட்சியில் இருவர் தேர்வான நிலையில், யாழ். மாவட்டப் பிரதிநிதியாகத் தெரிவானவருக்கு (கமல்) எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டது. அதன் பின்னர் அவர் கட்சியில் இருந்து நீக்கப்பட்டதையடுத்து, தவராசாவுக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டது. மாகாண சபையின் ஆயுள்காலம் இன்னும் இரு வருடங்களே உள்ள நிலையில் அந்தப் பதவியினை கிளிநொச்சி மாவட்டத்துக்கும் வழங்கும் முகமாக பதவிமாற்றம் செய்யக் கோரியுள்ளேன்' என்று ஈ.பி.டி. பியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

'வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் பதவியினை கிளிநொச்சி மாவட்டத்துக்கோ அல்லது ஏனைய உறுப்பினர் ஒருவருக்கோ வழங்க வேண்டும் என்கின்ற விருப்பத்தினை என்னிடம் நேரடியாகத் தெரிவித்திருந்தால், நானே அந்தப் பதவியிலிருந்து விலகி வழிவிட்டிருப்பேன். ஆனால் அவ்வாறான ஓர் கடிதத்தி னை கட்சியினர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எழுதி, ஆளுநருக்கு முகவரியிட்டு எனக்கு பிரதியிட்டுள்ளார். இந்தக் கடிதம் கிடைக்கும் வரையில் இவ்வாறான முடிவு கட்சியில் எடுக் கப்பட்டமை கட்சியின் மூத்த உறுப்பினரான எனக்குத் தெரியப் படுத்தப்படவில்லை.

இரகசியமான முறையில் முடிவு எடுத்தமை தவறான அணுகு முறை. அதனால் அந்தப் பதவியை இனி என்னால் விட்டு விலக முடியாது.

அதுமட்டுமன்றி, இந்த விடயம் ஆளுநரின் தீர்மானம் அல்ல. அதுவும்தவறான அணுகுமுறை. இதனை அவைத்தலைவரிடமே கோரியிருக்க வேண்டும் ... வேண்டும் என்று ... என்று வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா தெரிவித்தார். (வ-5-4,101)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கீரிமலைக் கேணியில் மூழ்கி நேற்று ஒருவர் உயிரிழப்பு

சாலையில் நேற்று இரவு 7 மணிக்கு ஒப்படைக்கப்பட்டது.

அச்சுவேலியைச் சேர்ந்த வல்லிபுரம் சுபாஸ் (வயது - 38) என்பவரே சடலமாக ஒப்படைக்கப்பட்டார்.

கீரிமலையில் கிரியைகள் செய்வதற்காக சுபாஸ் மற் றும் அவ ரது உறவினர்கள் நேற்று மாலை 5 மணிக்கு அங்கு சென் றனர். இதன்போது கிரியை செய்யுமிடத்தில் உறவினர்கள் நின்று கொண்டிருக்க சுபாஸ் கேணியில் குளித்துக் கொண் டிருந்தார்.

சுபாஸ் நீரில் மூழ்கியதைக் கண்ட சிங்களச் சுற்றுலாப் பயணி கள் அவரை மீட்டு முதலுதவி கொடுத்தனர். இதன் பின்னர் தெல்லிப் பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சேர்த்தோம். அவர் உயிரிழந்து விட்டாதாகத் தெரிவிக்கப்பட்டது என்று உறவி னர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை காங்கேசன்துறைப் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.

உடற்கூற்றுப் பரிசோதனை இன்று இடம் பெறும் என்று வைத் தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-5-26-101)

# மனைவி, இரண்டு மகள்கள் கோரமாக வெட்டிக்கொலை

### கணவன் வெறியாட்டம்; திருமலையில் பயங்கரம்

லப்பட்டனர். அவர்களைக் கொலை செய்த குற்றச்சாட்டில் அந்தக் குடும்பத் தலைவர் ராஜ லக்ஸ்மன் (வயது -35) என்ப வரே கைதுசெய் யப்பட்ட தாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொலைசெய்யப்பட்ட நித்யா வின் வீடும் அவரது அக்கா வின் வீடும் ஒரே ஊரிலேயே உள்ளன. இதனால், அவர் தனது பிள்ளைகள் சகிதம் அக்காவின் வீட்டுக்கு அடிக் கடி செல்வார். நேற்றுக் காலை யும் அங்கு சென்றுள்ளார். தங்கை வந்ததும் அவரையும் பிள்ளைகளையும் வீட்டில் விட்டுவிட்டு, அக்கா கடைக்கு சென்றுள்ளார். நித்தியாவின் அம்மாவும் ஆடு மேய்ப் பதற் குச் சென்றுள்ளார்.

இந்த வேளையிலேயே தி... ரென வாளுடன் வீட்டுக்கு... புகுந்த நித்தியாவின் கணவ... மனைவியையும் பிள்ளை... ளையும் சரமாரியாக வெட்டி... கொன்றுள்ளார் என்று அய... வர்கள் தெரிவித்தனர்.

கதறல் சத்தம்கேட்டதும் பொ... ஸாருக்கு தகவல் வழங்க... பட்டது. சிறிதுநேரத்தின் பி... ன்ர்தான் 3 பேரும் கொல்... பட்டமை தெரிய வந்தத... ஊரவர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து கைது செ... யப்பட்ட குடும்பத் தலைவ ரி... விசாரணைகள் மேற் கொள்ள... படுகிறது என்று உப்பு வெளி... பொலிஸார் தெரிவித்தனர்.

# உலகப் பொருளாதாரம் பெரும் பின்னடைவை எதிர்கொள்ளும் அபாயம்

## வீழ்ச்சிகண்ட பங்குச்சந்தையில் முன்னேற்றம் காணப்படுகிறது

ஆசியப் பிராந்தியத்தின் பங்குச் சந்தைகளில் ஒன்றாக விளங்கும் நிக்கி குறியீட்டெண் கடந்த வியாழக் கிழமை காலையில் இடம்பெற்ற ஆரம்ப வர்த்தகத்தில் 6 சதவீத மாக அதிகரித்துள்ளதாக தகவல் தெரிவிக்கப்படுகிறது.


அண்மையில் இடம்பெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்று ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப் பட்டதைத் தொடர்ந்தே நிக்கியின் பங்குச் சந்தைக் குறியீட்டில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையிலே ஏற்பட்ட வீழ்ச்சியை ஈடுசெய்யும் வகையிலே பங்குச்சந்தை 6 சதவீதமளவுக்கு அதிகரித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்பதாக கடந்த புதன் கிழமை அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள பங்குச் சந்தைகளில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. இருந்த போதும் நேற்றைய நாளின் முடிவிலும் பார்க்க பங்குச்சந்தைகள் ஏற்றம் கண்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குறிப்பாக பன்னாடுகள் ஹிலாரியின் வெற்றியை பரவலாக எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பத்தில் உலகின் எதிர்பார்ப்பில் இருந்து வேறுபட்டவிதமாக ஏற்பட்ட ட்ரம்ப்பின் தேர்தல் வெற்றியானது உலக பங்குச்சந்தைகளின் வீழ்ச்சியாக எதிரொலித்திருக்கின்றது.

இதன் காரணமாக பொருளாதார ரீதியில் பன்னாடுகள் பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளதையும் அதன் பிரதிபலிப்புகள் ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் அனைத்திலும் தாக்கத்தை செலுத்த ஆரம்பித்துள்ளதையும் காணக் கூடியதா கவுள்ளது.

ட்ரம்பின் வெற்றியைத் தொடர்ந்து பிரான்ஸ், சீனா, ஹொங்கொங், துருக்கிபோன்ற பல நாடுகளிலும் பங்குச்சந்தை சுட்டெண்ணில் வீழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலையிலே முதலீட்டாளர்கள் பொருளாதாரரீதியில்ஏற்படப் போகும் மாற்றங்கள் தொடர்பில் அச்சமடைந்துள்ளதுடன் முதலீடுகளைத்தேக்கும்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகதெரிய வருகிறது.





## போன்ஜோர் ஒலிச் சமிக்ஞை கடிகாரம்



செயற்கை நுண்ணறிவு, வை பை வசதிகளுடன் கூடிய புதிய ஒலிச் சமிக்ஞைக் கடிகாரத்தை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஹோலி வடிவமைப்பு நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. பிரதானமாக கைபேசி, இணையம் மற்றும் வீட்டிலுள்ள பிற சாதனங்களுடன் இணைந்திருக்கும் தன்மையைக் கொண்டுள்ள போன்ஜோர் தனது செயற்கை நுண்ணறி வையும் பயன்படுத்துவோரின் தினசரி நடவடிக்கைகளையும் நன்கு அறிந்து கொண்டு தானாகவே முடிவெடுக்கும் திறனைக் கொண்டுள்ளது. இவைதவிர எமது அன்றாட நடவடிக்கைகளுடன் தொடர்புடைய விதத்திலே செயற்படக் கூடியது. குறிப்பாக அலுவலகத்துக்குப் போகும் வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தால் அதனை உணர்ந்து கொண்டு போன்ஜோர் ஒலிச் சமிக்ஞை கடிகாரம் சற்று முன்னதாகவே எழும்புவதற்கான எச்சரிக்கை ஒலிச் சமிக்ஞையைத் தரக் கூடியது. பேச்சு மூலமாக இயக்கக்கூடிய இவ்வகைக் கடிகாரங்கள் பயனர்களுக்கான பல சாதகங்களைக் கொண்டமைந்துள்ளது. உதாரணமாக காலையில் மழை பெய்யா விட்டால் ஆறு மணிக்கு எழும்ப வேண்டும் என சொன்னால் போதும். ஆறு மணிக்கு மழை பெய்தால் போன்ஜோர் ஒலிச்சமிக்ஞையைத் தராது. அதேபோன்று உடற்பயிற்சி செய்வதற்கு மறந்துவிட்டால் இன்று சற்றே அதிகமாக நடந்து செல்ல வேண்டும் எனவும் வெளியே வெப்பம் அதிகமாக இருக்கும் பட்சத்தில் உடலுக்கு குளிர்ச்சி தரும் உடையை அணிய வேண்டும் எனவும் நினைவூட்டக்கூடியவை.

## உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வர்த்தகத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

வணிகம்

சமுத்திர வளங்களினூடே பொருளாதார மேம்பாடு

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| 1,306 மில்லியன் ரூபா | 50 மில்லியன் ரூபா | 500 மில்லியன் ரூபா | 50 சதவீதம் | 100 மில்லியன் ரூபா |

**நிதி ஒதுக்கீடு - 2017**

| 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|
| 100 ஒன்றிணைந்த கிராமங்கள் | 1200 மில்லியன் ரூபா | 500 மில்லியன் ரூபா | 400 மில்லியன் ரூபா | 100 பொருள்கள் |

1. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துறை
2. வர்த்தகத் திணைக்களம்
3. சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்கள் பாதுகாப்புக் கடன் திட்டம்
4. மலர்ச் செய்கையை ஊக்குவிக்க நிவாரணக் கடன்
5. கிராமியக் கடன் வழங்கும் திட்டம் - (கோழி வளர்ப்பு)
6. நன்னீர் மீன்பிடிக் கிராமங்களை அமைக்கத் திட்டம்
7. மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் களப்புகள் மற்றும் மீனவர் கிராமங்களை அமைத்தல்
8. கைத்தொழில் துறை
9. பால் உற்பத்தி அதிகரிப்பு
10. செஸ் வரி விலக்களிப்பு

## இலங்கை பங்களாதேஷ் இடையே வர்த்தக ஒப்பந்தம்



இலங்கை மற்றும் பங்களாதேஷ் இடையேயான திறந்த வர்த்தக ஒப்பந்தம் ஒன்று 2017 ஆம் ஆண்டு மே மாதம் கைச்சாத் தாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. வர்த்தகத் துறை அமைச்சு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக் கையிலேயே மேற் குறித்த விடயம் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் பங்களாதேஷிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள இலங்கையின் உயர் மட்டக்குழு இந்த ஒப்பந்தத்தில் கைச் சாத்திடவுள்ளதாக பங்களாதேஷ் வர்த்தகத்துறை அமைச்சர் டொபயில் அஹமட் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது.

## மக்களுக்கு உதவும் கடன் திட்டத்தை ஆரம்பித்தது கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கி நாட்டின் பிரபலமான சொத்து அபிவிருத்தி நிறுவனங்களுடன் இணைந்து கொழும்பு அதன் சுற்றுப்புறம் மற்றும் கண்டி மாநகரம் உள்ளடங்கலான 44 பிரபலமான இடங்களில் வீடுகளை அல்லது அடுக்கு மனைகளைக் கொள்வனவு செய்வதற்கான மக்கள் கடன் உதவு திட்டங்களை ஆரம்பித்துள்ளது.

இதன்பிரகாரம் ஒரு வீட்டின் பெறுமதியில் 80 சத விகிதத்தை [illegible] வங்கி முன்வந்துள்ளது. போட்டித்தன்மை கொண்ட வட்டி வீதம், நெகிழ்வுப் போக்குடைய மீள் வழங்கல் திட்டம் என்பனவற்றின் கீழ் இந்தக் கடன்கள் வழங்கப்படவுள்ளது.

மேலும் வங்கி மற்றும் சொத்து அபிவிருத்தியாளர் உள்ளடங்கலான முத்தரப்பு உடன்படிக்கையொன்று இருக்கும் பட்சத்தில் கடன் தொகைக்கான விண்ணப்பம் செலுத்தப்பட்ட ஒரு வார காலத்தில் இந்தக் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவிக்கப்படுகின்றது. அந்தவகையிலே வீட்டுக் கடனைப் பெற விரும்பும் வாடிக்கையாளர் ஒருவர் [illegible] மற்றும் கொள் வனவு உடன்படிக்கையை தனது வருமானத்துடன் தொடர்புடையதான ஆவணங்களுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும் என வங்கி அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸி....

வெளியிட்டுள்ளன.
இது தொடர்பில் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அமெரிக்காவும் ஆஸ்திரேலியாவும் மீள்குடியேற்ற உடன்பாட்டில் கையெழுத்திடவுள்ளன. இது தொடர்பான அறிவிப்பு இன்னும் சில நாள்களில் வெளியிடப்படலாம் என்று கூறப்படுகிறது.
நெளரு மற்றும் மனுஸ் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 800 ஏதிலிகள் அமெரிக்காவில் குடியேற்றப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
நெளரு மற்றும் மனுஸ் தீவுகளில் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஈராக் நாடுகளைச் சேர்ந்த ஏதிலிகள் தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர். அடுத்த ஆண்டு, ஜனவரி 20ஆம் திகதி அமெரிக்காவின் புதிய அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன்னதாக, இந்தக் குடியேற்றம் இடம்பெற லாம் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(வ-5)

## ஆபாசப்

நிபுணர்களின் ஆலோசனையுடன் மென்பொருளொன்று தயாரிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.
2017ஆம் ஆண்டுக்காக நல்லாட்சி அரசு முன்வைத்த வரவு – செலவுத் திட்டத்தில், உயர்தரம் பயிலும் சுமார் ஒரு லட்சத்து 75 ஆயிரம் மாணவர் களுக்கும், அவர்களுக்குக் கல்வி போதிக்கும் 28 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் ரப் வழங்குவதற்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.
எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து உயர்தர மாணவர்களுக்கு 'ரப்' வழங்கப்படலாம் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான திகதி குறித்த அறிவிப்பை அரசு இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை. எனினும், பாடசாலை மாணவர்களுக்கு 'ரப்' வழங்கும் அரசின் திட்டம் தொடர்பில் சமூகத்தில் சிலர் விமர்சனங்களை முன் வைத்தனர். இந்த ரப்கள் மூலமாகத் தவறான சில இணையத்தளங்களைப் பார்வையிடுதல், பாட நேரத்தில் மாணவர்கள் 'கேம்' விளையாடுதல், சற் செய்தல் போன்ற செயல்களில் ஈடுபடக்கூடும் என்பது அவர்களின் வாதம்.
அதேநேரம், பல அறிவுப்பசிக்கு தீனி போடும் பல இணையங்கள் உள்ளன. இதன்மூலம் மாணவர்களின் அறிவு மேம்படும். ஆகவே, இது வர வேற்கப்பட வேண்டிய திட்டம் என்று மேலும் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர்.
இந்த நிலையிலேயே இந்தத் திட்டம் தொடர்பில் கல்வி அமைச்சர் மேற் கண்டவாறு விளக்கமளித்தார். (வ-4)

## பௌத்தத்தை

முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச கேட்டுள்ளார். அளுத்கம பகுதியிலுள்ள விகாரையொன்றில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற நிகழ் வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
தற்காலத்தில் நிறைய இடங்களில் விகாரைகள் மூடப்பட்டுவருகின்றன. வடக்கில் அது வேகமாக நடைபெறுகின்றது. வடக்கு, கிழக்கில் நாமே ஐக்கியத்தை ஏற்படுத்தினோம். ஆனால், அங்கு விகாரை களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதை சாதாரண விடயமாகக் கருதி விடமுடி யாது. இது குறித்து சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.
நல்லிணக்கம் என்பது அவசியம் தான். ஆனால், அது ஒரு எல்லைக்கு ஒரு பிரதேசத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடாது.
வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பௌத்தர்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். அவர்களைப் பாதுகாக்க வேண்டிய, அவர்களுக்காகக் குரல் கொடுக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அத்துடன், அவர்களின் அடையாளங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் – என்றார்.
(வ-4)

## இராணுவம்

சோசலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜெய

சூரிய தெரிவித்தார்.
தேசிய இனப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்ற தலைப்பில் நேற்று மாலை 4 மணிக்கு, யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாடு சுதந்திரம் அடைந்து எழுபது வருடம் நிறைவடைகின்ற இந்தக் காலகட்டத்தில் இனப்பிரச்சினை ஒரே இடத்திலேயே நிற்கின்றது. நயினாதீவில் உள்ள விகாரையையோ அல்லது ஆரிய குளத்தடியில் இருக்கும் விகாரையையோ அகற்ற வேண்டும் என்று தமிழ் மக்கள் யாரும் எந்தக் காலத்திலும் சொன்னதில்லை. மாறாக சிங்கள மக்கள் இல்லாத பிரதேசங்களில் அநாவசியமற்று இராணுவத்தினரது உதவியுடன் கட்டப்படும் விகாரைகளைத் தான் தமிழ் மக்கள் விரும்பவில்லை. அம் பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோயில் பகுதியில் புத்தர் சிலை வைக்கப்பட்டது. தடுக்க வேண்டிய பொலிஸாரே வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தார்கள். அதற்குப் பின்னால் அமைச்சர் தயாகமகே இருக்கிறார். இனப்பிரச்சினை என்பது எல்லோருக்கும் விளையாட்டாக இருக்கின்றது. அதனை விடுத்து புதிய பாதைக்கு வரவேண்டும் – என்றார்.
(வ-5-7)

## இன்று

விடவும் சற்றுக் குறைந்து முழு நிலவு தென்படுவதாகும்.
இந்தத் தினத்தில் நிலவு இயல்பாக இருப்பதை விடவும் முழு நிலவு சற்றுப் பெரியதாகவும், பொலிவு அதிகரித்தும் காணப்படும்.
இன்று தோன்றும் பெரு முழு நிலவு 2034ஆம் ஆண்டு நவம்பர் 25ஆம் திகதியே மீண்டும் தென்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற)

**சாரதி தேவை**
சிறிய ரக வாகனத்திற்கு சாரதி தேவை. நாளாந்தம் 800/- வழங்கப்படும்.
076 6427915, 075 9789226

**நீங்காத நினைவலைகளுடன் விண்ணக வாழ்வின் ஆறாம் ஆண்டு நினைவு....**

அன்னை மடியில்
22 . 06 . 1982



இறைவன் அடியில்
14 . 11 . 2010

**ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ் (றீகன்)**

'உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்'

மூவிரண்டு ஆண்டுகள் அகன்றன-உன்னை
சாவந்து சரித்துச் சென்று றேகனே
பூ நிகர்த்த உன் முகமும் புன்னகையும்
தேனினிய பேச்சதுவும் எமை விட்டு நீங்கியதே
ஆண்டுகள் எத்தனை சென்றாலும்
நீண்டு கொண்டே போகும் உன் நினைவு
வேண்டுகிறோம் இருதய ஆண்டவரை
மீண்டும் நீ எங்களோடு வந்திடுக.

புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய். (J 6018) (16,17,19)

என்றும் உன் நினைவுகளுடன் வாழும் குடும்பத்தினர்.

**கார் விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள வெள்ளை நிற மொறிஸ் ஒக்ஸ்போட் கார் (டீசல்) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 8449687 (J 6096) (16,17,19)

**தவறிவிட்டது**
ஞா.ஜெகநாதன் ஆகிய என்னுடைய கிளினிக் கொப்பிகள் சில ஆவணங்கள் கொண்ட பிளாஸ்ரிக் பாக் 10.11.2016 அன்று ஆஸ்பத்திரி வாசலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். 077 0536161

**வேலை வாய்ப்பு (20பேர் மட்டும்)**
உங்கள் கல்வித்தகைமை எதுவானாலும் சாதாரண தர பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களுக்கு மேல் சித்தியடைந்திருந்தால் நீங்களும் அழைக்கலாம்.
* சர்வதேச தரம் வாய்ந்த பயிற்சிகளுடன் 20 வெற்றிடங்கள்
* பயிற்சியின் போது மாத வருமானம் (18,000-22,000)
* பயிற்சியின் பின் 40,000/- இற்கு மேல்
* தங்குமிட வசதிகள் உண்டு

* நிர்வாக அதிகாரி
* செயற்றிட்ட அதிகாரி
* மேற்பார்வையாளர்
* முகாமைத்துவ பயிலுனர்கள்

வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உடனடியாக அழையுங்கள்.
076 3135120, 077 9994807 (J 6109) (16,17,19)

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் நலன் விரும்பியும், யோகர் சுவாமிகள் ஞாபகார்த்த நிதிய ஸ்தாப கருமான **திருமதி செந்தில் செல்வம் பாலகிருஸ்ணன்** அவர்களது பாசமிகு தாயார்.

**திருமதி**
**பரிமளரத்தினம் திருநாவுக்கரசு**

10.11.2016 அன்று ஆஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்ததையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைச் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்
யா/கொழும்புத்துறை இந்து.ம.வி. (ஜே/6107) (17.20)

**கண்ணீர் அஞ்சலி**



எமது குடும்ப நண்பர் உரும்பிராய் வடக்கு, உடையார்வளவைப் பிறப்பிடமாகக் கொண்ட

**இராஜரட்ணம் பகீரதன்**

**(Consortium of Humanitarian Agencies District Officer)**

அவர்கள் 11.11.2016 அன்று அமெரிக்காவில் இறைபதம் அடைந்துவிட்டார். அவரது மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (ஜே/6106)(17.20)

செ. தங்கராசா குடும்பம்,
செ. சிவராசா குடும்பம்,
செ. ஜெயராசா குடும்பம்,
இ. ராஜன் குடும்பம்,
Dr.வே. கணேசவேல் J.P குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்ஸில் கடத்திய கஞ்சா சிக்கியது

## சந்தேகநபரும் கைது

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்ப்பாணத்தில் இருந்து அநுராதபுரம் நோக்கி பஸ்ஸில் கடத்திச் செல்லப்பட்ட 2 கிலோ கேரளா கஞ்சா கிளிநொச்சி, பரந்தனில் நேற்று கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய மது ஒழிப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற பஸ்ஸில் கஞ்சா மீட்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட விமானப் படையினரால் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலுக்கு அமைய கிளிநொச்சி, முல்லைத்தீவு பிராந்திய மது ஒழிப்புப் பிரிவினர் பரந்தன் பகுதியில் வைத்து குறித்த பஸ்ஸை மறித்துச் சோதனையிட்டனர்.

பஸ்ஸில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 2 கிலோ 50 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டது. நபர் ஒருவர் எடுத்துச்சென்ற பயணப் பொதியில் இருந்து கஞ்சா மீட்கப்பட்டது. பயணப் பொதியை வைத்திருந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன என்று அவர் தெரிவித்தார். (ந-21,6,34)

# போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், நவ.14

போர் நிறைவடைந்த பின் மீண்டும் ஒரு போர் தாக்க தொடங்கியுள்ளது இதுவே போதைப் போர் எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி, தருமபுரம் கல்லாறு பகுதியில் போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணியால் முன்னெடுக்கப்பட்ட இந்த கருத்தரங்கு கடந்த வாரம் தருமபுரம் கல்லாறு தமிழ் வித்தியாலயத்தில் இளைஞர்அணித்தலைவர்சுரேன் தலைமையில் நடைபெற்றது.

கல்லாறு கிராமத்தில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளதுடன், விற்பனையும் அதிகரித்தது. அந்தப் பகுதியில் வாழ்பவர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டனர். சிறுவர்களும் பெண்களுமே அதிகமாக பாதிக்கப்படுவதுடன், பாதுகாப்பு இன்மையும் காணப்படுகின்றது. அவற்றைக் கருத்தில் கொண்டே கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

விழிப்புணர்வூட்டும் துண்டு பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன. போதை பாவனையை எவ்வாறு கட்டுப்படுத்துவது, போதையைத் தொடர்ந்து பாவிப்பதால் ஏற்படும் நோய்களில் இருந்து எவ்வாறு விடுபடுவது போன்ற விளக்கங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணித்தலைவர் சுரேன், மற்றும் உறுப்பினர்கள் தருமபுரம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் பூலோகராஜா, கிராம மட்ட அமைப்புக்கள், கிராம மக்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ந-21,6)

# 31 ஆம் நாள் நினைவலைகள்



அமரர் அன்னமுத்து கதிர்காமர்

மண்ணில் 24.02.1938 விண்ணில் 15.10.2016

அன்னம் அளித்து அன்னையாய்
அரவணைத்த அன்புத் தீபம் அணைந்ததோ !
ஆற்றுவதா எங்கள் துயர்
விடைபெற்றுச் செல்லாமல்
விண்நோக்கி விரைந்ததேனோ ?
விடையேறும் பெருமானின்
கழலடிகள் போற்றிடவோ !
சாந்தி ! சாந்தி ! சாந்தி !

இல.5, கல்லடி வீதி,
சாவகச்சேரி.

(C 23389)
(14,17,18)

குடும்பத்தினர்.

# இருபத்தைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



பூவுலகு 21 . 02 . 1945

தேவுலகு 14 . 11 . 1991

திருமதி பொன்னம்மா குருநாதி (அற்புதம்)

ஆண்டுகள் இருபத்தைந்து ஆனாலும் - நாம்
ஒரு போதும் உங்களை மறவோம் -அம்மா
இன்று போல் நீங்கள் எம்முடனே பழகியது
இன்னும் நாம் நினைவுடன் வாழ்கிறோம்
எங்கே சென்றாலும் எம் அம்மா- எங்களுடன்
என்று எண்ணியே காலத்தை ஓட்டுகிறோம்
எமக்கு யார் தான் துணை- எம் அம்மாவே!
எமக்கு அரிய துணை என்று அனுதினமும்
எண்ணித் துதிக்கின்றோம்- அம்மா
எம்மை நீங்காத துயரில் ஆழ்த்திவிட்டு
நீங்கள் எங்கு போனீரோ- இறைவா
எம் அம்மாவின் ஆத்மா சாந்தியடைய
எம் மனங்குளிர ஆசைகள் நிறைவேற
அன்னாரின் செல்வங்கள் சிறப்புற
ஆண்டவனே நீ எமக்கு வழி செய்திட
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

தகவல்: கணவர் - சி. குருநாதி
புத்திரர்கள் - முருக தாஸ் (ஜேர்மனி), சிவதாஸ் (ஜேர்மனி), Dr. [illegible]
புத்திரிகள் - மைனாவதி [illegible] மான்விழி (லண்டன்), மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஆலடி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

# மனிதநேயம் மிக்கவர்களாக மாணவர் உருவாகவேண்டும்

வவு. தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வவுனியா, நவ.14

பாடசாலைகளிலிருந்து வெளியேறுகின்ற மாணவர்கள் இந்த மாகாணத்தை தூக்கி நிமிர்த்தக்கூடியவர்களாக இருக்கவேண்டும்.

இவ்வாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் எம். இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வருடாந்த பரிசளிப்பு, கதிராளி சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பாடசாலை காலங்களிலே மாணவர்கள் ஆற்றிய கருமங்கள், அவர்களுடைய வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்கு உதவுபவையாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாணவனும் அவன் வளர்ந்ததன் பிற்பாடு கல்வி கற்ற கல்லூரியின் தோற்றம், அந்தக் கட்டடம், வகுப்பறை, கற்ற அந்த மேசை கற்பித்த அசிரியர்கள், அதிபர் போன்ற அனைத்தையும் ஞாபகத்தில் வைத்திருக்கக்கூடிய மனப்பாங்கைக் கொண்டவர்களாக அமைய வேண்டும். அவ்வாறாக இருந்தால் அந்தப்பாடசாலை அவனை மகிழ்ச்சிப்படுத்தியதாக இருக்கவேண்டும்.

பாடசாலைகளிலிருந்து வெளியேறுகின்ற மாணவர்களின் இந்த மாகாணத்தை தூக்கி நிமிர்த்தக்கூடியவர்களாக இருக்கவேண்டும். மாணவர்களை மனிதநேயம் மிக்கவர்களாக பாடசாலைகள் வளர்த்தெடுக்கவேண்டும் -என்றார். (ந-21)

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

செல்லையா தங்கவேலு

(ஓய்வுபெற்ற புகையிரத சாரதி-புகையிரத திணைக்களம்)

தோற்றம் 07.04.1936 மறைவு 16.10.2016



கடந்த 16.10.2016 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 31.10.2016திங்கட் கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன.

நாளை (15.11.2016) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக்கிருத்தியம் நடைபெறவிருப்பதால் அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் நேரில் வந்தும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் என்பவற்றின் மூலமும் தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

([illegible] தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

மொட்டைப் புளியடி, உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.
078 491 5566

## பனை வளைகள் பளையில் சிக்கின

யாழ்ப்பாணம்,நவ.14

கிளிநொச்சி பளை, கோவில்வயல் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி தறிக்கப்பட்டு வீட்டு வளைகள் ஆக்கப்பட்ட 65பனம்வளைகள் மீட்கப்பட்டன என்று கிளி நொச்சி மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி தர்சன தெரிவித்தார்

கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர்பாலித்த ஆர் சிறீவர்தனவின் (எஸ்.எஸ்.பி) பணிப்பின் பேரில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் உள்ள பொலிஸார் சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்களை கைது செய்து, நீதிமன்றில் முற்படுத்துகின்றனர்.

கடந்த வியாழக் கிழமை பளை கோவில் வயல் பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி பனைகள் தறிக்கப்பட்டு வளைகள் ஆக்கப்பட்ட நிலையில் 65பனைவளைகளை மாவட்ட ஊழல் தடுப்பு பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்ட பனை மரவளைகள் பளைபொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. அவை நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஊழல் தடுப்பு பொறுப்பதிகாரி தர்சன மேலும் தெரிவித்தார். (ந-21,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை. சென்றாலே வாழ்க்கை என்னும் நிலை இப்போது இல்லை

## வவுனியா மேலதிக மாவட்ட செயலாளர் சுட்டிக்காட்டு

வவுனியா, நவ.14
முன்னர் மாணவர்களின் அடிப்படைத் தேவையாக பல்கலைக் கழகம் மட்டுமே இருந்தது. எல்லா கல்வி முறைகளும் பல்கலைக் கழகத்தை நோக்கியதாகவே இருந்தது. பல்கலைக்கழம் இல்லை என்றால் மாணவர்களுடைய வாழ்க்கை இல்லை என்ற ஒரு நிலைப்பாடு இருந்தது. ஆனால் அந்த நிலைமை இப்போது இல்லை.

இவ்வாறு வவுனியா மேலதிக மாவட்ட செயலாளர் த. திரேஸ்குமார் தெரிவித்தார்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியலாயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பரிசளிப்பு விழா மற்றும் கதிராளி சஞ்சிகை வெளியீட்டில் முதன்மை விருந்தினாரக கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

ஒரு மனிதனுடைய கல்விப் பயணத்திலே பாடசாலையுடைய பங்களிப்பு என்றும் மறக்க முடியாதது. ஒவ்வொரு மனிதனுடையதும் இந்த பாடசாலை பருவம் என்பது மிகவும் முக்கியமானதொன்றாகும். 25 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கல்வி முறைமையும் தற்போது இருக்கின்ற கல்வி முறைமையும் நிறைய மாற்றத்துக்குள்ளாகியிருக்கின்றன.

தொழில்நுட்ப மற்றும் தகவல் தொழிநுட்ப மாற்றங்களால் எங்களுடைய புறச்சூழல் நாளுக்கு நாள் மாறி வருகின்றது. மாறும் சூழலுக்கு ஏற்ற வகையில் எதிர்காலத்தில் எமது சமுதாயத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு எமது பாடசாலை சமூகத்துக்கு இருக்கின்றது. நாங்கள் மாணவர்களாக இருந்தபோது இருந்த கட்டுக்கோப்புக்கும், தற்போது மாணவர்களுக்கு உள்ள கட்டுக்கோப்புக்கும் நிறைய வித்தியாசம் இருக்கின்றது.

நாங்கள் மாணவர்களாக இருந்தபோது, படிப்பும், விளையாட்டுமே பெரிய விடயங்களாக இருந்தன. அந்தக் காலத்திலே பெரிய புறக்காரணிகள் ஒன்றும் பாடசாலை வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தவில்லை. தற்போது தகவல் தொழில்நுட்பத்தின் காரணமாக பல்வேறு புறக்காரணிகள் மாணவர்களின் பாடசாலை வாழ்க்கையிலே செல்வாக்கைச் செலுத்துகின்றன.

இந்தப் புறக்காரணிகள் நன்மையை தருகின்ற அதே வேளை பிழையான வழிகளிலும் மாணவர்களை இட்டுச் செல்கின்றன. அவற்றில் இருந்து அவர்களை மீண்டு எடுத்து பல்கலைக் கழகத்துக்குக் கொண்டு செல்வதும், இந்த மனித சமூதாயத்தில் நற் பிரசைகளாக மாற்றுவதும் ஆசிரியர்களுக்கு இப்போதுள்ள சவலான விடயமாகும்.

ஆசிரியர்கள் தமது பணிகளைச் சிறப்பாகச் செய்து மாணவர்கள் சிறந்த பிரசையாக எதிர்காலத்தில் வருவதற்கு முயற்சிகள் செய்து வருகின்றார்கள் என்பது ஒரு ஆறுதலான விடயம். முன்னர் மாணவர்களின் அடிப்படைத் தேவையாக பல்கலைக்கழகம் மட்டும் இருந்தது. எல்லாக்கல்வி முறைகளும் பல்கலைக்கழகத்தை நோக்கியதாகவே இருந்தன. பல்கலைக் கழம் இல்லை என்றால் மாணவர்களுடைய வாழ்க்கை இல்லை என்ற ஒரு நிலைப்பாடு இருந்தது. ஆனால் அந்த நிலைமை இப்போது இல்லை. பல்கலைக்கழகம் சென்றால் என்ன-செல்லா



விட்டால் என்ன-தமது ஆற்றல்களுக்கேற்ற திறமைகளுக்கேற்ற பல்வேறு துறைகள் தற்போது காணப்படுகின்றன. பல்கலைக்கழகம் சென்றும் எமது தேவைகளை வளர்த்துக்கொள்ள முடியும். பல்கலைக்கழகத்துக்கு வெளியே இருந்தும் எங்களுடைய ஆற்றல்களை வளர்த்துக் கொள்ள முடியும்- என்றார். (ற-21)

## கொடும்பாவி இழுத்து மழை பொழிகின்றது

### தென்மராட்சி விவசாயிகள் மகிழ்ச்சி

தென்மராட்சி, நவ.14
மழை வேண்டி கொடும்பாவி இழுத்ததால் மழை பொழிந்தது என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர் தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்த விவசாயிகள்.

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் உள்ள தனன்களப்பு, அறுகுவெளி மறவன்புலோ பகுதி வயல்களில் ஒரு மாதத்துக்கு முன்னர் பெய்த மழையையடுத்து விதைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. நெல் பயிராகவுள்ள காலப்பகுதியில் மழை பெய்யாததால் பயிர்கள் எரிந்து அழியும் நிலை ஏற்பட்டது. மழை வேண்டி ஆலயங்களில் விசேட வழிபாடுகள் நடத்தியும் மழை பெய்யாததால் மழை வேண்டி கொடும்பாவி இழுக்க விவசாயிகள் ஏற்பாடு செய்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு நெற்செய்கையாளர்கள் ஒன்றிணைந்து மறவன்புலவு தொடக்கம் கேரதீவு வரை ஏ-32 வீதி வழியாக மழை வேண்டி கொடும்பாவி கட்டி இழுத்தனர். நேற்றுக் காலையிலிருந்து விட்டு விட்டு மழை பெய்து வருகிறது எனவும், பயிர்கள் ஓரளவு வளரக் கூடியதாக இருக்கும் என்றும் விவசாயிகள் நம்பிக்கை வெளியிட்டனர்.

நேற்று பகல் கனகன்புளியடி, சரசாலை, மட்டுவில் பகுதியில் சுமார் ஒரு மணி நேரம் தொடர்ச்சியாக பெருமழை பெய்தது. வயல்களில் நீர் தேங்கியுள்ளது என அந்தப் பகுதி நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். வயல்களில் நீரின்றி மஞ்சள் நிறமாகக் காணப்பட்ட நெற்பயிர்கள் மழையுடன் வளர்ச்சியடையும் என்றும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டனர். (ற-9)

## வாளுடன் அடாவடி புரிந்தோரில் ஒருவர் பொலிஸாரிடம் சரண்

மட்டுவில், நுணாவில் பகுதிகளில் வாள்கள், கோடரிகளுடன் அட்டகாசம் புரிந்தவர்களில் மேலும் ஒருவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

நுணாவில் மற்றும் மட்டுவில் பகுதியில் கடந்த 6ஆம் திகதி மாலை பத்து மோட்டார் சைக்கிள்களில் வந்த 20 பேர் வாள்கள் மற்றும் கோடரிகளுடன் அட்டகாசம் புரிந்தனர். பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து பொலிஸார் அங்கு சென்றபோது அவர்கள் தப்பியோடினர்.


அவர்கள் கைவிட்டுச் சென்ற வாள், கோடரி போன்றவை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் கடந்த 10ஆம் திகதி ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட வேளையில் மேலும் இருவர் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் சரணடைந்தனர். மூவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியிலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கருதப்படும் மற்றொரு நபர் சாவ கச்சேரி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். பொலிஸார் குறித்த நபரை நேற்று நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். குறித்த நபரையும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். கடந்த தீபாவளி தினத்தன்று கைதடி மற்றும் மட்டுவில், நுணாவில் பிரதேச இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் தொடர்ச்சியாகவே ஒரு பகுதியினர் வாள்களுடன் அட்டகாசம் புரிந்தனர் என்று கூறப்படுகின்றது. (ற-21,9)

## வணங்கிய பாம்பை அடிக்க முயற்சி மயக்கமுற்று விழுந்தார் பெண்

### வவுனியாவில் சம்பவம்

வவுனியா, நவ.14
வீட்டில் வளர்க்கப்பட்ட நாயை கொன்ற வெள்ளை நிற நாக பாம்பை வீட்டின் உரிமையாளர் அடிக்க முற்பட்டுள்ளார்.



அந்தப் பாம்புக்கு பால்வைத்து வணங்கி வரும் அவருடைய மனைவி மயக்கமுற்று நிலத்தில் வீழ்ந்தார். இந்த சம்பவம் நேற்றுமுன்தினம் வவுனியாவில் இடம்பெற்றது. வேப்பங்குளம் 5ஆம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

குறித்த வீட்டின் பூசை அறைக்கு நேற்றுமுன்தினம் காலை வெள்ளை நிறப் பாம்பு ஒன்று வந்துள்ளது. அதற்கு பால் வைத்து வீட்டிலிருந்த பெண் பாம்பை வணங்கினார். இது இடம்பெற்ற சிறிது நேரத்தில் வீட்டில் வளர்க்கப்பட்ட நாய் வாயில் நீர் வழிந்த நிலையில் திடீர் என இறந்தது. பாம்பு தீண்டியே நாய் இறந்துள்ளது என்று அயலவர்கள் கூறினர். வேலைக்கு சென்று வீடு திரும்பிய கணவனிடம் குறித்த பெண் நடந்தவற்றைக் கூறினார்.

கணவன் அயலவர்களை அழைத்து பாம்பை அடிப்பதற்கு முயற்சித்தார். அதை பார்த்த பெண் திடீர் என மயக்கமுற்று நிலத்தில் வீழ்ந்தார். பின்னர் பல மணிநேர போராட்டத்தை அடுத்து குறித்த பாம்பு பிடிக்கப்பட்டு பம்பைமடுக் காட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு விடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. மயக்கமுற்ற பெண்ணுக்கு நீர் தெளித்து அயலவர்கள் அவரை மயக்கத்திலிருந்து விடுவித்தனர். (ற-21)

## மரண அறிவித்தல்கள்

### விமலதாஸ் டயாகன்

(மாணவன் - வ/தமிழ் மத்திய மகாவித்தியாலயம்)



வவுனியா பெரிய கோமரசன் குளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விமலதாஸ் டயாகன்(மாணவன் - வ/ தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) கடந்த (12.11.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(14.11.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் யாழ் மணியந்தோட்டம் கர்த்தர் ஆலயத்தில் திருப்பலி நடைபெற்று பின்னர் பூதவுடல் யாழ்.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

142, 5ஆம் குறுக்கு,
மணியந்தோட்டம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(J 6103)
(14.18.21)

தகவல்:
விமலதாஸ்(பாலா)

### சுப்பிரமணியம் கேதீஸ்வரன்



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி (St Wendel) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கேதீஸ்வரன்10.11.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற லிகிதர் - கமநல சேவைகள் திணைக்களம் - மன்னார்)- கோமளாம்பாள் தம்பதியரின் மூத்த புதல்வனும் புவனராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற செங்கமலாசனி மற்றும் ஜெகதீஸ்வரி (ஜேர்மனி), மோகனாங்கி(ஜேர்மனி), தவறாஜேஸ்வரன் (பிரான்ஸ்), கிருபாகரன் (உப தபாலகம் - ஆனைக்கோட்டை), நளாயினி (ஆசிரியை, யா/சுதுமலை அ.த.க பாடசாலை), மாலினி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற காசிபதி மற்றும் துரைசிங்கம், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் யோகநாதன், சரசலாதேவி, பரமநாதன், ஶ்ரீறதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ரமணன் (ஆசிரியை - யா/ இணுவில் மத்திய கல்லூரி), ஜெயந்தி,விஜிதா, விமல் (HNB-Assurance), றஜிதா(கிராம சேவகர் மானிப்பாய் தெற்கு) , அனித்தா, ஜென்சிகா, ஜெயானி, சஸ்தியா, யதுகுலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கலைச்செல்வி, மதிபாலன்,தயாகரன், உதயசீலன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.11.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஜேர்மனியில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
" செந்தில் பதி" திருமதி கா.புவனராணி, துரைசிங்கம்
ஆனைக்கோட்டை. திருமதி பரமநாதன், கிருபாகரன்

077 400 3410

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 14

**மனோகராவின் கால்பந்தாட்டம்**

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து நவசக்தி அணி மோதவுள்ளது.

**ஐக்கியத்தின் கபடித் தொடர்**

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கபடித் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய 'பி' அணியை எதிர்த்து வல்வை'ஏ' அணியும்தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் 'பி' அணியை எதிர்த்து பருத்தித்துறை சித்திவிநாயகர் அணியும் மோதவுள்ளன.

**சென். ஜேம்ஸின் கால்பந்தாட்டம்**

ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி மைதானத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. புங்குடுதீவு பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி மோதவுள்ளது.

**13 வயதினருக்கான அரையிறுதியாட்டம்**

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 13 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள் பிரிவு அரையிறுதி ஆட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது. சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில் ஓமந்தை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா முஸ்லிம்மகாவித்தியாலய அணி மோதவுள்ளது.(ம-422-108-23)



# தெ. ஆபிரிக்காவின் வெற்றிக்கு இடையூறு கொடுக்கிறது மழை

ஆஸ்திரேலியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று மழை காரணமாக ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முடிவடைந்த முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றிபெற்றது. இதனால் தொடரில் தனது இருப்பைத் தக்கவைக்க வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடியில் ஆஸ்திரேலியா இருந்தது. மாறாக தென்னாபிரிக்கா வெற்றிபெற்றால் மூன்றாவது ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணம் அந்த அணியிடமே சென்றுவிடும்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. 85 ஓட்டங்களில் சுருண்டது ஆஸ்திரேலியா. அதிகபட்சமாக சிமித் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பிளண்டர் 5 இலக்குகளையும், அப்பொட் 3 இலக்குகளையும், ரபாடா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி முதல் நாள் முடிவில் 171-5 என்றிருந்தது. பவுமா 38 ஓட்டங்களுடனும், குயின்டன் டி ஹொக் 28 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று தென்னாபிரிக்கா பலமான முன்னிலை பெறும் என்று எதிர்பார்க்கையில் அதிகரித்த மழை காரணமாக ஒரு பந்துகூட வீசப்படாத நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டது. மிகப் பெரும் பின்னடைவை சந்தித்த ஆஸ்திரேலியாவுக்கு ஒரு முழுநாள், மழை காரணமாகக் கைவிடப்பட்டமையானது பெரும் சாதகமாகப் பார்க்கப்படுகிறது. (ம)

## ரோகித் சர்மாவுக்கு அறுவைச் சிகிச்சை



இந்திய அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரரான ரோகித் சர்மாவுக்குதொடைப்பகுதியில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. நியூசிலாந்து அணி இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரிலும், ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரிலும் விளையாடியது. இந்திய அணியின் அதிரடி வீரரான ரோகித் சர்மா இந்த இரு வகைத் தொடரிலும் முழுமையாக விளையாடினார். ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் காயமடைந்தார். ஐந்தாவது ஆட்டத்தில்வெற்றி பெறும் அணியே கிண்ணத்தைக் கைப்பற்றும் என்பதால் அந்த ஆட்டத்திலும் ரோகித் களமிறக்கப்பட்டார். இதனால் அவரது காயம் பெரிதடைந்தது. காயத்தைப் பரிசோதித்த மருத்துவக் குழு, அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியது. அறுவைச் சிகிச்சைக்காக இங்கிலாந்துக்குச் சென்ற அவருக்கு தற்போது சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 13 முதல் 15 வரையிலான வாரங்கள் ஓய்விலிருக்க வேண்டும் என்று இங்கிலாந்து மருத்துவக் குழு தெரிவித்தது. (ம)

## 13 வயதுக்குட்பட்ட அணிகளின் காலிறுதிகள்

யாழ்ப்பாணம், நவ. 14

யாழ். மாவட்ட பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் 13 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தின் காலிறுதியாட்டங்கள் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று நடைபெறவுள்ளன.

காலை 8.30 மணி முதல் ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும், தொடர்ந்து நடைபெறும் ஆட்டங்களில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஏழாலை சிறி முருகன் அணியும் மணற்காடு றோ.க.த.க. பாடசாலை அணியை எதிர்த்து நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை அணியும் மோதவுள்ளன. (ம-422-108)

## செட்டிகுளம் ம.வி. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், நவ. 14

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 13 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆட்டங்களில் ஆண்கள் பிரிவில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த அரையிறுதியாட்டம் இடம்பெற்றது. செட்டிகுளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து மூன்று முறிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணி மோதியது. இதில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(ம-23)

## நிர்வாகத் தெரிவு

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும் இன்று நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் சி.சண்முகலிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் காலை 10 மணிக்கு கூட்டம் நடைபெறும். ஒவ்வொரு கழகத்திலிருந்தும் இரண்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ள முடியும் என சங்கத்தினர் அறிவித்தனர். (ம)

## சமியை எதிர்கொள்ள பெரும் சிரமப்பட்டேன்

இந்தியாவுக்கு எதிராக நடைபெற்று முடிந்த முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில், இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான சமியின் பந்துவீச்சை எதிர்கொள்ள தான் பெரும் சிரமப்பட்டார் எனத் தெரிவித்தார் இங்கிலாந்தின் சகலதுறை வீரரான மொயின் அலி.

நாயணச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 537 ஓட்டங்களைக் குவித்தது.

மொயின் அலி 117 ஓட்டங்களைக் குவித்தார். மொகமட் சமியின் பந்துவீச்சில் போல்ட் செய்யப்பட்டு வெளியேறினார். இதனையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மொயின் அலி இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவுக்கு எதிராக இந்திய மண்ணில் வைத்து சதமொன்றைப் பெற்றது திருப்தி.

நாங்கள் எண்ணியதைப்போல் பந்துவீச்சு அச்சுறுத்தவில்லை. சாமாளிக்கக்கூடிய விதத்திலேயே சுழல்கள் இருந்தன. ஆனால் மொகமட் சமி மிகவும் அச்சுறுத்தினார். ஒவ்வொரு பந்திலும் அவர் நெருக்கடி கொடுத்தார். இந்தியாவின் ஆகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக அவரைக் கருதுகிறேன். அவரது பந்துகளை எதிர்கொள்வது எனக்குக் கடினமாக இருந்தது என மொயின் அலி மேலும் தெரிவித்தார். (ம)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முத்தரப்புத் தொடர் இன்று ஆரம்பம்

இலங்கை, சிம்பாப்வே; மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.
சிம்பாப்வேயின் ஹராரே மற்றும் குயின்ஸ் மைதானங்களில் தொடரின் ஆட்டங்கள் அனைத்தும் நடைபெறவுள்ளன. இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் சிம்பாப்வே, இலங்கை அணிகள் மோதவுள்ளன.
நாளை மறுதினம் இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், எதிர்வரும் 19ஆம் திகதி மேற் கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே எதிர்வரும் 21 ஆம் திகதி சிம்பாப்வே, இலங்கை, எதிர்வரும் 23 ஆம் திகதி இலங்கை-மேற்கிந்தியத் தீவுகள், எதிர்வரும் 25 ஆம் திகதி சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.
இலங்கை அணியின் தலைவர் மத்தியூஸ், துணைத்தலைவர் சந்திமல் இருவரும் காயம் காரணமாக விலகியதன் காரணமாக தரங்க தலைவராகச் செயற்படவுள்ளார்.
இலங்கை அணி விவரம் - தரங்க (தலைவர்), டிக்வெல்ல, அசல குணரத்ன, நுவான் குலசேகர, லக்மல், பதிரண, சன்டகன், வண்டர்சே, தனஞ்சய டி சில்வா, நுவான் பிரதீப், செகான் ஜெயசூர்ய, லகிரு குமார, குசல் மெண்டிஸ், குசல் பெரேரா, டசுன் சானக. (ம)





# ஆஸ்திரேலியாவை அறியாதவர் கிரேம்

## ஸ்ரீவ் சிமித் பதிலடி

ஆஸ்திரேலிய அணியைப் பற்றியும் அதன் வளர்ச்சி மற்றும் ஆளுமைத் திறன் என்பன பற்றியும் கிரேம் சிமித் அறியாதவர் என ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்ரீவ் சிமித் விமர்சித்தார்.
ஆஸ்திரேலிய அணியின் அண்மைக் காலத் தோல்விகளை அடுத்து கிரேம் சிமித் சில விமர்சனங்களை முன்வைத்திருந்தார். ஆஸ்திரேலிய அணி பெரும் குழப்பத்தில் உள்ளது. தொடர் தோல்விகள் மூலம் தன்னம்பிக்கையை இழந்துள்ளது. என்னைப் பொறுத்தவரை ஆஸ்திரேலிய அணிதிறமை என்ற காரணியைக்கொண்டு கட்டப்பட்டதாகும். மேலும் கடினமாக ஆடுவது என்ற பண்பாட்டின் அடிப்படையில் கட்டமைக்கப்படும் அணியாகும். ஆனால் தற்போது இந்த நிலையை ஆஸி இழந்துள்ளது என்றே எனக்குப் புலப்படுகிறது. ஸ்ரீவ் சிமித் தலைமைத்துவத்தில் தடுமாறுகிறார். அவர் தனது அணுகுமுறைகளை மாற்றாவிட்டால் இன்னும் சில தோல்விகளைச் சந்திக்க வேண்டிவரும் என கிரேம் சிமித் தெரிவித்திருந்தார். அவரது இந்தக் கருத்துக்களுக்கு ஸ்ரீவ் சிமித் பதிலடி கொடுத் துள்ளார்.
ஆஸ்திரேலிய கிரிக்கெட் பற்றி கிரேம் சிமித்திற்கு என்ன தெரியும் என்பது எனக்குத் தெரியவில்லை. அவர் இதில் ஈடுபட்டதில்லை. அணி தற்போது நல்ல இடத்தில்தான் உள்ளது.
எங்கள் கிரிக்கெட் பண்பாடு சரியாகத்தான் உள்ளது. சீராக முன்னேற்றம் உள்ளது இன்னும் நன்றாகி வருகிறது. நாங்கள் பிணைப்புக் கொண்ட ஒரு அணியாக திகழ்கிறோம், வெற்றிப்பாதைக்கு இந்த வாரத்தில் திரும்புவோம். நான் நிறைய விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறேன், அணி தோற்கும் போது இத்தகைய விமர்சனங்கள் எழுவது இயல்பானதே என ஸ்ரீவ் சிமித் தெரிவித்தார். (ம)

# நீக்கப்பட்டார் டேரன் பிராவோ

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் எதிர்கால நட்சத்திர வீரராக வளர்ந்து வந்த டேரன் பிராவோ, குறித்த கிரிக்கெட் சபையின் தலைவருடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து இன்று ஆரம்பமாகும் முத்தரப்புத் தொடருக்கான அணியிலிருந்து நீக்கப்பட்டார்.
மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை வீரர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் தொடர்பான விவரம் அண்மையில் வெளியிடப்பட்டது. டேரன் பிராவோ 'சி' பிரிவில் இடம்பிடித்தார். "டேரன் பிராவோ 'ஏ' பிரிவில் இடம் பெறும் அளவுக்கு திறன் உள்ளவர்" என நான் கருதவில்லை என்று தீவுகள் கிரிக்கெட் சபையின் தலைவர் டேவ் கமரூன் தெரிவித்தார்.
இதற்கு பதிலடியாக, 'கடந்த 4 ஆண்டுகளாக நீங்கள் ஒரு தோல்வியடைந்த தலைவராக இருக்கிறீர்கள். எனக்கு ஏ கிரேடு கிடையாதா. மிகப்பெரிய முட்டாள், நீங்கள் ஏன் பதவி விலகக்கூடாது' என்று டேரன் சாடியிருந்தார்.



இதனையடுத்து இன்று ஆரம்பமாகின்ற இலங்கை, சிம்பாப்வே, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரிலிருந்து டேரன் பிராவோ நீக்கப்பட்டார். பதில் வீரராக ஜேசன் மொகமட் சேர்க்கப்பட்டார். (ம)

# யாழ். மாவட்ட அணிகள் முதல் சுற்றுடன் வெளியே

யாழ்ப்பாணம், நவ. 14
மஞ்சி கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத்தில் பளை அதிசயம் அணி மூன்றாவது சுற்றுடனும் யாழ். மாவட்ட அணிகள் முதலாவது சுற்றுடனும் வெளியேறின.
கொழும்பு மகரகம இளைஞர் சேவை மன்ற மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
இதில் நேற்று நடைபெற்ற மூன்றாவது சுற்றில் பளை அதிசயம் அணியை எதிர்த்து இலங்கை இராணுவ அணி மோதியது.
இதில் பளை அதிசயம் அணி 17:25, 13:25, 15:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் மூன்று செற்களையும் இழந்து நேர் செற் தோல்வியடைந்து வெளியேறியது.
குறித்த தொடரில் ஆண்கள் பிரிவில் பங்குபற்றிய யாழ். மாவட்ட அணிகளான ஆவரங்கால் இந்து இளைஞர் அணி, ஆவரங்கால் மத்தி அணி ஆகியனவும், பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை ஐக்கிய அணி, கோப்பாய் ஹரிஸ் அணி ஆகியனவும் முதலாவது சுற்றுடன் வெளியேறின. (ம-422)

# ஆஸியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார் ஹரிஸ்

ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக றயன் ஹரிஸ் நியமிக்கப்பட்டார்.
அடுத்தாண்டு ஆரம்பத்தில், நியூசிலாந்து அணிக்கும் ஆஸ்திரேலிய அணிக்கும் இடையில் இடம்பெறவுள்ள சப்பல் - ஹட்லி தொடரில், ஆஸ்திரேலிய அணியின் பயிற்றுவிப்புக் குழாமில், அந்த அணியின் முன்னாள் வீரரான றயன் ஹரிஸ் சேர்க்கப்பட்டார். பந்துவீச்சுப் பயிற்சியாளராகவே அவர் அணியில் இணைக்கப்பட்டார். (ம)






மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் நன்னடத்தை அணிக்கான விருதினை திக்கம் யுத் அணி பெற்றுக்கொண்டது. குறித்த தொடரில் நடப்பு வருடத்திலேயே இந்த விருது முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொலார்ட்டுக்கு அனுமதி

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் உள்ளூர் ரி-20 தொடரில் மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரரான பொலார்ட் களமிறங்க அனுமதி வழங்கப்பட்டது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் உள்ளூர் தொடரில் கேப் கோப்ராஸ் அணிக்காக விளையாட பொலார்ட் ஒப்பந்தமாகியிருந்தார். மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபை, தனது வீரர் ஒருவர் வேறு நாடுகளின் கழகமட்ட கிரிக்கெட் தொடர்களில் விளையாட வேண்டுமாயின் அவர்களுக்கு வழங்கப்படும் ஒப்பந்தத் தொகையில் 20 சதவீதத்தை தனக்கு இலாபமாகப் பெறுகிறது. இந்த நிபந்தனைக்கு தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை உடன்படவில்லை. இதன் காரணமாகவே குறித்த தொடரில் பொலார்ட் இடம்பெறுவதில் சிக்கல்கள் எழுந்திருந்தன. இந்த விவகாரத்தில் இரு தரப்புக்கும் இடையில் தற்போது இணக்கப்பாடு ஏற்பட்டதை அடுத்து பொலார்ட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

பன்னாட்டு ஆட்டங்களில் விளையாடும் வீரர்கள் ஏனைய நாடுகளின் கழக மட்டப் போட்டிகளில் விளையாட வேண்டுமாயின், தனது நாட்டுக் கிரிக்கெட் சபையின் அனுமதிச் சான்றிதழைப் பெற வேண்டியது அவசியமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இந்தியா – இங்கிலாந்து டெஸ்ட் சமநிலையில் முடிந்தது ஆட்டம்

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் ராஜ்கோட் மைதானத்தில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அலிஸ்டர் குக் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். 517 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸ் முடிவு கண்டது. பந்துவீச்சில் ஜடேயா மூன்று இலக்குகளையும், யாதேவ், அஸ்வின், சமி மூவரும் தலா இரு இலக்குகளையும், மிஸ்ரா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 488 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக முரளி விஜய் 126 ஓட்டங்களையும், புஜாரா 124 ஓட்டங்களையும், அஸ்வின் 70 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ரசிட் 4 இலக்குகளையும், மொயின் அலி, அன்சாரி இருவரும் தலா இரு இலக்குகளையும், புரோட், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

49 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 114 ஓட்டங்களைப் பெற்றது. ஹமீட் 62 ஓட்டங்களுடனும், குக் 46 ஓட்டங்களுடனும் ஆட்டத்தின் இறுதி நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 82 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹமீட். ஹமீட்டை வெளியேற்றிய மிர்ஸா, ரூட்டையும் வெளியேற்றினார். மறுமுனையில் சதம் கடந்தார் குக். சதம் கடந்த பிற்பாடு அடித்தாடவும் செய்தார். 130 ஓட்டங்களுடன் அலிஸ்டர் குக்கை வீழ்த்தினார் அஸ்வின். 260-3 என்ற நிலையில் இருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தியது இங்கிலாந்து.

இந்தியாவுக்கு இலக்காக 310 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. 50 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருந்தன. ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார் கம்பீர். வீழ்த்தியவர் வோக்ஸ். புஜாரா 18 ஓட்டங்களுடனும், முரளி விஜய் 3[illegible] ஓட்டங்களுடனும் வீழ்த்தப்பட்டனர். ரகானேயால் முடிந்தது ஓர் ஓட்டம் மட்டுமே. மொயின் அலி போல்ட் செய்தார். ரகானே ஆட்டமிழந்தபோது இந்தியா 71-4 என்றிருந்தது. கிட்டத்தட்ட 30 பந்துப்பரிமாற்றங்கள் மீதமிருந்தன. கோக்லி, அஸ்வின் இணைந்து மிகவும் நிதானித்தனர். ஆட்டத்தை சமநிலையில் முடிக்கக்கூடிய நம்பிக்கையை வழங்கினர். அஸ்வின், சகா ஆட்டமிழந்தாலும் தொடர்ந்தும் நிலைத்துநின்று ஆட்டத்தை சமநிலையில் முடித்தார் கோக்லி. (ம)

## செட்டிகுளம் ம.வி. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், நவ. 14

இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 13 வயதுக்குட்பட்ட பிரிவினருக்கான தொடரில் வவுனியா மாவட்டத்தில் பெண்கள் பிரிவில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணி சம்பியனானது.

வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. பூவரசங்குளம் மகாவித்தியாலய அணியை எதிர்த்து செட்டிகுளம் மகா வித்தியாலய அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவுவரை இரு அணியினரும் கோலெதனையும் பதிவுசெய்யவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் செட்டிகுளம் மகா வித்தியாலய அணி வெற்றி பெற்றது. (ம-23)

கார்கள் வான்கள் வாடகைக்கு

| Type | Colour | Price (Perday) |
|---|---|---|
| Premio car | White | 6,000 |
| Axio car | White | 5,000 |
| N-15 car | White | 3,000 |
| TATA Indico car | Blue | 2,500 |
| DAEWOO car | Black | 2,000 |
| KDH van | White | 6,000 |

கிழமை, மாதாந்த வாடகைகளுக்கு கட்டணம் மேலும் குறைக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 3777502

## இங்கிலாந்து அணியுடன் தொடர்கிறார் சக்லைன்

இங்கிலாந்து அணியின் பந்துவீச்சு ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்த சக்லைன் முஸ்தாக்கின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டது.

ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு சென்றுள்ளது. முதல் டெஸ்ட் ஆட்டம் நேற்று நிறைவடைந்தது. இந்திய ஆடுகளங்கள் சுழலுக்கு சாதகமாக அமையும் என்பதால் இந்தத் தொடரில் இங்கிலாந்து அணியின் பந்துவீச்சு ஆலோசகராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழல் வீரர் முஸ்தாக் நியமிக்கப்பட்டார். இன்னும் சில நாள்களில் அவருடன் செய்த ஒப்பந்தம் முடிவுக்கு வரவிருந்த நிலையில் தற்போது அவரின் ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்தது. (ம)





போர்த்துக்கல், லற்வியா அணிகளுக்கு இடையிலான ஆட்டமொன்று நேற்று இரவு நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்காக போர்த்துக்கல் அணியின் தலைவர் ரொனால்டோ நேற்று முன்தினம் கடும் பயிற்சியில் ஈடுபட்டார். (ம-எ)

by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.